
# அதிர்வுகள் - 03



செ. அன்புராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிர்வுகள் – 03

செ. அன்புராசா

முருங்கன் முத்தமிழ்க் கலாமன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அதிர்வுகள் – 03**
ஆசிரியர்: செ. அன்புராசா
பதிப்புரிமை: © செ. அன்புராசா
வெளியீடு: முருங்கன் முத்தமிழ்க் கலாமன்றம்
முதற்பதிப்பு: 2020 மார்கழி 30
நூல்வடிவம்: ஜே. எஸ். பிறின்ரெஸ்
பக்கங்கள்: xii+ 119
விலை: ரூ. 300
ISBN: 978-955-4609-12-9

**Athirvukal - 03**
Author: S. Anpurasa
Copy write: © All rights reserved to the author
Publication: Murunkan Muththamil Kalamandram
1st Edition: 2020 December 30
Layout & Design: J. S. Printers
Pages: xii+ 119
Price: Rs. 300
ISBN: 978-955-4609-12-9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரின் அதிர்வுகள்-02 நூலில் பலதுறை சார்ந்த விடயங்களைக் கூறியுள்ள போதிலும் வடபுலத்தில் போருக்குப் பின்னர் எழுந்துள்ள சமூகப் பிரச்சினைகளான போதைப் பொருள்பாவனை, அதிகரித்துவரும் மதுப்பாவனை, நுண்நிதி நிறுவனங்களால் நொந்துபோகும் நிலை போன்றவற்றை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட கட்டுரைகள்: சமூக நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கும் மக்களுக்கு ஒரு மனத்திடத்தினை வழங்குவதாக அமைந்துள்ளன. இந்நூ லிலுள்ள ஏனைய கட்டுரைகள் கல்வி, ஆளுமை, அரசியல், ஆன்மீகம், சிறுவர் பெண்கள் சார்ந்தவை. இக்கட்டுரைகள் யாவுமே மனித விழுமியங்களை ஆற்றுப்படுத்துபவையாக அமைந்துள்ளன.

ஆசிரியரின் இந்த மூன்று நூல்களுமே (அதிர்வுகள் - *01, 02, 03*) சமூகநலன் பற்றிய அக்கறையோடும் சொந்த மண்பற்றிய நேசிப்போடும் எழுதப்பட்ட கட்டுரைகளாகும். இவை, சமுதாயம் என்னும் தளத்தில் நின்று மானிடத்தைப் பலகோணங்களில் நோக்கிப் புனையப்பட்டவை.

ஆசிரியரது படைப்பாற்றல் பற்றியும் இங்கு குறிப்பிடுதல் வேண்டும். நல்ல கருத்துக்களைப் பிரதிபலிப்பதால் ஒரு படைப்பு தரமாகிவிடுவதில்லை. நல்ல கருத்தை நல்ல கலையழகோடு பிரதிபலிப்பதுதான் நல்ல கட்டுரை. ஆசிரியது வெளியீட்டு முறைமை சிறப்பானது. ஆற்றொழுக்குப் போன்ற மொழிநடை, கலைத்துவமான உவமைகள், கருத்துச் செறிவு, வன்மையான முனைப்புடன்கூடிய இடித்துரைப்பு அரசியல், சிந்தித்துப் புரிந்து கொள்ளவேண்டிய தத்துவங்கள், பொருத்தமான உபகதைகள் போன்றவை அவரது கட்டுரைகளுக்குச் சிறப்புச் சேர்க்கின்றன. ஆசிரியரின் பணி மென்மேலும் சிறக்க நல்வாழ்த்துக்கள்.

**தி. ஞானசேகரன்**
ஞானம் பணிமனை
3-B, 46 ஆவது ஒழுங்கை,
கொழும்பு-06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

## பலராலும் விரும்பிப் படிக்கப்பட்ட கட்டுரைகள்

2011ஆம் ஆண்டிலிருந்து 2019ஆம் ஆண்டுவரை ஏறக்குறைய எட்டு ஆண்டுகள் அதிர்வுகள் என்ற தலைப்பில் மாதந்தோறும் மன்னாரிலிருந்து வெளிவரும் மன்னாப் பத்திரிகையில் கட்டுரைகளை எழுதி வந்தேன். சில கட்டுரைகள் உதயன் பத்திரிகையிலும் வெளிவந்தன.

இவ்வாறு கட்டுரைகளாக வெளியானவை 2014இல் அதிர்வுகள்-01, 2019இல் அதிர்வுகள்-02 என இரு நூல் களாக வெளிவந்துள்ளன. இப்போது, நிறைவாக ஏனைய பதின்மூன்று கட்டுரைகள் அதிர்வுகள்-03 என்ற தலைப்பில் வெளிவருகின்றது.

அதிர்வுகள்-01இல் முப்பத்துமூன்று கட்டுரைகளும், அதிர்வுகள்-02இல் முப்பத்தாறு கட்டுரைகளும் வெளிவந்த நிலையில் அதிர்வுகள்-03 என்ற இந்நூலில் பதின்மூன்று கட்டுரைகளும் வெளிவருகின்றன.

தொடர்ச்சியாக இவை எழுதப்பட்டதால் தொடர் இலக்கங்களிலேயே இந்நூல்களின் கட்டுரைகள் காணப் படுகின்றன. அதாவது அதிர்வுகள்-01 (01-33), அதிர்வுகள்-02 (34-69), அதிர்வுகள்-03 (70-82) எனக் கட்டுரைகளின் எண்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

இக்கட்டுரைகள் பல திறத்தாராலும் தரத்தாராலும் படிக்கப்பட்டவை என்பதைக் கிடைக்கப்பெற்ற பின்னூட்டல் களில் இருந்து அறிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது. அந்தளவிற்கு இவை பலருடைய கவனத்தையும் ஆர்வத்தையும் ஈர்த்திருக்கின்றது என்பதை எண்ணுகின்றபோது உண்மையில் இக்கட்டுரைகள் எழுதப்பட்டதன் நோக்கத்தை நிறைவு செய்திருக்கின்றது. அதற்குக் காரணங்கள் பலவுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றில் முக்கியமான ஒரு காரணம், கட்டுரை என்றால் அதனை மேலோட்டமாகப் பார்க்கும் நிலையிலிருந்து கூர்ந்து, உன்னிப்பாக, ஆர்வத்தோடு படிக்கும் அளவுக்கு இரசனை உள்ளதாக, இலக்கியத்தரம் வாய்ந்ததாக எழுதவேண்டும் என்ற எண்ணத்தோடு பல வகையான யுக்திகளைப் பயன்படுத்தி இவை ஆக்கப்பட்டவை ஆகும். அதனால், இக்கட்டுரைகளைப் பலரும் விரும்பிப் படித்தார்கள் - இனியும் படிப்பார்கள். மேலும், பல்வேறுபட்ட கருப்பொருள்களைக் கொண்டதாக இக்கட்டுரைகள் ஆக்கப்பட்டுள்ளன.

தனிமனித ஆளுமை சார்ந்த ஐந்து கட்டுரைகளும் சமூகம் சார்ந்த நான்கு கட்டுரைகளும் அரசியல் சார்ந்த நான்கு கட்டுரைகளும் என இந்நூலில் பதின்மூன்று கட்டுரைகள் உள்ளன. தனிமனித வளர்ச்சி, முதிர்ச்சி முக்கியமானது. அதுபோல சமூக அக்கறையும் சமூக வளர்ச்சியும் முக்கியமானதே. அதேபோல அரசியல் அறிவும் அரசியல் ஈடுபாடும் அவசியமும் முக்கியமும் ஆனதே. இவற்றை மையப்படுத்தியதாகவே ஒவ்வொரு காலப்பகுதியினுடைய தேவைகருதி இக்கட்டுரைகள் படைக்கப்பட்டன.

பத்திரிகைகளில் எழுதப்பட்ட இக்கட்டுரைகள் தேவையான மாற்றங்களுடனும் திருத்தங்களுடனும் வெளிவருகின்றன. இம்மாற்றங்கள் வாசகர்கள் இவற்றைப் படிக்கத் தூண்டுவதாக இருப்பதோடு புதுப்பொலிவையும் தருகின்றன.

இந்நூலிலுள்ளதும் ஏனைய அதிர்வுகள்-01, அதிர்வுகள்-02 ஆகிய நூல்களிலுள்ள பல கட்டுரைகள் எக்காலத்திலும் படித்துப் பயன்பெறக் கூடியவையாக இருப்பது இந்நூலின் - நூற்களில் பெறுமதியை இன்னுமொரு படி உயர்த்தி நிற்கின்றது.

இந்நூலை வாசித்து பெறுமதியான உரையை வழங்கிய ஞானம் சஞ்சிகையின் ஆசிரியர், மருத்துவர் தி. ஞானசேகரன் அவர்களுக்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றிகள் உரித்தாகுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலை ஒப்புநோக்கி திருத்தங்களை மேற்கொண்ட ஓய்வுநிலை ஆசிரியரும் சித்தாந்தப் புலவரும் பண்டிதருமான ம. ந. கடம்பேசுவரன், அருள்சகோதரி ஜொயிஸ் மாறி, அ.கா. ஆகியோருக்கும் என் மனம் நிறைந்த நன்றிகள்.

மேலும், அதிர்வுகள்-01, அதிர்வுகள்-02, அதிர்வுகள்-03 ஆகிய நூல்களின் கட்டுரைகளை எழுத ஊக்கத்தையும் களத்தினையும் அமைத்துத்தந்த அருள்பணி தமிழ்நேசன் அடிகளாருக்கும் என் உள்ளம் நிறைந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

இன்னும், நூலை அழகுற கணனியில் வடிவமைத்து அச்சேற்றிய மே. லிகான், ஜே. எஸ். பிறின்ரஸ் ஆகியோருக்கும் என் மனமார்ந்த நன்றிகள்.

நிறைவாக, இக்கட்டுரைகளைப் படித்து நிறைந்த பலன்பெறுவீர்கள் என்பதோடு ஒவ்வொரு கட்டுரையும் உங்களை உத்வேகம் கொள்ளச் செய்யும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

**செ. அன்புராசா**
87, அன்னை இல்லம்
கிளிநொச்சி
anpuomi1970@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

கலைத்தூதனாய்,
கடவுளின் தூதனாய் வாழ்ந்து
'கலைவழி இறைபணி' புரிந்த
திருமறைக்கலாமன்ற நிறுவுநர்
நீ. மரிய சேவியர் அடிகளாருக்கு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்

**தனிமனித ஆளுமை சார்ந்தவை**


70. உயிரை மாய்க்க எவருக்கும் உரிமையில்லை! 01
71. குப்பைகளை நீக்க வழி அவற்றை அகற்றுவதுதான்! 09
72. நம்தமிழ் வாழவும் வேண்டும் நாம் அதனை வளர்க்கவும் வேண்டும்! 17
73. உணவுக்கு உப்புப்போல உறவுக்கு நட்பு! 26


**சமூகம் சார்ந்தவை**


74. மரணமும் மறைபொருளே! 34
75. நாய்களும் நாங்களும்! 44
76. இயற்கையை மதிக்காவிட்டால் அது நம்மை மிதிக்கும்! 55
77. தண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு! 64
78. கல்வி அடைவு மட்டத்தினை அதிகரிக்க! 73


**அரசியல் சார்ந்தவை**


79. வாக்களிப்பிலிருந்து விலகி வாக்காளர் தவறிழைக்கக் கூடாது! 81
80. புலிக்கதை தொடரப்போகிறது! 91
81. உயிர்த்த ஞாயிறு மாணிடம் மரித்த ஞாயிறா! 100
82. உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புப் பின்னணியில் நடப்பதென்ன! 112




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

**சமூகநலன், சொந்த மண்பற்றிய நேசிப்போடு எழுதப்பட்ட கட்டுரைகள்**

அருட்பணியாளர் செ. அன்புராசா அவர்களது அதிர்வுகள் நூல்வரிசையில் மூன்றாவது நூல் இது. ஏற்கனவே வெளிவந்த அதிர்வுகள் நூல்கள் இரண்டும் வாசகரிடையே பெரும் பாராட்டைப் பெற்றவை. பொருளடிப்படையில் இந்த மூன்று நூல்களுமே பல்துறை சார்ந்தவை. மானுடவியல், சமூகவியல், உளவியல், அரசியல், அறிவியல், இறையியல் என அவை விரியும்.

இந்த நூல்களின் ஆசிரியரதும் அவரது குடும்பப் பின்னணி பற்றிய அறிமுகமும் ஞானம் சஞ்சிகை மூலமாகவே எனக்குக் கிட்டியது. அருட்தந்தை செ. அன்புராசா பல கவிதை களையும் ஒருசில கட்டுரைகளையும் ஞானத்தில் எழுதியி ருக்கிறார். அவர் ஒரு கலைக் குடும்பத்தைச் சேர்ந்தவர். கருவிலே திருவுடையவர்.

அவரது தந்தை செ. செபமாலை (குழந்தை ஆசிரியர்) அவர்கள் கலாபூஷணம், தலைக்கோல், கலைமாமணி, சாஹித்திய, நாடகக்கீர்த்தி போன்ற தேசிய விருதுபெற்ற மன்னார் மாவட்ட நாட்டுக்கூத்துக் கலைஞர். வடமோடி தென்மோடி இரண்டும் தெரிந்தவர். ஆடவும் பாடவும் ஒப்பனை செய்யவும் இசைக்கருவிகள் மீட்டவும் தெரிந்தவர். நாட்டுக்கூத்துக்களையும் நாடகங்களையும் எழுதவும் நெறிப்படுத்தவும் தெரிந்தவர். நாட்டுக்கூத்தைத் தயாரித்து வழங்கும் அண்ணாவியாராகவும் விளங்கியவர். அவருடைய துணைவியாரும் பிள்ளைகளும் சேர்ந்து நாட்டுக்கூத்துகளில் ஆடியிருக்கிறார்கள். செ. அன்புராசாவும் சிறுவயதில் நாட்டுக்கூத்து ஆடியது மட்டுமன்றி, பிற்பட்ட காலத்தில் மன்னார் பிரதேச நாட்டுக்கூத்துகள் பற்றி ஆராய்ந்து ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்து முதுதத்துவமாணிப்(M.Phil) பட்டப்படிப்பை நிறைவு செய்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செ. அன்புராசா பல்துறை சார்ந்து இதுவரை இருபத்தொரு நூல்களை வெளியிட்டுள்ளார். அவற்றுள் 'அம்மாக் கோழியும் அப்பாச் சேவலும்' என்ற சிறுவர் இலக்கிய நூல் 2019 இல் அரச சாஹித்திய விருது பெற்றதென்பது குறிப்பிடத்தக்கது.

அதிர்வுகள் மூன்றாவது தொகுப்பான இந்நூலில் தனிமனித ஆளுமை சார்ந்த ஐந்து கட்டுரைகளும், சமூகம் சார்ந்த நான்கு கட்டுரைகளும், அரசியல் சார்ந்த நான்கு கட்டுரைகளும் அடங்கியுள்ளன. இக்கட்டுரைகள் யாவற்றையும் வாசித்தபோது, நூலாசிரியரின் சமூக அக்கறைதான் எனது மனதில் முன்னின்றது. சமூகம் பயனுற வேண்டும், சமூகத்துக்குத் தேவையானவற்றைச் சொல்லவேண்டும், நல்லவற்றைச் செய்யவேண்டும் என்ற அவரது எண்ணத்தின் வெளிப்பாடுதான் அவரால் எழுதப்பட்ட இக்கட்டுரைகள் என்பதை உணர முடிந்தது.

இந்த நூலில் உள்ள முதலாவது கட்டுரை "உயிரை மாய்த்துக் கொள்ள எவருக்கும் உரிமையில்லை!" என்பதாகும். காலத்துக்குக் காலம் தற்கொலை செய்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது. "எக்காரணத்தை முன்வைத்து ஒருவன் தன்னை மாய்த்துக் கொண்டாலும் தற்கொலை செய்வதென்பது கோழைத்தனமான, முட்டாள்தனமான, தீய, பாவச் செயலாகும். தற்கொலை இயற்கைக்கு மாறானது. எப்பிரச்சனைக்கும் தற்கொலை முடிவாகாது. இப்புவியில் வாழப்போவது ஒரு முறைதான் என்பதை ஒவ்வொருவரும் ஆழ்ந்து எண்ணிப்பார்க்க வேண்டும். மேலும் சவால்கள் ஊடாகத்தான் வாழ்க்கையை வாழமுடியும், வாழ்க்கையில் வெற்றிபெற முடியும் என்பதை உணர்ந்து கொண்டால் வாழ்க்கை வாழ வழிவகைகளைத் தேடலாம். இவ்வாறு சிந்தனை செய்வோமென்றால், ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் அர்த்தமுள்ளதாகிவிடும்" எனக்கூறும் ஆசிரியரது இக்கட்டுரை பல எடுத்துக் காட்டுகளோடும் ஆதாரங்களோடும் எழுதப்பட்டுள்ளது. மனித சமூகத்துக்கு எக்காலத்துக்கும் வேண்டப்படுகின்ற கட்டுரை இது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'குப்பைகளை நீக்க வழி அவற்றை அகற்றுவதுதான்' என்ற கட்டுரை புறக்குப்பைகளைப் பேசுவதோடு அகக் குப்பைகள் பற்றியும் பேசுகிறது. மனக் குப்பை சூழங்களை கொண்டிருப்பவரின் மனமும் சிந்தனையும் செயற்பாடுகளும் வாழ்வும் எதிர்மறை விளைவுகளையே ஏற்படுத்தும் என்பதை மிகச் சிறப்பாக விளக்குகிறது.

'நம் தமிழ் வாழவும் வேண்டும் நாம் அதனை வளர்க்கவும் வேண்டும்' என்ற கட்டுரையில் தமிழ் மொழியின் சிறப்பைக் கூறும் ஆசிரியர் புலம்பெயர் நிலத்தில் தமிழின் அவசியத்தை வலியுறுத்தி தமிழ் மொழியை ஊட்டவேண்டியவர்கள் பெற்றோர்களே என வலியுறுத்துகிறார்.

உணவுக்கு உப்புப்போல உறவுக்கு நட்பு! என்ற கட்டுரையில் நல்ல நட்புகள், சாதி, சமயம், நிறம், இனம், மொழி, பணம் போன்றவற்றைப் பார்ப்பது கிடையாது. குணம் ஒன்றையே பார்க்கும் நல்ல நட்புகளை வளர்ப்போம் என்கிறார்.

மேற்குறிப்பிட்ட கட்டுரைகள் யாவுமே மனிதகுல மேம்பாட்டுக்கான வழிமுறைகளைக் கூறும் கருத்துக்கள் அடங்கியவை. வாசகனை அவன் வாழ்கின்ற வாழ்க்கையிலும் மேலான வாழ்க்கைக்குத் தயார் படுத்துவதாகவும் வாழ்க்கையில் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்துவதாகவும் அமைந்துள்ளன. அவற்றை வாசகர் மனதில் பசுமரத்தாணிபோல பதியவைத்துவிடுகிறார் ஆசிரியர்.

நாய்களும் நாங்களும்!, தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வழியென்ன!, இயற்கையை மதிக்காவிட்டால் அது நம்மை மிதிக்கும்!, கல்வி அடைவு மட்டத்தினை அதிகரிக்க! ஆகிய கட்டுரைகள் சமூகம் சார்ந்தவையாகும். சமுதாயம் என்ற தளத்தில் நின்று மானிடத்தைப் பலகோணங்களில் பார்த்துப் புனையப்பட்ட கட்டுரைகள் இவை. சமூக நலன் பற்றிய அக்கறையோடும் நேசிப்போடும் இவை எழுதப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகை மாதிரிக்கு ஒன்றை இங்கு பதிவு செய்கிறேன். இயற்கையை மதிக்காவிட்டால் அது நம்மை மிதிக்கும் என்ற கட்டுரையில் இயற்கையைச் செயற்கையாக மாற்றுவோமானால், அது தன் வெறுப்பை வெளிப்படுத்தும் என்கிற ஆசிரியரின் கருத்து எத்துணை நிதர்சனமானது! இன்று மனித குலத்துக்கே 'கொரோனா' சவாலாகிவிட்டது என்பதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம் அல்லவா!

வாக்களிப்பிலிருந்து விலகி வாக்களிக்கத் தவறிவிடக் கூடாது, புலிக்கதை தொடங்கப் போகிறது, உயிர்த்த ஞாயிறே மானுடம் மரித்த ஞாயிறு! ஆகிய கட்டுரைகள் அரசியல் சார்ந்தவை. இவற்றை வாசித்தபோது ஆசிரியர் மிகவும் துணிச்சலோடு பலவிடயங்களைக் கூறியிருப்பதை அவதானிக்க முடிகிறது. அரசியல்வாதிகளுக்கு அறிவுரை கூறியும் இடித்துரைத்தும் சில விடயங்களைக் கூறியிருக்கிறார். பலரும் வெளிப்படையாகச் சொல்லத் தயங்கிய விடயங்களை ஆசிரியர் வெளிப்படையாகக் கூறியிருக்கிறார். உதாரணமாக புலிக்கதை தொடங்கப் போகிறது என்ற கட்டுரையைக் குறிப்பிடலாம். ஆசிரியரது அதிர்வுகள் சார்ந்த முன்னைய நூல்கள் பற்றிக் குறிப்பிடுவதும் பயன்மிக்கதாக அமையும் எனக் கருதுகிறேன்.

சமூகவியலாளர் மனிதனைச் சமூக விலங்கு என்றே கூறுவர். அச்சமூக விலங்கு கூடிவாழும்போது பல பிரச்சினைகள் ஏற்படும். சாதிப்பிரச்சினை, மத அடிப்படையிலான சிக்கல்கள், காதல், வறுமை, பொருளாதாரச் சிக்கல்கள், ஏற்றத் தாழ்வுகள் போன்றவை தோன்றும். அவற்றை ஆராய்ந்து அவற்றுக்கான தீர்வுகளைக் கூறுவதாக அதிர்வுகள்-01 நூலில் பல கட்டுரைகளைக் காண முடிகிறது. அத்தோடு அரசியல் சார்ந்த கட்டுரைகளும் புலப்பெயர்வு சார்ந்த கட்டுரைகளும் அடங்கியுள்ளன. புலப்பெயர்வு வாழ்வு மீதான மோகம், அங்கு சென்றபின் அவ்வாழ்வின் பொய்மை மயக்கம், அந்த மயக்கம் கலைந்தபின் ஏற்படுகின்ற சுடலை ஞானம் போன்றவற்றை எடுத்தியம்பும் கட்டுரைகள். இவை இன்றைய இளம் சந்ததியினருக்கு வேண்டப்படுபவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 70 உயிரை மாய்க்க எவருக்கும் உரிமையில்லை!

**கண்கள் உண்டு, ஆனால், பார்ப்பதில்லை!**

இரு காதலர்கள் தற்கொலை செய்துகொள்வதற்காக மலை உச்சிக்கு ஏறிச் சென்றார்கள். இருவரும் கண்களை மூடிக்கொண்டு குதிப்பதற்குத் தயாரானார்கள். காதலன் முதலில் குதிக்கக் காதலி, "காதலுக்குக் கண்ணில்ல என்பதை உணர்ந்து கொண்டேன்!" என்று கூறிவிட்டுக் குதிக்காமல் இருந்து விட்டாள். மலை உச்சியிலிருந்து கீழே போய்க்கொண்டிருந்த காதலன், "உங்களைப்பற்றித் தெரியுமடி!" என்று கூறிக்கொண்டே முதுகில் மறைத்துக் கட்டிவைத்திருந்த பராசூட்டை விரித்துக்கொண்டானாம்!

**தற்கொலையில் இலங்கை முதலிடத்தை நோக்கி முன்னேறுகிறதா!?**

இலங்கையில் 2013, 2014, 2015ஆகிய ஆண்டுகளில் 9,657 பேர் தவறான முடிவெடுத்துத் தற்கொலை செய்துள்ளனர் எனத் தெரிய வருகிறது. 2013இல் 752 பெண்களும் 2,703 ஆண்களும், 2014இல் 660 பெண்களும் 2,484 ஆண்களும், 2015 இல் 669 பெண்களும் 2,389 ஆண்களும் என மூன்று ஆண்டுகளிலும் 9,657 பேர் தற்கொலை செய்து சாவடைந்துள்ளனர் என சட்ட ஒழுங்கு அமைச்சு நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையில் இத்தகவலை வெளியிட்டுள்ளது. 2013, 2014 ஆகிய ஆண்டுகளில் இரத்தினபுரி பொலிஸ் பிரிவிலும் 2015இல் கண்டி பொலிஸ் பிரிவிலும் அதிகமான தற்கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றதாகத் தெரிகின்றது.

மேலும், வவுனியாவில் தற்கொலைச் சம்பவங்கள் இவ்வாண்டின் தொடக்க மாதங்களிலேயே அதிகரித்துள்ள நிலையில் இதனைத் தடுப்பதற்கான வழிவகைகளை ஆராயும் கூட்டமொன்றில் வவுனியா பொது மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் அகிலேந்திரன் கலந்துகொண்டு கருத்துரை வழங்கியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த 2017ஆம் ஆண்டில் வவுனியாவில் மட்டும் 429 பேர் தற்கொலை செய்துள்ளனர் என்ற அதிர்ச்சித் தகவலைத் தெரிவித்த அவர், இந்நிலை தொடருமானால் வினைத்திறனில்லாத சமூகமாக எம் சமூகம் விரைவில் மாறிவிடும் என்ற எச்சரிக்கையையும் விடுத்திருந்தார்.

**உலகளாவிய ரீதியில்!**

சர்வதேச ரீதியில் ஆண்டுக்கு எட்டு இலட்சம் பேர் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக்கொள்வதாக உலக சுகாதார நிறுவனம் கனடாவின் மனநல ஆணையத்துடன் இணைந்து 2016இல் மேற்கொண்ட ஆய்வில் தெரிவித்துள்ளது.

ஏழை, செல்வந்தர் என்ற வேறுபாடு இல்லாமல் பல தரத்தாரில் இது இடம்பெறுவதாகவும், இவர்களில் இருபது வீதமானவர்கள் மது அருந்தும் பழக்கம் கொண்டவர்கள் என்றும் குறிப்பிடும் அவ்வாய்வு, 15-29 இடைப்பட்ட நடுத்தர வயதினரே இவ்வாறாக தவறான முடிவெடுத்து உயிரை மாய்ப்பவர்களில் பெரும்பாலானவர்கள் என்று மேலும் சுட்டிக்காட்டுகின்றது.

இவ்வாறு, உயிரை இழந்துபோவது குறித்த விழிப் புணர்வோ, தடுப்பதற்கான வழிமுறைகளோ இல்லை என்பத னையும் கோடிட்டுக் காட்டுவதோடு, இதனைத் தடுப்பதற்கான ஏற்பாடுகளை அரசுகளும் மக்கள் சமூகங்களும் கல்வி, மனநல ஆலோசனை போன்றவற்றின் ஊடாக முன்னெடுக்கவேண்டும் எனவும் கருத்துக்கள் வெளியிட்டுள்ள ன. இவ்வாறான வழிமுறைகளினால் அநியாயமான உயிர் இழப்புக்களைப் பெருமளவில் தடுக்க முடியும் என்றும் தெரிவித்துள்ளன.

மேலும், உலக சுகாதார நிறுவனத்தின் அண்மைக்கால தகவல்களின்படி தற்கொலை செய்துகொள்பவர்கள் எண்ணிக் கையில் இலங்கை நான்காவது இடத்தில் இருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. மிகவும் ஆபத்தான நிலையில் நம்நாடும், நாட்டுமக்களாகிய நாமும் உள்ளோம் என்ற சமிக்ஞையைத்தான் இது தெளிவாகக் காட்டிநிற்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தனிநபர், சமூகம் சார்ந்த காரணிகள்**

தற்கொலை செய்துகொள்வதற்கான காரணிகளாகப் பொதுவாகத் தனிநபர் சார்ந்த காரணிகளாகவும் சமூகம் சார்ந்த காரணிகளாகவும் வகைப்படுத்திப் பார்க்கலாம்.

பரீட்சையில் சித்தியடையாமை, காதலிலே தோல்வி யடைதல், பொருளாதார நெருக்கீடு, தாய் தந்தையர் கடிந்து கொண்டமை, வாங்கிய கடனைக் கட்டமுடியாமை, கொடுத்த கடனை மீளப்பெற முடியாது ஏமாற்றப்பட்டு விரக்தியடைதல் போன்ற காரணிகளையெல்லாம் முன்வைத்துச் செய்யப்படும் தற்கொலைகளே தனிநபர் சார்ந்த காரணிகளால் செய்யப்படுபவை ஆகும்.

கடன் தொல்லைகள், குடும்பத் தகராறுகள், பலாத்காரம் செய்யப்பட்டமை, ஏமாற்றப்பட்டமை போன்ற காரணங்களால் மேற்கொள்ளப்படும் தற்கொலைகள் சமூகம் சார்ந்த காரணிகளால் நடந்தேறுபவை ஆகும். இவற்றை எவ்வாறு பிரித்துப் பார்த்தாலும் அவை ஒன்றோடு ஒன்று தொடர்புபட்டவையே.

எக்காரணிகளை முன்வைத்து ஒருவர் தம் உயிரை மாய்த்துக் கொண்டாலும் தற்கொலைச் செயலானது கோழைத்தனமான, முட்டாள்தனமான, தீய, பாவச் செயலாகும். தற்கொலை இயற்கைக்கு மாறான ஒன்றல்லவா!

மேலும், 'சினிமாப் படங்களிலும் தொலைக்காட்சி நாடகங்களிலும் காண்பிக்கப்படும் தற்கொலைக் காட்சிகளும் எம் சமூகத்தில் தற்கொலைச் சம்பவங்கள் அதிகரிப்பதற்கு ஒரு காரணமாக இருக்கின்றது. அவ்வாறான காட்சிகள் மனதில் ஆழமாகப் பதிந்துவிடும். ஒரு நபருக்கு தன்னால் பிரச்சினைகளைக் கையாள முடியாத சந்தர்ப்பம் ஏற்படும்போது அவர் இலகுவாக இவ்வாறான முடிவுகளை எடுக்கத் தூண்டப் படுகிறார்' என வவுனியா பொது வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் அகிலேந்திரன் மேற்சொன்ன கருத்துப்பகிர்வில் குறிப்பிட்ட விடயத்தை அனைவரும் கூர்ந்து நோக்கவேண்டி இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எப்பிரச்சினைக்கும் தற்கொலை முடிவாகாது!**

பிரச்சினைகள் நீடிப்பதால் நெருக்கீடுகள் உருவாகின்றன. அவை மன உளைச்சலை - மனச் சோர்வினைப் பொதுவாக எல்லாருக்குமே ஏற்படுத்துகின்றது. ஆனால் சிலருக்கே தற்கொலை செய்து கொள்ளும் எண்ணம் வருகின்றது.

இதற்கு அடிப்படையான முதற் காரணம் தங்களுக்கு ஏற்பட்ட பிரச்சினைக்கு தற்கொலைதான் தீர்வு என மிகத் தவறான முடிவை எடுக்கின்றமைதான்! தற்கொலை செய்து கொள்ள எண்ணுபவர்கள் 'தற்கொலை ஓர் உயிருக்குத்தான் முடிவே தவிர, பிரச்சினைக்கு அன்று!' என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்வார்களேயானால் இவ்வாறான தவறான முடிவுகளை எடுக்கமாட்டார்கள்.

தற்கொலை எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வாகாது என்பதை மனதில் பதித்துக்கொள்ள வேண்டும். இவ்வாறான எண்ணம் இருப்பவர்களுக்கு இன்னுமின்னும் நெருக்கீடுகள் உருவாகுமே தவிர இப்பாதகச் செயல் தீர்வினைத் தராது என்பதனைத் தனிநபர்களுக்கு ஊட்டவேண்டும்.

தற்கொலை செய்வதால் எதனையும் சாதித்துவிட முடியாது அல்லது அதனால் எதுவும் நடக்கப் போவதும் இல்லை. எனவே, தற்கொலை என்ற எண்ணத்தையே தனிமனிதர்கள் தம் எண்ணங்களில் இருந்து முற்றாக அகற்றிவிட - அழித்துவிட வேண்டும்.

அடுத்து, ஓர் உயிரின் பெறுமதி அவ்வுயிரை இழப்போருக்குத் தெரியாததுதான்! ஓர் இனிப்பைக்கூட பணம் கொடுக்காமல் வாங்கமுடியாது! அப்படியிருக்க, உயிரை இழப்பவர் எதுவுமே கொடுக்காமல் எம்முயற்சியும் செய்யாமல் வெறும் கொடையாகக் கிடைத்த இவ்வுயிரை எப்படி அநியாயமாக இழக்க முடியும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்?

இவ்வாறு பார்க்கும்போது தன் உயிரின்மேல் எவ்வதிகாரமும் இல்லாத மனிதன் தன்னுயிரை அநியாயமாக இழப்பதற்கும் எந்த உரிமையும் அற்றவன் என்பதும் உறுதியாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையின் நோக்கு, இலக்கு இல்லாததே இவ்வாறான தான்தோன்றித் தனமான முடிவுகளை எடுப்பதற்கான மற்றைய காரணமாகும். 'வாழ், வாழ விடு, வாழ வழி வகு' என்பார் அமரர் அருள்திரு பற்றிக் ஞானப்பிரகாசம் அடிகளார். இத்தகைய பற்றுறுதி ஒருவரிடத்தில் இருக்குமென்றால் எத்தகைய நெருக்கடியான சூழலிலும் ஒருவர் வாழக்கூடிய வல்லமையைப் பெறுவார் எனத் துணிந்து கூறலாம்.

**"கிழவனும் கடலும்!"**

தன் நாவலுக்கான நோபல் பரிசு பெற்ற ஏனெஸ்ட் ஹெமிங்வே என்ற நாவலாசிரியர் 'கிழவனும் கடலும் ' என்றொரு நாவலைப் படைத்திருக்கின்றார். இலட்சிய வேட்கைக்கும், தன்னம்பிக்கைக்கும், விடா முயற்சிக்கும் முன்னுதாரணமான நாவல்தான் கிழவனும் கடலும்!

கிழவன் ஒருவன் மீன்பிடிக்கச் செல்கின்றார். அவ்வாறு சென்று வலை விரித்தபோது ஒரு பெரிய விலாங்கு மீன் ஒன்று சிக்கிக்கொள்கின்றது. அதனைக் கரைக்குக் கொண்டுவருவதற்காக அம்முதியவர் சில நாள்களாகப் போராடி அவ்வலையைக் கரைக்குக் கொண்டுவருகின்றார். அவ்வாறு கரையொதுங்கிய வலையைப் பார்த்தபோது ஏற்கெனவே அம்மீனை ஏனைய மீன்கள் தின்றுவிட்ட நிலையில் அதன் பெரிய எலும்புகள்தான் வலையோடு கிடப்பது தெரிகின்றது.

இருப்பினும் அக்கிழவன் பெருமகிழ்ச்சி அடைகின்றார். காரணம் அக்கிழவனுக்கு அம்மீனினால் பணம் கிடைக்க வில்லையே தவிர தன் முயற்சியில் பெருவெற்றி பெற்று விட்டார். இலாபம் கிடைக்கவில்லையே தவிர அவர் தன் முயற்சியில் வெற்றி பெறுகின்றார்.

நாவலாசிரியரான ஹெமிங்வே, கடலுக்குள் இருந்த மீனுக்காக அந்நாவலை எழுதவில்லை. கரைமேல் வாழும் நமக்காகத்தான் அதனை எழுதியிருக்கின்றார் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பூமியில் வாழப்போவது ஒருமுறைதான் என்பதை ஒவ்வொருவரும் ஆழ்ந்து எண்ணிப்பார்க்க வேண்டும். மேலும் சவால்கள் ஊடாகத்தான் வாழ்க்கையை வாழ முடியும், வாழ்க்கையில் வெற்றிபெற முடியும் என்பதை உணர்ந்துகொண்டால் வாழ்க்கையை வாழ வழிவகைகளைத் தேடலாம். இவ்வாறு சிந்தனை செய்வோமென்றால் ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் அர்த்தமுள்ளதாகிவிடும்.

"திராட்சைப் பழம் நசுக்கப்படாமல் திராட்சை இரசம் உருவாகாது. மலர்கள் அரைக்கப்படாமல் வாசனைத் திரவியங்கள் கிடையாது. ஆகவே, உன் வாழ்க்கையில் அழுத்தங்கள் உள்ளன என்றால் பயப்படாதே. அவை உன்னிடமுள்ள முதல்தரமானவற்றை வெளிக்கொண்டுவரும்" என்பார் அறிஞர் அப்துள் கலாம்.

**தன்னம்பிக்கையும் நகைச்சுவையுணர்வும் அவசியமானது!**

' 'தற்கொலை உணர்வு மேலோங்காதிருப்பதற்குத் தேவை தன்னம்பிக்கை. வாழ்வு என்பது ஒரு போர்க்களம். காயமில்லாத போர்க்களம் உண்டா? வாழ்வு என்பது ஒரு கடல். கொந்தளிக்காத கடல் உண்டா? வாழ்வு என்பது ஒரு வேள்வி. நெருப்பு இல்லாத வேள்வி உண்டா?" எனக்கேள்வி எழுப்பித் தற்கொலைச் செயலுக்கு சாவுமணி அடிக்கின்றார் அருள்திரு வை. இருதயராஜ் அடிகளார். இவ்வாறு கூறுகின்ற அடிகள் தற்கொலை உணர்வு உள்ளவர்கள் நகைச்சுவை உணர்வை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்கின்றார்.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டிருக்கும் இப்பணியாளர் இந்நகைச் சுவை உணர்வுக்குத் தன் நோயில் இருந்தே ஓர் உதாரணத்தை எடுத்துக் காட்டுகின்றார். சந்திப்பவர்களிடம், "நான் இருப்பதோ இக்கரை. போகவேண்டியதோ அக்கரை. உடம்பில் இருப்பதோ சக்கரை. இல்லை அதைப்பற்றி அக்கறை!" எனத் துன்பத்தையும் நகைச்சுவையாகப் பகிர்ந்து கொள்கின்றார்.

**கொலைகள் பாவமானது!**

கொலைகளில் கருக்கொலை, சிசுக்கொலை, கருணைக் கொலை எனப் பல வகையுண்டு. இக்கொலைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தனையும் தீமையானது, பாவமானது என்பதனை மனித நேயம் கொண்ட யாவரும் அறிவர்! கருணைக் கொலைக்கும் கருக் கொலைக்கும் ஆங்காங்கே சில நாடுகளில் சட்டரீதியான ஆதரவு இருப்பினும் இவை படைத்தவன் பார்வையில் அருவருப்புக்குரிய செயல் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டித்தான் இருக்கின்றது.

இவற்றில் கொலை, கருணைக்கொலை, கருக்கொலை, சிசுக்கொலை போன்றன ஒருவர் அடுத்தவருக்குச் செய்யும் தீமையாக - பாவமாகக் கருதப்படுகின்றது. ஆனால் தற்கொலையோ ஒருவர் தனக்கே செய்யும் தீமையும் பாவமும் ஆகும்.

**வாழ்வதற்கு மாற்று வழிகள் உண்டு!**

காதலில் தோல்வி என்று சொல்லி தற்கொலை செய்ய எண்ணுபவர்கள் வாழ்க்கையைக் காதலிக்க ஏன் எண்ணுவதில்லை என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும். பிரச்சினையைத் தீர்க்க வழியில்லை எனத் தற்கொலை செய்ய நினைப்பவர்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தங்களுக்குத் தெரிந்திராத பல மாற்றுவழிகள் உண்டு என்பதைக் கண்டுபிடிக்கவேண்டும்.

தங்களுடைய பிரச்சினைகளையும் தீர்க்காமல் தங்களைச் சுற்றியுள்ளவர்களுக்குச் சோகத்தையும் தொடர் துன்பத்தையும் ஏற்படுத்துவதாகவே அனைத்துத் தற்கொலைச் சம்பவங்களும் மாறிவிடுகின்றன. ஆக, தற்கொலைச் செயலானது ஒரு தொல்லையைத் தீர்க்கப்போய் பல தொல்லைகளை உருவாக்குவதாகவே இற்றைவரை மாறியிருக்கின்றது.

**சாகச் சிலவழிகளே, வாழப் பலவழிகள்!**

துறவி ஒருவரிடம் சென்ற ஒருவன் தான் உயிர் வாழ்வதைவிட சாவதே மேல் எனத் தன் விரத்தி நிலையை வெளிப்படுத்தி நின்றான். அத்துறவியோ, "அப்படியானால் உயிரை மாய்ப்பதற்கான வழிகளைக் கூறுபார்க்கலாம்?" எனக்கூறியபோது அவன் ஒருசில வழிகளைக் குறிப்பிடுகின்றான். அத்துறவியோ, "உயிரை மாய்ப்பதற்கு இச்சில வழிகளே உண்டென்றால், உயிர்வாழ்வதற்கு எத்தனை வழிகள் உண்டு என்பதை ஏன் இன்னும் நீ எண்ணிப் பார்க்கவில்லை?" என வாழ்வுபற்றி அவனைச் சிந்திக்கத் தூண்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில், எக்காரணத்தை முன்னிட்டும் தற்கொலை செய்துகொள்ளக் கூடாது, அப்படிச் செய்ய முற்படுவது பெரும் தீமையான பாவச் செயல் என்பதை ஒவ்வொருவரும் உணரவேண்டும். யாருடைய உயிரையும் பறிக்க யாருக்கும் உரிமையில்லை என்பதைப்போல ஒருவர் தன்னுடைய உயிரை மாய்ப்பதற்கும் எவ்வித உரிமையும் கிடையாது என்பதை ஒவ்வொருவரும் மனங்கொள்ள வேண்டும்.

**இழந்தவைகளிடம் இருக்கின்றது!**

பொதுவாக, இயலாமையுடன்கூடிய நபர்கள் தவறான முடிவுகளை எடுப்பது மிகமிகக் குறைவு என்று கூறுவதைவிட இல்லையென்றே சொல்லிவிடலாம். சாதாரணமாக அவர்கள் சாதிக்க வேண்டும், வாழ்ந்து காட்டவேண்டும் என்ற துடிப் போடுதான் வாழ்ந்துகொண்டு இருக்கின்றார்கள். இவ்வனு பவத்தைத்தான், 'இழந்தவைகளிடம் இருக்கிறது!...' என்ற ஒரு சிந்தனையைச் சில மாதங்களின் முன் குறிப்புப் புத்தகத்தில் எழுதிவைத்தேன்.

"அங்கே, பார்வை இழந்தவர் ஒழுங்காகவே நடக்கிறார்! காது கேளாதவர் விளக்கமாகவே இருக்கிறார்! வாய் பேசாதவர் சரியாகவே சொல்கிறார்! இங்கே, பார்த்துப் பார்த்தும் சரியாகக் காண்பதில்லை! கேட்டுக் கேட்டும் தெளிவாகப் புரிவதில்லை! சொல்லிச் சொல்லியும் முழுதாய் விளங்குவதில்லை!"

இயலாமையுடன்கூடிய நபர்களைப் பார்த்து 'வலது குறைந்தவர்கள்' எனக் கருதும் 'வலதுகுறையாதவர்கள்' ஆகிய நாம் இயலாமையுடன்கூடிய நபர்களிடமிருந்து வாழ்க்கையைக் கற்றுக்கொள்ளவேண்டும், வாழ்வதற்கான வழிகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும். கண்ணைத் திறந்து கொஞ்சம் கருத்தோடு சிந்திப்போமா? சிந்தித்தால்தானே சீரிய வாழ்வோங்கும்.

**மன்னா, யூலை 2018**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 71 குப்பைகளை நீக்க வழி அவற்றை அகற்றுவதுதான்!

**குப்பைகளைக் கொண்டு திரியக் கூடாது**

ஜெர்மனி நாடு பிளவுற்று இருந்த காலத்தில் பெர்லின் நகரத்தைக் கிழக்காகவும் மேற்காகவும் பெரிய மதில் சுவர் பிரித்திருந்தது. ஒருநாள் கிழக்கு பெர்லினைச் சேர்ந்த சிலர், ஒரு பெரிய வாகனத்தில் நிறைய குப்பை கூளங்களைக் கொண்டுவந்து மதில் தாண்டி மேற்கு பெர்லின் பக்கம் கொட்டிவிட்டுப் போனார்கள். அவ்வளவு ஆத்திரமும் பகைமையும் குரோதமும் கிழக்கு பெர்லின் நகர மக்கள் மேற்கு பெர்லின் நகர மக்கள் மீது கொண்டிருந்தார்கள்.

இதற்குப் பதிலடி கொடுக்க நினைத்த மேற்கு பெர்லினைச் சேர்ந்த மக்களுள் சிலர் முற்றிலும் வித்தியாசமான பாணியில் செயற்பட்டு இருந்தார்கள். அவர்கள் உணவுப் பண்டங்கள், அத்தியாவசிப் பொருள்கள், மரக்கறிகள் என ஒரு லொறி நிறையப் பொருள்களை ஏற்றி மதில் தாண்டி வந்து கிழக்கு பெர்லின் பக்கம் அழகாக அடுக்கி வைத்துவிட்டுப் போனார்கள். இப்படிச் செய்தவர்கள் அப்பொருட்கள் மீது ஒரு வாசகத்தையும் எழுதி வைத்து விட்டுப் போனார்கள்: "ஒவ்வொருவரும் தம்மிடம் என்ன இருக்கிறதோ அதைத்தான் கொடுப்பார்கள்."

**பானையில் இருப்பதுதான் அகப்பையில்**

இதனை ஒருவகையில், பானையில் உள்ளதே அகப்பையில் வரும் எனக் கூறலாம். ஆக, ஒவ்வொருவரிடமும் என்ன என்ன, எந்த எந்த அளவில் உள்ளதோ, அதனை அந்த அந்த அளவில் கொடுப்பார்கள். அது நன்மையானதாகவும் இருக்கலாம், நன்மை பயக்காதவையாகவும் இருக்கலாம்.

உள்ளமாகிய பானையில் இரக்கம் இருந்தால் இரக்கச் செயல்கள் வெளிப்படும். மாறாக அரக்கக் குணங்கள் இருந்தால் அரக்கத் தனங்கள் புறப்படும். அமைதியும் பொறுமையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிகொண்டிருந்தால் அன்பும் கனிவும் பரிவும் வெளிவரும். மாறாக வன்முறையும் பொறாமையும் குடியிருந்தால் வாள்(ய்) வெட்டுக்களும் வாதைகளும் தொடரும். ஒவ்வொருவரும் எவை எவற்றைக் கொண்டிருக்கிறார்களோ அவை அவற்றைத் தம் செயல்களில் வெளிப்படுத்திக் கொண்டிருப்பார்கள்! இது, மிக இலகுவான ஒரு வாழ்வியல் உண்மை. இதில் வலிந்து புகுத்தவும் ஏதுமில்லை, குறைத்துக் கூறவும் யாதுமில்லை!

**குப்பைப் பிரச்சினை குப்பைகளால்தான்!**

குப்பை கூளங்களைத் தேங்கவிடும் பிரச்சினை பெரும் பிரச்சினையாக உலகெங்கும் உருவெடுத்து வருவதை அவதானிக்கலாம். வளர்ச்சியடைந்த நாடுகளில் இது ஒரு பிரச்சினையாகவே கணிக்கப்படுவதில்லை. ஏனெனில் அவர்கள் இதற்கான வழிவகைகளை மிகச் சிறப்பாகக் கையாளுகின்ற காரணத்தினால் ஆகும்.

உண்மையில், குப்பைப் பிரச்சினையை மிக இலகுவாகத் தீர்த்து விடலாம்! ஆனால் இக்குப்பைப் பிரச்சினைக் குத் தீர்வுகாண முடியாமல் இருப்பதற்கான காரணம் குப்பைகளால்தான் என்பதை எப்போது குப்பைகள் எண்ணிப் பார்க்கிறார்களோ அப்போது குப்பைப் பிரச்சினைக்கான தீர்வைக் கண்டுபிடித்து விடலாம்!

'குப்பை' பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாமல் இப்பிரச்சினை தொடர்வதற்குக் காரணம் இரண்டு உள்ளன. ஒன்று, சாதாரண குப்பைகள். மற்றயது, குப்பையை அரசியல் படுத்தும் குப்பைகள். குப்பைகள் குறித்து 'ஞானம்' சஞ்சிகையில் 'குப்பைகள்' என்ற தலைப்பில் ஒருதடவை எழுதியிருந்தேன்: "ஒன்பதுக்கு ஒருத்தி!/ ஒன்பது முப்பதுக்கு ஒருத்தன்!/ பத்துக்கு இன்னொருத்தி!/ பத்து முப்பதுக்கு இன்னொருத்தன்!/பதினொன்றுக்கு வேறொருத்தி!/பதினொன்று முப்பதுக்கு வேறொருத்தன்!/ இப்படியே/ இரவிரவாக/ ஒருத்திக்குத் தெரியாமல் மற்றொருத்தி!/ ஒருத்தனுக்கும் தெரியாமல் மற்றொருத்தன்!/ வீசிவீசி.../ விடிவதற்குள் நகர வீதிகள் நரகமாகி விடுகின்றன/ நகரத்துக் குப்பைகளால்!" என அக்கவிதை வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் அவதானிப்பு எவ்வளவிற்கு உண்மையானது என்பதை நகரத்து மக்கள் யாவரும் அறிவார்கள்! ஏனெனில் நகரங்கள் நாற்றமெடுக்க ஒருவகையில் இவர்கள் காரணமாய் இருக்கிறார்கள் என்பதை இலேசாக மறந்துபோக முடியாது! மேலும், எதற்கோ தேவைப்படும் எனப் பலவற்றைச் சேர்த்துச் சேர்த்து வைத்து எதற்கும் தேவைப்படாமல் பல ஆண்டுகளின் பின்னர் எறிந்த பல பொருள்கள் இங்கு நினைவுக்கு வரலாம்.

இன்னும், 'பிறகு உண்ணலாம்' என அடுத்தவரோடு பகிராமல் குளிர்சாதனப் பெட்டியில் அடுக்கி அடுக்கி வைத்த பல உணவுப் பொருள்கள் காலாவதியாகிக் கொட்டியதையும் எண்ணிப் பார்க்கலாம்.

**குப்பைகளால் குப்பைக்குப் பலியானோர்**

அடுத்து, குப்பையை வைத்து அரசியல் செய்யும் அரசியல்வாதிகளும் இந்நாட்டில் இருக்கத்தான் செய்கிறார்கள். இல்லையெனில் 2017 தமிழ் சிங்கள புத்தாண்டு தினமாகிய சித்திரைத்திங்கள் பதின்நான்காம் திகதி கொலன்னாவை பிரதேசத்தின் மீதொட்டமுல்லையில் உள்ள குப்பைமேடு சரிந்து சுமார் நாற்பது உயிர்கள் காவுகொள்ளப்படாமல் பாதுகாத்திருக்கலாம் அல்லவா!

பத்தாண்டுகளுக்கு மேலாக இக்குப்பை மேட்டினால் ஏற்படப்போகும் பேராபத்துக்களை அம்மக்கள் எடுத்துக்கூறி தமது பாதுகாப்புக்காகப் போராடி வந்திருக்கிறார்கள். இருந்த போதும் ஆட்சியில் இருந்த அரசு அதனை அரசியல்படுத்தி அரக்கத்தனம் கொண்டு அடக்கியது. அதன் விளைவாக அம்மக்கள் குப்பைகளால் அநியாயமாகக் குப்பைக்குப் பலியாகி இருக்கிறார்கள்.

**ஐந்து வகைக் குப்பைகள்!**

இப்போது குப்பைகளை ஐந்தாக வகைப்படுத்துவதோடு குப்பைகளை இலகுவாகத் தரம் பிரிப்பதற்கு ஒவ்வொரு வகைக் குப்பைக்கும் ஒவ்வொரு நிறத்தினை குறிப்பிட்டு இருக்கின்றார்கள்.

1) மீளவும் சுழற்சிக்கு உட்படுத்தப்படும் கழிவுகள் (நீலம்)
2) உக்கும் கழிவுகள் (பச்சை)
3) மீள் சுழற்சிக்கு உட்படுத்த முடியாத கழிவுகள் (கறுப்பு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) உலோக-கண்ணாடிப் பொருள் கழிவுகள் (சிவப்பு)
5) பிளாஸ்ரிக் கழிவுகள் (மஞ்சள்).

இவ்வாறு கழிவுகளைப் பிரித்துச் சேர்த்தெடுப்பது அவற்றைப் பொருத்தமான முறையில் பயன்படுத்தவும் அப்புறப்படுத்தவும் உதவியாக இருக்கும் என்பதனால் ஆகும்.

இவ்வாறு ஒவ்வொரு வகைக் கழிவுக்கும் அந்த அந்த நிறங்களைச் சுட்டும் பாத்திரங்களை அல்லது தொட்டிகளைப் பொது இடங்களில் வைத்திருப்பதை இப்போது காணக்கூடிய தாக இருக்கிறது.

இச்செயற்பாடு பல பாடசாலைகளிலும் மருத்துவ மனைகளிலும் பொது இடங்களிலும் ஏற்கனவே தொடங்கப் பட்டுவிட்டது போலத்தான் தெரிகிறது. எனினும் குப்பைகளைக் குப்பைத் தொட்டிகளில் - பாத்திரங்களில் சேர்க்கும் பழக்கத்தை பாடசாலைகளில், அலுவலகங்களில் ஆரம்பிப்பது சமூக மட்டத்தில் சூழல் சுற்றாடலை சுத்தமாக வைத்திருக்கப் பேருதவியாக அமையும்.

**ஐந்து வகையைவிட ஆபத்தான குப்பைகள்!**

மேற்சொன்ன வகைப்படுத்தலை விடவும் இன்னு மொரு வகைப்படுத்தலையும் இக்காலத்தில் கவனத்தில் கொள்ளவேண்டி இருக்கிறது. இந்நோக்கில் குப்பைகளை அடிப்படையில் இரண்டு வகையாகப் பிரித்துப் பார்க்கலாம் போல் தோன்றுகிறது. ஒன்று, வெளிக் குப்பைகூளங்கள். இவை, மேற்கூறப்பட்ட குப்பைகளைப்போல வெளியே தெரிகின்றன. அவை பற்றியே மேற்சொன்ன பத்தி விபரிக்கிறது.

இரண்டாவது, மனக் குப்பைகூளங்கள்! இவை அநேகமாக வெளியே தெரிவதில்லை. வெளியில் உள்ள குப்பைகூளங்கள் ஆபத்தானவை. அதன் ஆபத்தினையே கொழும்பு கொலன்னாவை நகரசபைக்கு உட்பட்ட பிரதேச மான மீதொட்டமுல்லை மக்கள் கடந்த ஆண்டு தமிழ் சிங்கள புத்தாண்டு அன்று அநுபவித்தார்கள். இதனை நாடு முழுதும் ஏன் உலகம் முழுதும் கண்ணுற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், அதனைப்போல் அல்லது அதனைவிட ஆபத்தானது காட்டுச் செடிகொடிபோல் மனிதர்களின் மனங்களில் வளர்ந்து கிடக்கும் குப்பை கூளங்களைப் பலர் அறிவதுமில்லை, உணர்வதுமில்லை!

மனக் குப்பை கூளங்களை கொண்டிருப்பவரின் மனமும் சிந்தனையும் செயற்பாடுகளும் வாழ்வும் எதிர்மறை விளைவு களையே ஏற்படுத்தும். அத்துடன் அடுத்திருப்பவர்களின் மனங்களைப் பல்வேறு வழிகளிலே தாக்கிக் காயப்படுத்தி, சித்திரவதைப்படுத்தி குற்றுயிராக்குவதையும் காணலாம்.

மனக் குப்பைகூளங்களின் ஒரு வடிவமே 'கொசிப்' (gossip) ஆகும். ஒன்றைக் குறித்தோ அல்லது ஒருவரைக் குறித்தோ உண்மைக்குப் புறம்பானவற்றை அவதூறாகக் கூறுவதையே 'கொசிப்' என்ற ஆங்கில வார்த்தை சுட்டி நிற்கின்றது.

**புறம் கூறலைத் தவிர்த்தால் புனிதராகலாம்!**

"அவதூறாகப் பேசுதல் மிக அருவருப்பானது. தொடக்கத்தில் இனிப்புத் துண்டு போன்று மகிழ்வூட்டுவதாக இருக்கும். ஆனால் கடைசியில் உள்ளத்தை கசப்புணர்வினால் நிரப்பி நஞ்சூட்டிவிடும்!" எனத் திருத்தந்தை பிரான்சிஸ் 2014 மாசித்திங்கள் 16ஆம் நாள் புனித பேதுரு சதுர்க்கத்தில் குழுமிய மக்கள் மத்தியில் குறிப்பிட்டிருக்கிறார்.

"அவதூறு பேசுவதை விடாமுயற்சியுடன் தவிர்ப்போம் என்றால் நாம் புனிதர்களாவது உறுதி என நான் நம்புகிறேன்" என மிக ஆணித்தரமாக - மிக ஆழமாக எடுத்துக் கூறியுள்ளார் திருத்தந்தை.

"ஐந்தாவது கட்டளை ஊடாக 'கொலை செய்யாதிருப் பாயாக' என அறிவுறுத்துகிறார் இயேசு. ஒருவருக்குக் கேடுவிளைவிக்கும் உண்மைக்குப் புறம்பான அவதூறான பேச்சு அவரின் பெயரைக் கெடுத்து விடுகிறது. இதுவும் ஒருவரைக் கொன்றுவிடுகின்றது" என அழுத்திக் கூறுவதன் மூலம் அவதூறு பேசுவதை முற்றாகத் தவிர்க்கவேண்டும் எனவும் வலியுறுத்துகிறார் திருத்தந்தை பிரான்சிஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்தவரின் தவறுகளை - குற்றங்களை ஊதிப் பெருப்பித்து புள்ளியாக இருப்பதைப் புழுவாக மாற்றி, பின் புழுவை ஒருவாறாகப் பூச்சியாக்கி, அதன்பின் பெரிய பிரயத்தனம் செய்து, பூச்சியாக மாற்றியதைப் பூதமாக்கிக் காண்பிப்பதில் பலருக்கு மகா சந்தோசம். சிறு புள்ளிகூட இல்லாத ஒன்றுக்கு எதை எதையோ எல்லாம் சோடித்து பூதமாக்கும் ஆற்றல் கொண்டவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். உண்மையில் பூதம் என்பதே சூனியம்தானே!

**வேலை அற்றவர்களின் வேலை!**

அடுத்தவருடைய பெயரைக் கெடுப்பது ஒரு பொழுது போக்காகக்கூட இன்றைய சூழல் சிலருக்கு மாறிவிட்டது. இப்படிப்பட்டவர்களின் வாழ்வை, செயற்பாடுகளை ஆராய்ந்து பார்த்தால் இவர்களைப் பற்றி வெளிவராத பல உண்மைகள் வெளிச்சத்திற்கு வரும்.

மேலும் இப்படிப்பட்டவர்கள் அடிப்படையில் உருப் படியாகச் செய்வதற்கென்று ஒன்றும் இல்லாவர்களாக இருப்பதனால் அடுத்தவர்பற்றி இல்லாத - பொல்லாத கதைகளைக் கட்டவிழ்த்துவிட்டு அவற்றைப் பற்றிக் கதைத்துக் கொண்டு திரிவதைத் தம்மியல்பாகக் கொண்டி ருப்பார்கள். ஒருவகையில் இது அவர்களின் இயலாமையின் வெளிப்பாடே! காரணம், தங்களால் சாதிக்க முடியாததை அவன்(ள்) சாதிக்கிறான்(ள்), தங்களால் செய்ய முடியா ததைச் செய்கிறார்கள்! எப்படி இவர்களால் முடிகிறது என்ற ஒருவகைப் பொறாமைகூட இவர்களை இவ்வாறான செயற்பாடுகளுக்கு இட்டுச் செல்லக்கூடிய வாய்ப்பிருக்கிறது.

**குப்பைக் குணம் யாரிடத்தில்!**

ஜென் துறவிகள் இருவர் ஆறு ஒன்றைக் கடக்க நேரிட்டது. அவர்களில் ஒருவர் வயதானவர், மற்றயவர் இளையவர். இருவரும் ஆற்றைக் கடந்து போகும்போது ஆற்று வெள்ளம் திடீரென அதிகரித்தது. அப்போது அவர்களோடு ஆற்றைக் கடந்து கொண்டிருந்த இளம் பெண் ஒருவர் நடு ஆற்றில் அந்தரித்தபோது அவளைக் காப்பாற்றி அவள் மறுகரை அடைய இளம் துறவி உதவினார். அவ்விளம் பெண்ணும் தன் உயிரைக் காப்பாற்றிய இளம் துறவிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி தெரிவித்தாள். பின்னர் அவரவர் தத்தம் பயணம் தொடர்ந்தார்கள்.

வழியில் மற்றவர், 'ஒரு துறவி இளம் பெண்ணைத் தொடலாமா?' என தமக்குள் முணுமுணுத்தபடி சென்று கொண்டிருந்தார். அவ்விளம் துறவியோ, "ஐயா, நான் அவளை ஆற்றங் கரையிலேயே விட்டுவிட்டேன்! நீங்கள் இன்னுமா அவளைச் சுமந்துகொண்டு வருகிறீர்கள்?" எனக் கேட்டபோது அவ்வயதான துறவி தன் நிலையுணர்ந்து வெட்கித்துப் போனார்.

**குப்பைகளைக் கொண்டாடுகிறவர்கள்!**

உளநலன் பாதிக்கப்பட்ட ஒருவன் பயணப் பொதி ஒன்றில் பல பொருள்களை வைத்திருந்தான். அப்பொதியினுள் இருந்து ஏதோ ஒரு பொருளை எடுப்பதும், கையில் வைத்துப் பார்ப்பதும், அதனை ஏசுவதும், பின் அப்பொருளை பொதியினுள் வைப்பதும் என இச்செயலைத் தொடர்ந்து மீண்டும் மீண்டும் மீண்டும் செய்து கொண்டிருந்தான். இச்செயலைப் பார்த்தவர்கள் உண்மையில் அவன் மனநோயாளி என்பதைப் புரிந்து கொண்டார்கள். உண்மையும் அதுதான். குப்பைகளால் ஏற்படும் எல்லா வகைப்பட்ட குப்பைப் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கான வழி: குப்பைகளை பொது வெளி, மன வெளிகளில் இருந்து அகற்றுவதும் அப்புறப்படுத்துவதும்தான்!

**தீர்த்துவிடவேண்டும், தொடர்ந்தால் ஆபத்து!**

ஏதோவொரு காரணத்திற்காகத் தங்களுக்குப் பிடிக்காதவர்களை, தம்மீது வீணாகக் குற்றம் சுமத்தியவர்களை, தம்மை ஏசியவர்களை, தம் கோபத்திற்கு உள்ளானவர்களைத் தம் நினைவுக்கு வருகிறபோது ஏசித் தீர்த்துவிடுவது ஒருவகையில் நல்லது. காரணம் உடலுக்கு ஒவ்வாதவை வாந்தியாக வெளிவருவதுபோல மனதில் அடைகாக்கக் கூடாத உணர்வுகளான வெறுப்பு, கோபம், பகைமை போன்றவை வெளியேறுவது கட்டாயமானது.

அவ்வகையில் உள்ளத்திற்கு ஒவ்வாத, வேண்டாத உணர்வுகள் ஏச்சாக - பேச்சாக - பெரு மூச்சாக - பெரும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தமாக வெளியேற்றுவது உளநலத்திற்கு நன்மை பயக்கலாம்.

ஆனால், அதனை எங்கு, எப்படிச் செய்வது என்பது மிகமிக முக்கியமானது. உண்மையில், உளநலத்தோடு வாழ்பவர் ஒரு தடவை அல்லது ஓரிரு தடவைகளோடு இப்பேர்ப்பட்ட செயற்பாட்டை நிறுத்திக் கொள்வார். ஆனால் சிலர் மனநலன் பாதிப்புற்றவரைப்போல நினைக்கிற போதெல்லாம் ஏசுபவராக - பேசுபவராக இருப்பாரென்றால் அவரும் மனநலன் பாதிப்புற்ற நிலையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறார் என்பதே அடையாளமாகும். இப்படிப்பட்டவர்களின் செயல் வாந்தியெடுத்ததை மீண்டும் உண்பது போன்ற ஒரு செயலாகவே மாறிவிடும். இப்பேர்ப்பட்டவர்கள் உளவளத் துணையை நாடுவது அவருக்கும், குறிப்பாக, அவரைச் சுற்றி இருப்பவர்களுக்கும் பெரும் ஆசீர்வாதமாக அமையும்.

**மன்னா, பெப்ரவரி 2018**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**72**

# நம்தமிழ் வாழவும் வேண்டும் நாம் அதனை வளர்க்கவும் வேண்டும்

**தமிழ், தமிழரது வாழ்வியலோடு கலந்தது**

தமிழ் மொழியின் சிறப்பைப் பற்றிப் பலரும் பலவாறாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். சங்ககாலம் தொடக்கம் பின் நவீனத்துவ காலம்வரை தமிழ் மொழியின் சிறப்பினைச் சொல்லாத தமிழ் அறிஞனும் இல்லை, பாடாத தமிழ்க் கவிஞனும் இல்லை என்று கூறுகிற அளவுக்குத் தமிழ் மொழியின் பெருமைகளைச் சொல்லி இருக்கிறார்கள்.

மகாகவி பாரதியார், "செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத்தேன் வந்து பாயிது காதினிலே" என்றும், பாரதிதாசன், "தமிழுக்கு அமுதென்று பேர் அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்றும் அழகு தமிழில் தமிழின் இனிமையைப் பாடியுள்ளார்கள்.

சமய நூல்கள் அல்லாத நூல்களில் திருக்குறளே அதிகமாக மொழி பெயர்க்கப்பட்ட நூலாகக் கருதப்படுகிறது. இற்றைவரையில் எண்பத்திரெண்டு மொழிகளில் மொழிபெயர்க் கப்பட்ட திருக்குறள் ஆங்கிலத்தில் மட்டும் ஐம்பத்தேழு உரையாசிரியர்களால் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டு உரை எழுதப்பட்டுள்ளதாக அறியக்கிடக்கிறது!

தமிழின் இனிமையும் பெருமையும் செழுமையும் இவ்வாறிருக்க - தமிழ் ஒரு மொழியாகப் பயன்படுவது மட்டுமல்லாது தமிழ் - தமிழரின் வாழ்வியலில் எவ்வாறு கலந்திருக்கிறது என்பதைத் தற்காலத்தில் ஒருவர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"ஹிந்தியை தாய்மொழியாக கொண்டவர்கள் தங்களது பெயரில் ஹிந்தி எனும் வார்த்தையை இணைத்துக்கொள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்வரவில்லை, முடியவும் முடியாது. கன்னடம் முடியாது, தெலுங்கு முடியாது, மலையாளம் முடியாது, ஏனைய மொழிகள் முடியாது, ஏனென்றால் மற்ற மொழிகள் யாவும் மொழியாக மட்டுமே வரையறுக்கப்பட்டன. ஆனால் தமிழில்... தமிழ், தமிழ்ச்செல்வி, தமிழ்ச்செல்வன், தமிழரசன், தமிழ்க்கதிர், தமிழ்க்கனல், தமிழ்க்கிழான், தமிழ்ச்சித்தன், தமிழ்மணி, தமிழ்மாறன், தமிழ்முடி, தமிழ்வெற்றி, தமிழ்மல்லன், தமிழ்வேலன், தமிழ்த்தென்றல், தமிழழகன், தமிழ்த்தும்பி, தமிழ்த்தம்பி, தமிழ்த்தொண்டன், தமிழ்த்தேறல், தமிழ்மறை, தமிழ்மறையான், தமிழ்நாவன், தமிழ்நாடன், தமிழ்நிலவன், தமிழ்நெஞ்சன், தமிழ்நேயன், தமிழ்ப்பித்தன், தமிழ்வண்ணன், தமிழ்ப்புனல், தமிழ்எழிலன், தமிழ்நம்பி, தமிழ்த்தேவன், தமிழ்மகன், தமிழ்முதல்வன், தமிழ்முகிலன், தமிழ் வேந்தன், தமிழ்கொடி என்றெல்லாம் தமிழோடு தமிழ் என்ற மொழியோடு முன்னடையாகப் பெயரோடு வைத்துக்கொள்ள முடியும் - பெயர்களுக்கு முன்னும் பின்னும் அடைகளைக் கொடுத்துச் சிறப்பிக்கின்றோம், வளம் சேர்க்கின்றோம்.

தமிழன் மட்டுமே, தமிழை மொழியாக மட்டுமல்லாது உயிராகவும் நேசிக்கிறான்! இதனை ஒருவர் மிக அழகாக தமிழ் மொழியின் இலக்கணத்தை வைத்துக்கொண்டு எடுத்தியம்புகிறார். "பெத்தவங்களை ஏன் 'அம்மா', 'அப்பா' ன்னு அழைக்கிறார்கள்! எப்பவாவது இதுபற்றி யோசிச் சிருக்கீங்களா? அந்த வார்த்தைக்கும் நமக்கும் என்ன தொடர்பு? அந்த வார்த்தைகளுக்கான உள்ளர்த்தம் என்ன? அ-உயிரெழுத்து, ம்-மெய்யெழுத்து, மா-உயிர் மெய்யெழுத்து, அ-உயிரெழுத்து, ப்-மெய்யெழுத்து, பா-உயிர் மெய்யெழுத்து. தன் குழந்தைக்கு உயிரை கொடுப்பவர் தந்தை. தன் கருவறையில் அந்த உயிருக்கு மெய்வடிவம்(கண், காது, மூக்கு, உடல் உறுப்புகள் என) கொடுப்பவள் தாய். இந்த உயிரும், மெய்யும் கலந்தே உயிர் மெய்யாக வெளிப்படுவது குழந்தை. எந்த மொழியிலும் அம்மா, அப்பாவுக்கு இந்த உள்ளர்த்தம் கிடையாது. நமது 'தமிழ்' மொழியில்தான் இத்துணை அற்புதமான உள்ளார்த்தம் உள்ளது!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தமிழ் ஏன் தவிர்க்கப்படுகிறது?**

சில மாதங்களுக்கு முன் கொழும்பில் நடைபெற்ற திருமணக் கொண்டாட்டம் ஒன்றில் கலந்துகொள்ள வேண்டி யிருந்தது. அந்நிகழ்வின் முக்கியமான சில விடயங்களை மட்டும் இவ்விடத்தில் தொட்டுக் காட்ட வேண்டும்போல் தோன்றுகிறது.

மணமகனும் மணமகளும் தமிழர்கள், அவர் தம் பெற்றோர்களும் தமிழர்கள்! அத்திருமண அருள்சாதன நிகழ்வுக்கு வந்திருந்தவர்களும் தமிழர்கள். ஆனால், அந்நிகழ்வு ஆங்கில மொழியில் இடம்பெற்றது! அவ்வாறு ஆங்கில மொழியில் இடம்பெற்றதில் எவ்வித தவறுமில்லை!

மேலும், அந்நிகழ்வில் இடம்பெற்ற முக்கியமான வாழ்த்துக்கூறும் பகுதியும் ஆங்கிலத்தில் அமைந்திருந்தது. நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் அநேகர் தமிழர்கள். வந்திருந்தவர்கள் அனைவரும் தமிழிலேயே உரையாடினார்கள் எனினும் உத்தியோகபூர்வமான விடயங்கள் ஆங்கில மொழியிலேயே இடம்பெற்றன. 'தமிழில் பேசமாட்டார்களா?' எனச் சிலர் தவித்துக் கொண்டிருந்ததையும் அந்நேரத்தில் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. அனைத்து 'காட்சிப் படுத்தும்' நிகழ்வுகளும் ஆங்கில மொழியில் நடந்து முடிந்ததும் தங்கள் சொந்தபந்த உறவுக் கதைகள், குடும்பக் கதைகள், அடுத்தவர் பற்றிய கதைகள், இடையிடையே 'ஆவலாதி அவதூறு'க் கதைகள் எல்லாம் சரளமாகத் தமிழில் இடம்பெற்றதைக் காணக்கூடியதாக இருந்தது. ஏன் இவற்றையும் ஆங்கிலத்தில் தொடரலாமே எனக் கேட்க வேண்டும்போல் இருந்தது!

அக்கதைகளை ஆங்கிலத்தில் தொடரவில்லை என்பதற் கான காரணம் பின்னர் புரிந்தது. அடுத்தவர் கதைகளைத் துளாவித் துளாவிக் கதைப்பதற்கு சொந்த மொழியில் அதுவும் தமிழில் பேசினால்தானே சரியாகப் பேசித்தீர்க்க முடியும் என்பதனால்தான் ஆவலாதி அவதூறுப் பகுதி தாய் மொழியான தமிழ்மொழியில் நடந்தது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னதான் சமஸ்கிரதத்தில் கத்திக் கத்தி மந்திரம் சொன்னாலும் கடைசியில் 'தட்டில காசு போடுங்கோ'னு, எங்க தங்கத் தமிழில்தான் கேட்கணும்!" என்று ஓர் இந்து நண்பர் குறிப்பிட்டதன் யதார்த்தத்தைப் புரிந்து கொண்டால் இங்கு கோடிட்டுக் காட்டவிளையும் விடயம் நன்றாக விளங்கும்! உள்ளத்து ஆத்மார்த்தமான கிடக்கைகளை , சொந்த மொழியில் சொன்னால்தான் அது உணர்வுகளோடும் உள்ளத்தோடும் சேரும், களிகூரும்.

**ஆடையணிகலனில் மட்டும் பண்பாடு!**

தம் தாய்மொழியான தமிழ்மொழியில் நடைபெற்றிருக்க வேண்டிய மேற்குறிப்பிட்ட அத்திருமணக் கொண்டாட்டம் ஏன் தமிழ்மொழியில் நடத்தவில்லை என்ற கேள்வி அக் கொண்டாட்டத்தில் கலந்துகொண்ட பலரின் மனதில் எழுந்தது தெரிந்தது.

தமிழ்மொழி பேசுவதால் நிகழ்வின் தரம் குறைந்துவிடும் அல்லது தங்கள் தராதரத்தை மற்றவர்கள் குறைத்து மதிப்பிட்டு விடுவார்கள் என்ற மனப்பாங்கு காரணமாக இருக்கலாம் என அந்நிகழ்வோடு சம்மந்தப்பட்ட ஒருவர் பட்டும்படாமலும் குறிப்பிட்டார்!

ஆனால், ஆடை அணிகலன்களை மட்டும் தமிழ் முறைப்படி பல்லாயிரக்கணக்கான பணம் கொடுத்து அணிந்து கொள்கிறார்கள். காரணம் அடுத்தவருக்குக் காட்டிக் கொள் வதற்காகக் கட்டிக் கொள்கிறார்கள்! இதனை உறுதிப் படுத்துவதற்கு ஒரு விடயம் இருக்கிறது: ஒரு தடவை ஒரு கொண்டாட்டத்திற்குக் கட்டுகிற சாறியைப் பொதுவாக இன்னுமொரு கொண்டாட்டத்திற்கு கட்டுவதில்லை என்ற நிலைப்பாட்டில் பல பெண்கள் இருப்பதாகக் கூறுகின்றார்கள். புலம்பெயர்ந்து வெளிநாட்டில் வசிக்கும் பெண்கள் உள்நாட்டிலும் அதை விதைத்து விட்டார்கள்.

ஒவ்வொரு கொண்டாட்டத்திற்கும் புதிய சாறிகட்டுதல் புலம்பெயர் நிலத்தில் தமிழ்மக்கள் மத்தியில் மிக உச்ச நிலையில் உள்ளதாகச் சொல்லப்படுகிறது. இதற்கென்றே குடும்பத்தில் பெரும் தொகைப் பணம் செலவிடப்படுவதாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீரைக் காட்டிக்கொள்ளாமல் சொல்லிக் கவலைப் படுகிறார்கள் பல கணவன்மார்கள். இந்நடைமுறை தாயகத் திலும் எக்குறையுமின்றி வெகு விமரிசையாகக் கடைப்பிடிக் கப்படுவதாகவே தெரிகின்றது.

அப்படி இல்லையென்றால் ஒரு கொண்டாட்டத்திற்கு அணிந்த ஆடைகளை (பொதுவாக சாறிகளை) முற்றும் புதியவர்களைக் கொண்ட வேறொரு கொண்டாட்டத்திற்கு கட்டிக்கொள்கின்றார்கள். அதாவது இரண்டாவது தடவை ஒரு சாறியைக் கட்டுகிறார்கள் என்றால் அவ்விடத்தில் அவர்களின் (சாறியைக் கட்டிக்கொள்கிறவர்களின்) கணிப்பின் படி முற்றுமுழுதாக புதியவர்களாக இருந்தால்தான் கட்டிக் கொள்கிறார்கள்.

சுருங்கச் சொன்னால், பொதுவாக ஒவ்வொரு கொண்டாட்டத்திற்கும் ஒவ்வொரு புதிய சாறி தேவைப் படுகின்றது பல பெண்களுக்கு! அதுவும் விலை உயர்ந்த சாறிகள்! என்னே வேண்டாத - கேலிக்குரிய வீணான பணப் பெருமையல்லவா!

**கோஷம் எழுப்புவதால், கொடிபிடிப்பதால் தமிழ் வளராது – வாழாது!**

சாறி, மற்றும் ஏனைய தமிழ்க் கலாசார ஆடை அணிகலன்கள் மட்டில் கவனம் செலுத்தும் நம்மவர்கள் ஏன் தம் தாய் மொழியான தமிழ்மொழி மட்டில் அக்கறை காட்டுவதில்லை என்பதைக் குறித்து இவர்கள் தீவிரமாகச் சிந்திக்க வேண்டும்!

தமிழை வாழாது - தமிழ் மொழியைப் பேசித் தமிழை வளர்க்காது தமிழ் வாழவேண்டும், தமிழ் வளரவேண்டும், தமிழீழம் மலரவேண்டும் எனக் கோ ஷம் எழுப்புவதும் - கொடி பிடிப்பதும் கேலிக்கூத்துக்கு ஒப்பானது!

மேற்சொன்ன வாக்கியம், உள்ளங்களில் சன்னங்கள் பாய்ச்சுவதுபோல சிலருக்கோ அல்லது பலருக்கோ அமையலாம்! ஆயினும், இவ்வுண்மைகளை இனிமேலும் சொல்லாமல் இருப்பதற்கு மனச்சாட்சி இடம்தராதபோது, யார் கோபித்தாலும் இதனைச் சொல்லிவிடுவதைத் தவிர வேறு மார்க்கம் இருப்பதாகத் தெரியவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஏனைய மொழியறிவு இன்றியமையாதது!**

இவ்வாறு கூறும்போது வேறு மொழிகளில் தேர்ச்சி பெறக்கூடாது - வேறு மொழிகளைப் படிக்கக்கூடாது என்பது எவ்வகையிலும் இங்கு அர்த்தப்படுத்தப்படவில்லை! ஒவ்வொருவரும் உலகளாவிய தன்மையிற் பேசப்படும் மொழிகளில் தாய்மொழிக்கு (தமிழர்களாயின் தமிழ்மொழிக்கு) அப்பால் ஆகக்குறைந்தது ஒரு மொழியையாவது கற்றிருக்க வேண்டும். இனிவரும் காலங்களில் ஆங்கில மொழியறி வின்றி வேலைவாய்ப்புக்கள் இல்லை என்ற நிலை நம் நாட்டில் வந்துவிடுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. அவ்வளவிற்கு ஆங்கில மொழியறிவின் தேவை ஆசியாவைப் பொறுத்தவரை மேலோங்கி வருகிறது.

ஏனெனில் பூகோள மயமாக்கலின் விளைவாக உலகளாவிய முறைமையில் பொதுவான ஒரு மொழியில் உதாரணமாக ஆங்கிலத்தில் தொடர்பாடல்களை வைத்துக் கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது.

அதற்காகத் தாய்மொழி அறிவைத் தடைசெய்து ஆங்கில மொழியிலேயே பிள்ளைகள் வளரட்டும் எனக் கங்கணம் கட்டித் தமிழைப் புறக்கணித்து ப் பிள்ளைகள் தம்பண்பாட்டு மூலங்களை - வேர்களை இழந்துபோகிற நிலையை உருவாக்கிக் கொள்ளக்கூடாது. ‘இங்கிலிஸ் மீடியம்’ என்பது ஆங்கிலக் கல்வி அல்ல ஆங்கில வழியில் கல்வி! ஆக ஆங்கிலம், அறிவல்ல அது மொழி மட்டுமே என்பதைப் பெற்றோர் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

மேலும், பல மொழி பேசும் மக்கள் பிரசன்னமாகி இருக்கிற ஒரு சூழலில் எல்லாரும் விளங்கக்கூடிய ஒரு மொழியை, உதாரணமாக, ஆங்கில மொழியைப் பயன் படுத்துவதில் எவ்வித ஆட்சேபனையோ தவறோ இல்லை. இதுபோல ஒரு நாட்டுக்குள் உதாரணமாக இலங்கையில் தமிழும் சிங்களமுமே மொழிகளாக இருக்கின்றபோது அனைவரும் இரு மொழிகளையும் அறிந்திருந்தால் இனங்களுக்கிடையில் மிகப்பெரும் புரிந்துணர்வு தோன்றியிருக்கக்கூடிய (தோன்றக் கூடிய) வாய்ப்பு ஏற்பட்டிருக்கும் (ஏற்படும்)!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேவேளை, எல்லாரும் தமிழர்களாகக் கூடிவரும் போதுகூட ஒருசில காரணங்களுக்காக ஆங்கில மொழியைப் பயன்படுத்துவதில்கூட எவ்வித ஆட்சேபனையும் இல்லை! ஆனால், தமிழை விடுத்து ஆங்கிலத்தைப் பயன்படுத்துவதால் தம் தரம் கூடும், தராதரம் உயரும், தகுதி மேம்படும் என எண்ணுவது தாழ்வு மனப்பான்மையின் ஒரு வடிவமே!

இதற்கு கட்டாயச் சிகிச்சை அதாவது ஆகக்குறைந்தது உள ஆற்றுப்படுத்தல் (counselling) வழங்கப்பட வேண்டும் என்பதை உளவியலாளர்கள்கூட மறுக்க மாட்டார்கள். “ஆங்கிலம் என்பது அறிவல்ல, அது ஒரு மொழி. வெள்ளை என்பது அழகல்ல, அது ஒரு நிறம்” என்ற இந்த வரிகள் எப்போது நம் தலைகளில் நன்கு பதிகிறதோ அப்போதுதான் கொஞ்சமாவது தெளிவு பிறக்க ஆரம்பிக்கும்!

**தாய்மொழியை நன்கு அறிந்திருப்பது அவசியம்**

ஒவ்வொரு இனத்தவரும் தம் தாய்மொழியைச் சரியாக கற்றுக்கொள்ள வேண்டும் என்பதனை உளவியலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள். ஏனெனில் தாய்மொழியில் எவ்வள விற்கு பரிச்சயம் இருக்கின்றதோ அவ்வளவிற்கு ஏனைய மொழிகளைக் கற்றக்கொள்ளும் ஆற்றல் ஒருவருக்கு உருவாகும் என்பதை இப்போது ஆய்வுகள் ஊடாக நிரூபிக்கின்றார்கள்.

அவ்வகையில் தமிழர்கள் மட்டுமல்ல எம்மொழியைப் பேசுபவர்களாக இருப்பினும் அவர்கள் தம்தம் மொழியை எவ்வளவிற்குக் கற்கமுடியுமோ அவ்வளவிற்குக் கற்றுத்தேறுதல் அவசியமாகும்.

**புலம்பெயர் நிலத்தில் தமிழ்**

ஐரோப்பிய, ஸ்கன்னேவிய, ஆங்கிலேய நாடுகளில் வாழும் நம்மவர்கள் பல்வேறுபட்ட பொது நிகழ்ச்சிகளையும் விழாக்களையும் எந்தளவிற்கு தம் தாய் மொழியான தமிழில் செய்யமுடியுமோ அந்தளவிற்கு தமிழில் நடத்துகிறார்கள். மேலும் ஒருவரை ஒருவர் சந்திக்கும்போதும் தொலைபேசியில் உரையாடத் தொடங்கும்போதும் முதலில் ‘வணக்கம்’ சொல்லுவது பொதுவாக அங்கு காணும் ஒரு விடயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை புலம்பெயர் நிலத்தில் வாழும் எம்மவர்களின் சிறந்த ஓர் எடுத்துக்காட்டாக - முன்னுதாரணமாகக் கொள்ளமுடியும்.

**தாய்மொழியைத் தவறவிட்டவர்கள்**

ஆனால், புலம்பெயர் நாடுகளில் குறிப்பாக இங்கிலாந்து, கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற இடங்களில் ஆங்கில மொழியினை முதன்மை மொழியாகக் கொண்ட நாடுகளில் இருந்து வருகின்ற தமிழ்ப் பெற்றோர் தங்கள் பிள்ளைகள் தமிழ்மொழி தேர்ச்சி பற்றிப் பகிர்ந்துகொள்ளும் பொதுவான கருத்துக்கள் சிலவற்றை நோக்குவது பலருக்கும் நன்மை பயக்கும்.

"நல்லாப் படிக்கிறான். வகுப்பில் முதலாம் இடம் . தமிழ்தான் கதைக்க மாட்டான். ஆனால் சரியான கெட்டிக் காரன்...!

"மூண்டு மொழி சரளமாப் பேசுவாள்! மெடிசின் செய்யிறாள். கனடா யுனிவசிற்றிக்குள்ளேயே அவளுக்குத்தான் மெறிற் கிடைச்சது. நல்லா படிக்கிறாள்! தமிழ்தான் கதைக்க வராது. ஆனால் நாங்க கதைச்சா அவளுக்கு விளங்கும்! அவள் இங்கிலிசிலதான் பதில் சொல்லுவாள்!"

"சரியான கெட்டிக்காரன். வயது இருபத்தொன்றுதான். இங்கிலிஸ், பிரஞ், ஸ்பனிஸ், டொச் தூள்பறக்கக் கதைப்பான். தமிழ்தான் அவனுக்கு வாய்க்குள்ள வருகுதில்ல! நாங்களும் கட்டாயப்படுத்தல்ல! ஆனா, அவனுக்கு நல்லா விளங்கும்!" என்றெல்லாம் பெற்றோர்கள் சொல்லுகிறபோது அவர்களுக்கு தம் பிள்ளைகள் குறித்துப் பெருமையாக இருக்கலாம்! பிள்ளைகள் நன்றாக படிப்பதனால் - வளர்ந்து வருவதனால் அவர்கள் நிச்சயமாகப் பெருமைப்பட வேண்டும்!

ஆனால், தங்கள் தாய் மொழியைக் கற்றுக்கொடுக்க சந்தர்ப்பம் இருந்தும் அதனை விட்டுவிட்டு 'அவன் தமிழ் கதைக்கமாட்டான், ஆனா நல்லா விளங்கும்!' என ஏனைய பெருமைகளோடு இச்சிறுமையையும் சேர்த்து பெருமைப் பட்டுக் கொள்வதுதான் ஒருவகையில் கவலை அளிக்கின்ற விடயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம் தாய் மொழியைக் கற்றுக்கொடுக்க வாய்ப்புக்கள் இருந்தும் அதனைத் தம் பிள்ளைகளுக்குக் கொடுக்காத பெற்றோர் பிற்காலத்தில் அதாவது அவர்களின் காலத்திலேயே, 'ஐயோ தவறிழைத்து விட்டோம்!' என்று வேதனைப்படுகின்ற நிலை வந்துவிட்டது! அப்போது கடந்துபோன இளமைக் காலத்தைக் கைகாட்டிக் கூப்பிட்டது போலத்தான் இருக்கும்.

**புலம்பெயர்ந்த தலைமுறைக்கும் தமிழ் அவசியம்!**

2016 மாசித்திங்கள் 28ந் திகதி அறிவியல் தொழில்நுட்ப சாதனையாளருக்கான 'ஒஸ்கார்' விருதினைத் தமிழரான காட்டலாங்கோ லியோன் பெற்றிருக்கின்றார். இருபது ஆண்டுகளாக அமெரிக்காவில் வாழ்ந்து வந்தாலும் அழகாகத் தமிழ்பேசும் இவர், 'புலம்பெயர்ந்து வாழ்ந்துவரும் அடுத்த தலைமுறையினருக்குத் தமிழ் மிக அவசியம்!' என்கின்றார்.

இவர் தன்மகளுக்குத் தமிழைப் பயில ஊக்குவிப் பதாகவும், அமெரிக்காவில் லொஸ் ஏஞ்சல்ஸில் ஒரு பாடசாலையின் தமிழாசிரியராகத் தான் பணிபுரிவதாகவும் தன் அநுபவத்தை அவுஸ்திரேலிய வானொலி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் பதிவு செய்கின்றார். இவ்விருதினை இசையமைப்பாளர் ஏ. ஆர். ரஹ்மானைத் தொடர்ந்து இரண்டாவது தமிழ்பேசும் மகன் ஒருவன் பெற்றிருக்கின்றான் என்பது குறிப்பிடத்தக்கது.

**தாய்மொழியை ஊட்டவேண்டியவர் பெற்றோரே!**

புலம்பெயர்ந்த பெற்றோரில் சிலர் சிறுவயதிற் தம் பிள்ளைகளுக்குக் கொடுக்க வேண்டிய தாய்மொழி அறிவை வழங்காமல் பிள்ளைகள் வளர்ந்தபின், "தமிழே அவனுக்கு வருகுதில்ல!", "தமிழ் எண்டாலே அவனுக்குச் சத்தி வருது!" எனக் கூறுவதில் எப்பயனுமில்லை. 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது' என்பது இவர்கள் அறியாத வாக்கல்ல! ஆகவே, நம்முன்னோரின் பழுத்த அநுபவ வாக்கை கடைப்பிடித்தால் தமிழும் வாழும் தமிழர்களும் தம்மொழி பண்பாட்டுடன் வளர்வார்கள் என்றே உறுதிபடக் கூறலாம்!

**மன்னா, மே 2018**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 73 உணவுக்கு உப்புப்போல உறவுக்கு நட்பு!

**எத்தனை கோடிப் பணமிருந்தும் என்ன!**

'அப்பிள்' நிறுவன இயக்குநர் ஸ்டீவ் ஜாப்சின் பிரசித்திபெற்ற வாக்குமூலம் ஒன்று முழு உலகத்தின் கவனத்தையும் ஈர்த்திருந்தது. அவ்வாக்குமூலம் ஒருவகையில் உலக மக்கள் அனைவருக்கும் முக்கியமானது. "நான் வணிக உலகில் வெற்றியின் உச்சத்தைத் தொட்டிருக்கிறேன். பிறரின் பார்வையில் என் வாழ்க்கை வெற்றிகரமானதுதான். எப்படியிருந்தாலும் என்னுடைய பணிச்சுமைகளையெல்லாம் தாண்டி நானும் என் வாழ்க்கையில் ஒருசில மகிழ்ச்சியான தருணங்களைச் சந்தித்திருக்கிறேன், உணர்ந்திருக்கிறேன், அநுபவித்திருக்கிறேன். பணமும் வசதிகளும் மட்டுமே வாழ்க்கை யில்லை என்பதை என் வாழ்க்கையின் இறுதிக் கட்டத்தில்தான் அறிந்துகொண்டேன்.

...இதோ! இந்த மரணத்தருவாயில், நோய்ப்படுக்கையில் படுத்துக்கொண்டு என் முழு வாழ்க்கையையும் திரும்பிப் பார்க்கும் இந்தத் தருணத்தில் வாழ்க்கையில் எனக்குக் கிடைத்த அங்கீகாரங்கள், பணம், புகழ், சொத்து, செல்வாக்கு எல்லாமே செல்லாக்காசாக, பொருளற்றதாக, மரணத்தின் முன் தோற்றுப்போய் நிற்பதை உளமார உணர்கிறேன். இந்த இருளில் என் உயிரைத் தக்கவைக்கப் போராடிக் கொண்டிருக்கும் மருத்துவ இயந்திரங்களின் மெல்லிய சத்தங்கள் மட்டுமே என் காதுகளில் ரீங்காரமிடுகின்றன.

...கடவுளின் மூச்சுக்காற்றையும் மரணத்தையும் மிகமிக அருகில் உணர்கிறேன். வாழ்க்கையில் நாம் வாழ்வதற்குப் போதுமான பணத்தை ஈட்டிய பின், பணத்திற்குத் தொடர்பில்லாத - மனத்திற்குத் தொடர்புடைய சிலவற்றையும் சம்பாதிக்கத் தொடங்கவேண்டும் என்பது இப்போதுதான் எனக்குப் புரிகிறது. அவை உறவாகவோ, நட்பாகவோ, கலையாகவோ, அறமாகவோ, நம் இளமையின் கனவாகவோ இருக்கலாம். அவைதான் வாழ்வில் மிகமிக இன்றியமையாதன என்பதைக் காலங்கடந்து இப்போது நான் உணர்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...அதைவிட்டுப் பணத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்டு ஓடும் மனிதனின் வாழ்க்கை முற்றிலும் வேறு திசையில் திரும்பிவிடுகிறது, என் வாழ்க்கையைப்போல. கடவுள் நம் புலன்களின் மூலம் அனைவரின் மனத்திலும் இருக்கும் அன்பை உணரச்செய்யும் ஆற்றலைக் கொடுத் திருக்கிறார். பணத்தால் நாம் உண்டாக்கியிருக்கும் அனைத்து மகிழ்ச்சியும் வெறும் மாயைகளே! நான் சம்பாதித்த பணம் எதையும் என்னுடன் கொண்டுபோக முடியாது. நான் மகிழ்ந்திருந்த என் நினைவுகள் மட்டுமே இப்போது என்னுடன் இருக்கின்றன. அன்பும் காதலும் பல மைல்கள் உங்களுடன் பயணிக்கும். வாழ்க்கைக்கு எந்த எல்லைகளுமில்லை. எங்கு செல்ல ஆசைப்படுகிறீர்களோ அங்கு செல்லுங்கள். தொட நினைக்கும் உயரத்தை - உச்சத்தைத் தொட முயலுங்கள்.

...நீங்கள் வெற்றியடைவது உங்கள் எண்ணத்திலும் கைகளிலும்தான் உள்ளது. உங்கள் பணத்தை வைத்து நீங்கள் என்ன வேண்டுமானாலும் வாங்கலாம், ஆனால் அந்தப் பணத்தின் மூலம் உங்கள் வலியை, உங்கள் துயரை யாரையும் வாங்கிகொள்ளுமாறு செய்ய முடியாது, முடியவே முடியாது. பணத்தின் மூலம் வாங்கும் பொருள்கள் தொலைந்துவிட்டால் மீண்டும் வாங்கிவிடலாம். ஆனால் நீங்கள் தொலைத்து, அதைப் பணத்தால் வாங்கமுடியாத ஒன்று உண்டென்றால் அது உங்கள் வாழ்க்கைதான்.

...வாழ்க்கையில் எந்தக் கட்டத்தில் நீங்கள் இருந்தாலும் பரவாயில்லை, இப்போதாவது வாழ்க்கையை வாழத் தொடங்குங்கள். நாம் நடித்துக்கொண்டிருக்கும் வாழ்க்கை எனும் நாடகத்தின் திரை எப்போது வேண்டுமானாலும் இறக்கப்படலாம் என்பதை நினைவிற் கொள்ளுங்கள். உங்களின் குடும்பத்தினருக்கு, பெற்றோர்க்கு, மனைவிக்கு, மக்களுக்கு, உறவினர்க்கு, நண்பர்களுக்கு, இயலாதவர்களுக்கு அன்பை வாரிவாரி வழங்குங்கள். உங்களை நீங்கள் எப்பொழுதும் மகிழ்ச்சியாக வைத்துக்கொள்ளுங்கள். அனைவரையும் மனமார நேசியுங்கள். நேசியுங்கள். நேசித்துக்கொண்டே இருங்கள்!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுக்கும் நட்புக்கும் முன்னுரிமையும் முதலிடமும் கொடுத்து பொருள் பொதிந்த வாழ்க்கை வாழ நினைக்கும் அத்தனை பேரும், மரணப்படுக்கையில் ஸ்டீவ் உச்சரித்த வார்த்தைகள், அவன் உழைத்த கோடான கோடி ரூபாய் பணத்திலும், பலநூறு மடங்கு பெறுமதியானது என்பதனை உணர்ந்துகொள்வர்!

"மரணத்தை நோக்கி நகரும் வாழ்க்கையில் வாழச் சொல்லி வற்புறுத்துவது காதலும் நட்பும்தான். காதலை நேசிப்போம், நட்பை சுவாசிப்போம்" என்ற கவிப்பேரரசு வைரமுத்துவின் வரிகளும் மேற்சொன்ன கருத்துக்கு வலுச் சேர்க்கிறது.

**நன்மை பயப்பவற்றை நயப்பதே நட்பு**

"மெழுகுவர்த்திக்கு ஒளி கொடுப்பதற்காகத் தன்னை மாய்த்துக் கொள்கிறது தீக்குச்சி. உயிர்கொடுத்த அந்த நண்பனை நினைத்து நினைத்து மெழுகுவர்த்தி தன்னை உருக்கிக் கொள்கிறது!" என்கின்ற ஒருவனின் அவதானிப்பு நட்புப்பற்றிய ஒருவகையான வரைவிலக்கணமாகக்கூடக் கொள்ளலாம் போலிருக்கிறது.

ஒருமுறை கிரேக்க தத்துவ ஞானி சோக்ரடீஸின் நண்பரைப்பற்றி சோக்ரடீஸிடமே ஏதோ சொல்ல ஒருவர் வந்தார். வந்தவர் சோக்ரடீஸின் நண்பரைப்பற்றி ஏதேதோ எல்லாம் சொல்லிக்கொண்டிருந்தார். சோக்ரடீஸ், "எனது மூன்று கேள்விகளுக்கு 'ஆம்' என்று பதில் தந்தால் நீர் என்னோடு தொடர்ந்து உரையாடலாம்!" என்றார். சோக்ரடீஸின் கேள்விகளும் அவற்றுக்குக் கிடைத்த பதில்களும் பின்வருமாறு: 1."அவரை நன்கு தெரிந்துதான் கதை கூறப்போகிறீரா?", 'இல்லை!' 2."அவரைப்பற்றிய நல்ல விடயத்தையா கூறப்போகிறீர்?", 'இல்லை!' 3."அந்த நண்பரைப்பற்றி என்னிடம் கூறுவதால் யாராவது "பயனடைவார்களா?", 'இல்லை!' "அப்படியென்றால் நன்கு தெரியாத, நல்ல விடயமும் இல்லாத, எவருக்கும் பயனில்லாத என் நண்பரைப்பற்றிய விடயத்தைத் தயவுசெய்து என்னிடம் சொல்லாதீர்கள்!" என்றுகூறி அவனை அனுப்பி வைத்தார். நல்ல நட்பு எப்போதும் நல்லதையே, நன்மையானதையே யோசிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முகமூடிகள் அணிந்த முகங்கள்!**

பழகுகிறபோது சிலர் உண்மை முகங்களோடு பழகுவதில்லை. அவர்கள் முகமூடிகள் அணிந்திருப்பதும் தெரிவதில்லை. அவர்கள் முகமூடிகள் அணிந்திருக்கிறார்கள் என்று தெரியாமலே பலர் உறவுகளைப் பேணி வந்திருக்கிறார்கள். எப்போது அவர்களது முகமூடிகள் கழன்று விழுகிறதோ, எப்போது அவர்களின் முகத்திரைகள் விலகுகிறதோ அப்போது அவர்களின் உண்மை முகங்கள் புலப்படும். இவ்வுண்மையைச் சொல்ல வருகிற ஒருவன், “கழன்று விழும்வரை சிலரது முகமூடிகளை முகம் என்றே நம்பித் தொலைத்திருக்கிறோம்!” என்கிறான்.

உறவுகள், நட்புகளை மதிக்கத் தெரியாதவர்கள் இன்று பெருகிவிட்டார்கள். ஏதோ ஒன்றை அடைவதற்காக நட்பைப் பயன்படுத்துபவர்கள் அதிகமாகிவிட்டார்கள். அதனால்தான், நட்பின் பெயரில் கொடுக்கல் வாங்கல்களைச் செய்துவிட்டு, பின் திருப்பிக்கொடுக்கும் நாகரிகத்தைக் கடைப்பிடிக்கிறார்கள் இல்லை.

பணத்தை அபகரிப்பதற்காக, சொத்துக்களைத் தந்திர மாகப் பெற்றுக்கொள்வதற்காக நட்புக்களைக்கூடத் தூக்கி எறிந்துவிட்டுப் போகும் மனிதர்களை இன்று பார்க்கக் கூடியதாக இருக்கிறது. ‘பணத்தை நம்பிப் பிணமாய் வாழ்வதைவிட மனதை நம்பி மனிதர்களாய் வாழ்வது மேல்’ என்பதை மனிதர்கள் தங்கள் வேதமாகக் கொள்ளவேண்டும்.

**நட்பின் ஒருவகைச் சிறப்பு!**

ஒரு மாணவன் பரீட்சையில் சித்தியடைந்து விட்டான் என வைத்துக் கொள்வோம். அவனின் குடும்பத்தினரும் நெருக்கமானவர்களும் அவனுடன் சம்மந்தப்பட்டவர்களும் அவனின் பெறுபேற்றைக் குறித்துப் பெருமைப்படுவதோடு அதில் உரிமையும் கொண்டாடுவார்கள். அப்பா என்ன சொல்லியிருப்பார்! “என் மகன் எண்டு நிரூபிச்சிற்றாயடா!” என்றிருப்பார். அம்மா, “எல்லாம் கடவுள் செயல்!” என்றிருப்பாள். ஆசிரியர், “என்னுடைய படிப்பித்தல்தான் காரணம்!” எனக் கூறியிருப்பார். காதலி, “ஐ லவ்யுடா செல்லம்!” என்றிருப்பாள். நண்பன், “வாடா மச்சான் தண்ணியடிக்கலாம்! ” எனச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லியிருப்பான். நல்ல பெறுபேறு வந்து எல்லாம் நலமாக நடந்தால் மேற்சொன்னதுபோல நாடகம் நடந்தேறியிருக்கும்!

ஆனால், அவன் சித்தியடையவில்லை என்று வைத்துக் கொண்டால் மேற்சொல்லப்பட்டவர்களின் உணர்வுகள் எவ்வாறு வெளிப்பட்டிருக்கும்! அப்பா, "உதவமாட்டான் என அப்பவே எனக்குத் தெரியும்!" என்றிருப்பார். அம்மா, "எல்லாம், இந்த ரீவி, போனால வந்தது! " என்றிருப்பாள். ஆசிரியர், "பாஸ் பண்ணுவதற்குக் கொஞ்சமாவது படிச்சாத்தானே!" என விளக்கம் அளித்திருப்பார். காதலி, "இதுக்கு நான் பொறுப்பில்ல!" என்றிருப்பாள். நண்பன், "வாடா மச்சான் தண்ணி அடிக்கலாம்!" என்று கூறியிருப்பான்! மேற்கூறப்பட்ட அநுபவத்தோடு கூடிய விவரணம் எந்தளவிற்கு சரியானவை என்பது தெரியவில்லை! எனினும், நண்பனுடைய பதில் பொதுவாக இவ்வாறுதான் இருக்கும் என நம்பலாம்.

**நயவஞ்சகமான நட்பு!?**

நட்பால் விளைந்த பல நல்ல பயன்கள் உண்டு. அதேவேளை, நட்பை உயிருக்கு உயிராக மதித்தவர்களை பசுத்தோல் போர்த்திய புலியாக மாறி நயவஞ்சகமாக்கி நலினப்படுத்திய சம்பவங்களாக உலக வரலாற்றிலும் தமிழர்களாகிய எம்முடைய சரித்திரத்திலும் காணலாம்.

இதனைத்தான், 'அதுவே நடந்தது!' என்ற தலைப்பில் 2018 மாசி ஜீவநதி சஞ்சிகையில் எழுதியிருந்தேன்: "அன்று நடந்ததே எங்கள் மண்ணிலும் நடந்தது! இயேசுவுடன் யூதாஸ்! சீசருடன் புறூட்டஸ்! கட்டபொம்மனுடன் எட்டப்பன்! பண்டாரவன்னியனுடன் காக்கைவன்னியன்!... எது நடந்ததோ எம் மண்ணிலும் அதுவே நடந்தது!..."

இயேசுவின் சீடனும் நண்பனுமான யூதாஸ் ஸ்கரியோத்தின் காட்டிக்கொடுப்பு வரலாற்றில் உயிருக்கு நிகரான நட்புக்குச் செய்யப்படும் பெரும் பாவமாகக் கருதப்படுகிறது. இதுபோல, சீசரின் உயிர் நண்பனான புறூட்டஸ் சீசரைக் குத்திக் கொன்றபோது, "நீயுமா புறூட்டஸ்?" என்ற வார்த்தைகள் உயிருக்கு உயிரான நட்புக்குச் செய்யும் மாபெரும் துரோகமாக வரலாற்றில் பதியப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைபோல கட்டபொம்மனைக் காட்டிக்கொடுத்த எட்டப் பனினதும், பண்டாரவன்னியனைக் காட்டிக்கொடுத்த காக்கை வன்னியனினதும் வரலாறுகள் இன்றுவரை தொடர்வதாகவே தெரிகிறது!

ஈழத்துத் தமிழர்களுடைய வாழ்விலும் வரலாற்றிலும் நடந்தேறிய சோகமான - அவலமான துரோகத்தனங்களின் உச்சமே 2009 மே 18! ஈழத்துத் தமிழர்களின் உரிமைக்கான நீண்ட நெடிய போராட்ட வரலாறுகூட உள்நாட்டு, வெளிநாட்டுத் துரோகங்களால் முடக்கப்பட்டன என்று கூறுவதில் எத்தவறும் இருக்கமுடியாது.

**நல்ல நட்புக்கள் இன்றியமையாதவை!**

எத்தனை தந்திரங்களுக்கும் மந்திரங்களுக்கும் வஞ்சகங்களுக்கும் நட்பு உள்ளாகினாலும் ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் நல்ல நட்புகள் அவசியமானதும் கட்டாயமானதும் இன்றியமையாததும்கூட. ஒருவரின் வாழ்க்கை வசந்தமாவதற்கு நல்ல நட்புகள் கட்டாயமாகத் தேவை.

உணவுக்கு எப்படி உப்பு சுவையூட்டுகிறதோ அதே போல வாழ்க்கைக்கு சுவையூட்டுவது நல்ல நட்பாகத்தான் இருக்கும். அதனால்தான், "வாசனை என்பது சில நிமிடம் வரை, வறுமை என்பது சில காலம் வரை, அழகு என்பது வயது உள்ள வரை, நட்பு என்பது உயிர் உள்ள வரை!" என ஒருவர் குறிப்பிடுகிறார். ஆனால், நட்பு என்ற பெயரில் தீய நண்பர்களுடன் வைத்திருக்கும் உறவு ஒருவரின் வாழ்க்கையையே அழித்துவிடுகிறது. ஆக, நட்பை ஒருவர் எவ்வாறு ஆக்கிக்கொள்கிறார் என்பதில்தான் நட்பின் சிறப்புக்கள் அடங்கியிருக்கிறது.

சிலர் தாங்கள் எத்தனையோ ஆண்டுகால நண்பர்கள் எனப் பெருமை பாராட்டிக் கொள்வார்கள். ஆனால், அடிக்கடி கூடிக்கூடித் 'தண்ணி' அடிப்பதைத் தவிர வேறு எதனையும் அத்தனை ஆண்டுகளில் சிந்தித்திருக்கவோ அன்றேல் செயல்படுத்தியிருக்கவோ மாட்டார்கள். இதனை எப்படி நட்பாகக் கருதமுடியும்? இவர்களை எப்படி நண்பர்களெனச் சொல்லமுடியும்? வேண்டுமென்றால் 'தண்ணியடிக்கக்கூடும் தறுதலை நட்பு' எனப் பெயர் சூட்டலாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகநூல் நண்பன் ஒருவன் வரைந்ததுபோல 'நண்பன் என்றாலே நல்லவனென்று பொருளல்ல, சமூக விரோதிக்கும் நண்பன் இருக்கிறான்' என்ற சிந்தனையில் மிக ஆழந்த அர்த்தங்கள் உண்டு. ஏனெனில் ஒரு கள்ளனுக்கும் நண்பன் இருப்பான். சமூகத்தை சீரழிப்பவனுக்கும் நண்பனோ, நண்பர்களோ இருப்பார்கள்!

'எத்தனை எத்தனை நண்பர்கள் இருக்கிறார்கள் என்பதல்ல, ஒருவருக்கு எப்படிப்பட்ட நண்பர்கள் இருக்கின்றார்கள் என்பது மிகமிக முக்கியமானது.' எனவேதான், ஒவ்வொருவரும் தங்கள் நட்புப் பற்றியும், நண்பர்கள் பற்றியும் ஆய்ந்தறிந்து நண்பர்களாகிக் கொள்ளவேண்டும், நண்பர்களாக்கிக் கொள்ளவும் வேண்டும்.

**வள்ளுவன் கூறும் நட்பு**

"முகம்நக நட்பது நட்பன்று நெஞ்சத்து அகம்நக நட்பது நட்பு" என்று உலக மறையாம் திருக்குறள் கூறுகிறது. பார்த்தபோது முகம் மட்டும் மலர நட்பைக் காட்டுவது சிறந்த நட்பாகாது. அன்பினால் அகமும் மலர நட்பை வெளிப்படுத்துவதே சிறந்த நட்பாகும்.

நட்பின் உண்மையான தார்ப்பரியங்களை வள்ளுவர் மிக அழகாகத் தனது பத்து குறள்களில் வடித்திருக்கிறார். இத்தகைய நட்புக்கு இலக்கணமாக சீரோடும் சிறப்போடும் ஒரு மக்கள் கூட்டத்தினர் காலாகாலமாக வாழ்ந்து வந்திருக்கிறார்கள். அம்மக்கள் கூட்டத்தின் வாரிசுகள்தான் இன்றைய தமிழ்பேசும் மக்கள். ஆக இத்தகைய உயர்ந்த வாழ்க்கை முறையை இழந்து போகாதிருக்க வழிவகைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

"உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு" எனும்போது உடை நெகிழ்ந்தவனது கை உடனே நெகிழ்ந்துபோன உடையைப் பிடிப்பதற்கு உதவி செய்வதுபோல நண்பனுக்குத் துன்பம் வந்தால் அக்கணமே சென்று அதைக் களைவதுதான் நல்ல நட்பாகும் என்கிறது இன்னுமொரு குறள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நட்புக்கு இலக்கணமாய் இருப்போம்!**

"சுற்றமும் சூழலும் படைத்துவிட்ட உறவைக் காட்டிலும் இதயமும் உணர்வும் புரிந்துவிடுகின்ற உறவுகள் நிலைத்துவிடுகின்றன!" என்பார் எழுத்தாளர் பார்த்தசாரதி.

நல்ல நட்புகள் சாதி, சமயம், நிறம், இனம், மொழி, பணம் பார்ப்பது கிடையாது. குணம் ஒன்றையே பார்க்கும். நல்ல நட்புகளை வளர்ப்போம், நட்புறவில் வாழ்வோம், நல் நட்புகளுக்கு இலக்கணமாக இருப்போம்.

**மன்னா, செப்ரெம்பர் 2018**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 74 மரணமும் மறைபொருளே!

**சா(க)வும் பயம்!**

பெண் ஒருவருக்கு தான் வாழ்ந்துவந்த நகரிலிருந்து ஐந்நூறு மீற்றர் தொலைவில் வேலை கிடைத்தது. தங்குவதற்கு வசதியான விடுதியும் கிடைத்தது. அதனால், கணவனிடம் விடைபெற்றுக்கொண்டு தன் வீட்டைவிட்டுக் குறித்த நிறுவனம் கொடுத்த விடுதியில் தங்கிநின்று பணியாற்றச் சென்றாள். அங்கு சென்றவள், அப்புதிய இடத்திலிருந்து கணவனுக்கு 'எஸ்எம்எஸ்' அனுப்பிவைத்தாள்.

அது, தவறுதலாக வேறொரு நபருக்குப் போய்ச் சேர்ந்தது. அந்நபர் அம்மாலை வேளையில்தான் இறந்துபோன தன் மனைவியை அடக்கம் செய்துவிட்டு வந்திருந்தார். அந்த 'எஸ்எம்எஸ்'சைப் படித்துவிட்டு அம்மனிதர் மயங்கி விழுந்துவிட்டார்.

மயங்கி விழுந்தவரை மருத்துவமனையில் சேர்த்தார்கள். மயங்குவதற்கான காரணம் என்ன என மயக்கம் தெளிந்தபோது மருத்துவர் கேட்டார். அந்நபர் 'எஸ்எம்எஸ்'தான் காரணம் என்று கூறுகின்றார். அப்படி என்னதான் 'எஸ்எம்எஸ்'இல் இருக்கின்றது என நினைத்துக்கொண்டு மருத்துவர் அதனைப் படித்துப் பார்த்தார். இதுவே 'எஸ்எம்எஸ்'இல் இருந்த விடயம்: 'நான் நல்ல படியாக இங்கு வந்து சேர்ந்துவிட்டேன். தங்குவதற்கு வசதியான வீடும் கிடைத்துள்ளது. நீங்கள் என்னைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். முடிந்தால் இரண்டொரு நாள்களில் உங்களையும் அழைத்துக்கொள்கின்றேன்!' எனக் குறிப்பிடப்பட்டிருந்தது!

இவ்வுலகில் எவ்வளவு காலத்திற்கு வாழமுடியுமோ அவ்வளவு காலத்திற்கு வாழ்ந்துவிடவேண்டும் என்பதுதான் பொதுவாக அனைவருடைய விருப்பாகவும் இருந்து விடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரும் இறப்பதற்கு விருப்பப்படமாட்டார்கள். நோயினால் துன்பப்படுகின்றவர்களும் முதுமையினால் அல்லல் படுகின்றவர்களும் 'வாழ்ந்தது போதும்' என அடிக்கடி கூறிக்கொண்டாலும் இறந்து போவதற்கு அவர்கள் விரும்புவதில்லை. இன்னுமொரு வகையில் கூறுவதானால், இறப்பதற்கு எல்லாருக்கும் பயம் இருக்கின்றது என்பதைத்தான் மேற்சொன்ன சம்பவம் சித்தரித்து நிற்கின்றது!

'சா' வானது வாழ்வைப் பார்த்து, "ஏன் உன்னை அன்புசெய்து, என்னை வெறுக்கின்றார்கள்?" எனக் கேட்கின்றது. அதற்கு வாழ்க்கை, "ஏனென்றால், நான் அழகான பொய். நீ கசப்பான உண்மை!" என்றதாம். வாழ்வின் ஒரு பக்கத்தினையும் 'சா'வின் ஒரு பக்கத்தினையும் இது படம்பிடித்துக் காட்டுகின்றது!

**தேவையானபோது பயன்படுத்துங்கள்!**

ஒரு தடவை தென்கட்சி சுவாமிநாதன் 'மின்' மயானம் ஒன்றைத் திறப்பதற்கு அழைக்கப்பட்டிருந்தார். அந்நிகழ்வில் ஓர் உரையும் ஆற்றவேண்டியிருந்தது. அவ்விடத்தில் என்ன உரை ஆற்றுவது? ஒருகணம் யோசித்துவிட்டு, "இதை எல்லாரும் பயன்படுத்துங்க என்று நான் சொல்லமுடியாது. அதனால், யாருமே பயன்படுத்தல்லண்ணா 'மெசின்' கெட்டுப்போயிரும். அதனால், யார்யாருக்கு எப்ப எப்ப தேவையோ, அப்ப அப்ப பயன்படுத்துங்க!" என்றாராம்.

கோபமாகக் கதைத்தால் யாரென்றாலும் 'ரென்ச'னாகி விடுவார்கள். அதனால், குறிப்பாகக் கடவுளிடமும் மருத்துவரிடமும் கோபமாகப் பேசக்கூடாதாம்! காரணம், கடவுள் 'ரென்சன்'ஆனா நோயை வரவழைத்து மருத்துவரிடம் அனுப்பிவிடுவாராம். மருத்துவர் 'ரென்சன்'ஆனா கடவுளிடம் அனுப்பிவிடுவாராம்! ஆகவே, கோபப்படுவதைத் தவிர்த்தால் கொஞ்சம் கூடக்காலம் வாழலாம்!

**சத்திரத்தில் வாழும் மனிதர்கள் நாம்!**

ஒரு ஜென் துறவி நடை பயணமாக ஒரு நாட்டிற்குச் சென்றார். அவர் போதனைகளைக் கேட்ட மக்கள் அவரைப் புகழ்ந்தார்கள். இதைக் கேள்வியுற்ற மன்னன் அவரைத் தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாளிகைக்கு வருமாறு அழைத்தான். துறவியும் வருவதாக ஒப்புக்கொண்டார். அவர் வரும் நாளில் மாளிகையை அலங்காரப்படுத்தி அமர்க்களமாய் வைத்திருந்தான் மன்னன். துறவியும் மாளிகைக்கு வந்தார். மன்னன் பெருமிதத்தோடு வரவேற்றான்.

மன்னரைப் பார்த்த துறவி, 'நீங்கள்தான் இந்தச் சத்திரத்தின் உரிமையாளரா?" என்று கேட்டார். "இவ்வளவு பெரிய மாளிகையைப் போய்ச் சத்திரம் என்கிறாரே!" என்று மன்னனுக்குக் கடுமையான கோபம் வந்தது. எனினும் அதனைக் காட்டிக்கொள்ளாமல் அந்தத் துறவிக்கு மாளிகையைச் சுற்றிக் காட்டியவாறே, "தங்களுக்கு நான் என்ன செய்யவேண்டும்?" என்று அடக்கமாகக் கேட்டான். "நான் தூங்க இந்தச் சத்திரத்தின் ஓரத்தில் கொஞ்சம் இடம் கொடுத்தால் போதும்!" என்றார் துறவி.

இதற்கு மேலும் கோபத்தை வெளிக்காட்ட முடியாமல் போனது மன்னனுக்கு. அதனால் மன்னன், "இவ்வளவு பெரிய மாளிகையைப் போய்ச் சத்திரம் என்கின்றீர்களே! இது, உங்களுக்கு சரியாகப்படுகின்றதா?" என்று கேட்டார்.

துறவியோ, "உனக்கு முன் இந்த மாளிகைக்குச் சொந்தக்காரர் யார்?" என்று கேட்டார். "எனது தந்தை. அவர் இறந்து பத்து ஆண்டுகள் ஆகின்றது" என்றான் மன்னன். "உன் தந்தைக்கு முன், யார் இந்த மாளிகைக்குச் சொந்தக்காரர்?" என்று கேட்டார். அதற்கு "எனது தாத்தா. அவர் இறந்து ஐம்பது ஆண்டுகள்!" என்றான் மன்னன். "ஆக, மனிதர்கள் சிலகாலம் வந்து தங்கிச் செல்லும் இடத்திற்குச் சத்திரம் என்றுதானே பெயர்!" என்றார் அத்துறவி.

எதுவும் நிரந்தரமில்லை என்பதைப் புரிந்துகொண்ட மன்னன், ஜென் துறவியின் காலில் விழுந்து ஆசிபெற்றான். ஆம்! இந்த உலகமே வாடகை வீடு. அதில் நாமெல்லாம் வாடகைக்காரர்களாக வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். ஆக, உலகமே ஒரு சத்திரம்தான் என்பதைப் புரிந்துகொண்டால் வாழ்க்கைப் பயணத்தில் பயணிக்குரிய பக்குவத்தோடு பயணிக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கண்ணிமைப் பொழுதுதான் வாழ்வு!**

வாழ்க்கை மலர் போன்றது. மலர், காலையில் தோன்றி மாலையில் மறைகின்றது. அவ்வாறே வாழ்க்கையும்! ஒரு நேரத்தில் தொடங்கி இன்னுமொரு நேரத்தில் முடிகின்றது. வாழ்க்கை நீர்க்குமிழி போன்றது. கண்முன்னே தோன்றி மறைவது!

இவ்வநுபவங்களோடு, 'கண்ணைத் திறந்தால் வாழ்வு, கண்ணை மூடினால் சாவு, கண்ணிமைப் பொழுதுதான் நம் வாழ்வு' என்ற கருத்தியல் வாழ்க்கை குறித்து ஆழ்ந்த சிந்தனையைத் தருகின்றது. இவ்வாறு, வாழ்வின் குறுக்கத்தைப் பற்றி வாழ்வின் நிலையாமையைப் பற்றிப் பேசுகிறார்கள், எழுதுகிறார்கள்.

ஆனால், மனிதர்களின் செயற்பாடுகளைப் பொதுவாகப் பார்க்கின்றபோது ஏதோ இவ்வுலகில் நிரந்தரமாகத் தொடர்ந்து இருந்து விடப்போகின்றவர்கள் போலவே நடந்துகொள்கிறார்கள்! அதிகாரத்தைப் பிரயோகிப்பது, சொத்துக்களைக் குவிப்பது, அடுத்தவர்கள்மேல் ஆதிக்கம் செலுத்துவது, திட்டங்களைத் தீட்டுவது போன்ற வாழும் முறைகளிலிருந்து இருந்து இப்போக்கினை அவதானிக்கலாம்.

ஆனால், நோய்வாய்ப்பட்டோ அல்லது இறப்பின் பிடியில் நிற்கின்றபோதுதான் பலருக்கும் சுடலை ஞானம் பிறக்கின்றது. அதனால், எப்பயனும் யாருக்கும் ஏற்படுவதில்லை! இவ்வுண்மையைத் திருமந்திரம், "ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்/ பேரினை நீக்கிப் பிணமெனப் பேரிட்டுச்/ சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச்/ சுட்டிட்டு நீரில்மூழ்கி நினைப்பொழிந்தார்களே" என அழகுபடச் சித்தரிக்கின்றது.

**இறப்பவர், இருப்பவர் கண்ணைத் திறக்கின்றனரா?**

'இந்த உலகமும் வாழ்க்கையும் சிலகாலம்தான். அதற்குள் வாழ்ந்துவிடுங்கள்' என்ற கருத்து, வாழ்வை அர்த்தமுள்ளதாக்கின்றது. 'இறக்கத்தான் பிறந்தோம், அதுவரை இரக்கத்தோடு இருப்போம்' என்கின்ற புனித அன்னை திரேசாவின் கூற்று வாழும்முறைகளை வளமாக்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், இத்தகைய புரிதல் எந்தளவிற்கு மனிதர்களின் மனங்களில் இன்றுள்ளது? ஏனென்றால், என்றுமில்லா அளவிற்கு 'நான் வாழ்ந்தால் போதும் - நான் வளர்ந்தால் போதும் - நான் உழைத்தால் போதும் - நான் உண்டால் போதும்' என்ற சுயநலப் போக்கால் இன்றைய உலகம் தட்டுத் தடுமாறிக்கொண்டிருப்பதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது!

'ஒவ்வொரு மனிதனும் இறக்கின்றான் - அவன் இருப்பவர் கண்ணைத் திறக்கின்றான்' என்றும், 'இறந்தவனைச் சுமப்பவனும் இறந்திற்றான் - அதை இருப்பவனும் எண்ணிப்பார்க்க மறந்திற்றான்' என இறப்பைக் குறித்து கவியரசு கண்ணதாசன் பாடுவார்.

இக்கூற்றுக்கள் மனிதனுடைய உயர் வாழ்வுக்கான அழைப்பை எடுத்துக்கூறினாலும் எந்தளவிற்கு இவற்றை மனிதன் செவிசாய்க்கின்றான், எந்தளவிற்கு இவற்றை மனிதன் இதயத்தில் இருத்தி வாழுகின்றான் என்பது சுனாமிப் பேரலை போன்று எழுந்துநிற்கும் பெரும் கேள்வி!

**உங்களுடன் இணைந்த என் பயணம் குறுகியது!**

ஓர் இளம் பெண்மணி பேருந்து ஒன்றில் பயணம் செய்துகொண்டிருந்தாள். தரிப்பிடம் ஒன்றில் பேருந்து நின்றபோது வயதான, கடும்போக்கான ஒரு பெண்மணி அவ்விளம் பெண்மணி அருகில் வந்து அமர்ந்துகொள்கின்றாள். தனது இருக்கையில் இருந்ததோடு அல்லாமல் அவ்விளம் பெண்மணியையும் தள்ளியபடி தன் பயணப்பைகள் பலவற்றை அவள்மீது சரிந்து விழும்படிசெய்து அவளுக்கு பெரும் அசௌகரியத்தை ஏற்படுத்துகின்றாள்.

இத்தனைக்கும் அவ்விளம் பெண் எவ்வித எதிர் வினையையும் காட்டவில்லை. சாதாரணமாக நடந்து கொள்கின்றாள். பின் இருக்கையில் இருந்த சிலர் இத்தனை நெருக்கீடுகளுக்கும் அவ்விளம் பெண் ஒன்றும் கூறாமல் இருப்பதையிட்டு ஆச்சரியப்படுகின்றார்கள்! அவ்விளம் பெண்ணின் பின்னிருக்கையில் இருந்தவர்களில் ஒருவர், 'என்னயிது? இத்தனை அசௌகரியங்களை உன்மீது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்துகின்றாள்! ஒன்றும் சொல்லாமல் மௌனமாய் இருக்கின்றாயே!?' எனச் சற்று விசனத்துடன் கேட்கின்றார். அவ்விளம் பெண் புன்னகையுடன், "பெரிதுபடுத்தத் தேவையில்லாத ஒன்றைக் குறித்து கடுமையாக நடந்து கொள்ளவோ அல்லது விவாதிக்கவோ வேண்டிய அவசிய மில்லை. காரணம், நாங்கள் சேர்ந்து செல்லும் பயணம் மிகக் குறுகியது. நான் அடுத்த தரிப்பிடத்திலேயே இறங்கிவிடுவேன்" என்கின்றாள்.

இவ்விளம் பெண்மணியின் கூற்று உண்மையில் மிகப் பெறுமதி வாய்ந்தது. அக்கூற்று, பேருந்துப் பயணத்தைவிட வாழ்க்கைப் பயணத்திற்கு மிகப் பொருத்தமானது! "பெரிதுபடுத்தத் தேவையில்லாத ஒன்றைக் குறித்துக் கடுமையாக நடந்துகொள்ளவோ அல்லது விவாதிக்கவோ வேண்டிய அவசியமில்லை. காரணம், நாங்கள் சேர்ந்து செல்லும் பயணம் மிகக் குறுகியது. நான் அடுத்த தரிப்பிடத்தில் இறங்கிவிடுவேன்."

**உணர்ந்தால் உயர்வு!**

நாம் வாழும் காலம் மிகக் குறுகியது என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்துகொண்டால் வீணான சச்சரவு களும், பயனில்லாத விவாதங்களும், மன்னிக்க முடியாத மனநிலைகளும், அடுத்தவரை அந்நியப்படுத்தும் அசிங்கங்களும் பயனற்றவை என்பதோடு எங்கள் காலத்தையும் சக்தியையும் வீண்விரயமாக்கும் செயல் என்பதையும் புரிந்துகொள்ளலாம். அத்துடன் நம் வாழ்நாள்களை நமக்கும் அடுத்தவருக்கும் பயனுள்ளவையாக, பெறுமதி வாய்ந்தவையாக, மதிப்புக்குரிய னவாகவும் மாற்றிக்கொள்ளலாம்.

யாராவது உங்கள் உள்ளத்தை நோகடித்திருந்தால் அமைதியாய் இருங்கள், காரணம், அவர்களுடன் சேர்ந்த உங்கள் பயணம் குறுகியது. எவராவது உங்களை அவமானத்துக்கு உள்ளாக்கி இருந்தால் பொறுமையாய் இருங்கள், காரணம், அவர்களுடன் சேர்ந்த உங்கள் பயணம் மிகக் குறுகியது. யாரேனும் உங்களை ஏமாற்றி இருந்தால் அமைதியாய் இருங்கள், காரணம், அவர்களுடன் சேர்ந்த உங்கள் பயணம் மிகக் குறுகியது. பல சிக்கல்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருக்கடிகளையும் மற்றவர்கள் வேண்டுமென்றே ஏற்படுத்து கிறார்களா? பொறுமையாய் இருங்கள், காரணம், அவர்களுடன் சேர்ந்த உங்கள் பயணம் மிகக் குறுகியது.

இப்பயணத்தில் யார்யார் எங்கெங்கு இறங்கிக் கொள்வார்கள் என்று எவருக்குமே தெரியாது! ஆயினும், அவர்களுடன் சேர்ந்து செல்லும் பயணம் மிகக் குறுகியது என்பதை மட்டும் எல்லோரும் அறிவர். ஆகவே, குடும்பத்தினருடனும் நண்பர்களுடனும் சேர்ந்து பணி செய்பவர்களுடனும் சந்திக்கும் சக மனிதர்களுடனும் பெருமதிப்புடன் நடந்துகொள்வதும் அவர்களுடன் அன்புடனும் மதிப்புடனும் ஒழுகுவதும் மிகமிக அவசியமானதே.

**வாழும்போதே நற்பணிகள் ஆற்றவேண்டும்**

'நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை மேற்சென்று செய்யப்படும்' என பொதுமறையாம் திருக்குறள் நிரந்தரமில்லா இவ்வாழ்க்கையில் நற்பணிகள் ஆற்றவேண்டும் எனக் கூறுகின்றது. வாழ்க்கையின் நிலையாமையை உணர்ந்து நம்முயிர் இருக்கும்போதே உயர்ந்த நற்பணிகளை ஆற்றிட முனைய வேண்டும்.

மேலும், 'ஒருபொழுது வாழ்வது அறியார் கருதுப கோடியும் அல்ல பல' அதாவது, ஒரு பொழுதுகூட வாழ்க்கையைப் பற்றி உண்மையைச் சிந்தித்து அறியாதவர்களே, ஆசைக்கோர் அளவின்றி மனக்கோட்டைகள் கட்டுவார்கள் எனவும் கூறிநிற்கின்றது.

**எப்பக்கம் நற்பக்கம்?**

கிரேக்க நாட்டு சிந்தனையாளர், மெய்யியலாளர் சோக்கிரட்டிஸ் 'நாட்டை நாசமாக்குகின்றான்! ' எனப் பொய்க்குற்றம் சுமத்தப்பட்டு அந்நாட்டு நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்துடன் நஞ்சேற்றப்பட்டு கொல்லப்பட்டார். இவ்வாறு கொலை செய்யப்படுவதற்கு முன்பாக தன்னருகில் நின்றவர்களைப் பார்த்து சோக்கிரட்டிஸ், 'இதோ இப்போது நாம் பிரிந்து செல்வதற்கான தருணம் வந்துவிட்டது. நான் சாவின் பக்கம், நீங்களோ வாழ்வின் பக்கம்! எப்பக்கம் நற்பக்கம் என்பதை யாரறிவார்?' எனக் கூறியபோது அவர்கள் அதிர்ச்சியடைந்தார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழவேண்டிய ஒரு மகான் கொல்லப்பட இருந்த வேளையிலும் இறப்போடு, இவ்வுலக வாழ்க்கையோடு எல்லாம் முடிந்து விடுவதில்லை என்ற ஓர் உண்மையினை அவரின் உறுதிப்பாட்டினை அவருதிர்த்த அவ்வார்த்தைகள் வெளிப்படுத்துகின்றன.

**இறப்பைக் கடந்தும் வாழ்வுண்டு!**

பாலியல் வன்கொடுமை புரியவந்த உளவுத்துறை அதிகாரியைக் கொலை செய்தார் என்று குற்றம் சுமத்தப்பட்ட ஈரானைச் சேர்ந்த இருபத்தாறு வயதான இளம்பெண் ரெஹனா ஜப்பாரிக்கு, பல சர்வதேச அமைப்புக்களின் எதிர்ப்புக்களையும் புறந்தள்ளி 2014.10.18இல் அநியாயமாகத் தூக்குத்தண்டனை நிறைவேற்றப்படுகின்றது.

அவள் கொல்லப்படுவதற்கு முன் தன் தாய் சோலே என்பவருக்கு தன் குரலால் பதிப்பித்த ஒலிநாடாவை அனுப்பியிருந்தாள். மிகவும் இறுக்கமான ஓர் இஸ்லாமிய சமூக சூழலில் வாழ்ந்துகொண்டிருந்த இருபத்தாறே வயதான இளம் பெண்ணின் வீரமிக்க துணிச்சலும், உறுதியான உளப்பலமும், இறப்பின் பின்னர் இறைவனின் இறையரசு பற்றிய விடயங்களும் அவ்வொலி நாடாவில் இடம்பெற்றிருக்கின்றன.

“அன்புத் தாய் சோலே! குற்றம் இழைத்ததாகக் குற்றம்சாட்டப்பட்ட நான் சட்டப்படி அதற்குப் பதிலடியாகத் தண்டனையை அனுபவிக்க வேண்டிய கட்டத்தில் இருக்கிறேன்” என ஆரம்பித்தவள் ஓரிடத்தில், “சாவு ஒன்றே வாழ்க்கையின் கடைசி அல்ல என்பதை நீயும் அறிவாய்” எனக் குறிப்பிடுபவள், “இறப்பதற்கு முன்னால் உன்னிடம் ஒன்றை யாசிக்கிறேன்!... நீ எனக்காக நீதிபதிகளிடம் பிச்சை கேட்காதே என்று கூறிய நானே சொல்கிறேன். இப்போது நீ எனக்காக நீதிபதிகளிடம் பிச்சை கேட்டாலும் தவறில்லை அம்மா! நான் வெறும் கழிவாக இந்தப் பூமியில் விழ விரும்பவில்லை. என்னுடைய அழகிய கண்களும், தூய இதயமும் இந்த மண்ணோடு மண்ணாக வீணாகப் போய்விடக் கூடாது. என்னைத் தூக்கில் போட்டதும் என்னுடைய கண்கள், இதயம், சிறுநீரகம், எலும்புகள்: இன்னும் என்னவெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் உடலிலிருந்து எடுத்து மற்றவர்களுக்குப் பயன்படுத்த முடியுமோ அதையெல்லாம் தேவைப்படுபவர்கள் எடுத்துக் கொள்ளட்டும். நான்தான் கொடுத்தேன் என்று யாருக்கும் தெரியவேண்டாம். கடவுளின் அரசில் நான் அந்த இன்ஸ்பெக்டர் சாம்லு, அந்த நீதிபதி, அவர்கள் மீது வழக்குத் தொடுப்பேன். இன்ஸ்பெக்ரர் சாம்லு, அந்த நீதிபதி, உச்ச நீதிமன்ற நீதிபதிகள் எல்லாரும் பதில் சொல்லியாக வேண்டும். டாக்ரர் ஃபர்வான்டி, காசிம் சாபானி எல்லோர் மீதும் கடவுளின் நியாய ஸ்தலத்தில் வழக்குத் தொடுப்பேன்" என்பதன் ஊடாக ஒரு மதத்தினைக் கடந்து ஒரு மனிதத்தின் ஊடாக வெளிப்படும் மறுவாழ்வுபற்றிய மாபெரும் உண்மை புலனாகின்றது.

**வாழ்வுக்குப் பின் வாழ்வுண்டு!**

உண்மையில், இறப்பிற்குப் பின்னர் வாழ்வு உண்டா என்று எண்ணுவது ஒருபுறமிருக்க, ஒவ்வொருவரின் இறப்புக் கும் முன்னர் வாழ்வு சரியாக, முறையாக, சிறப்பாக வாழப் படுகின்றதா எனச்சிந்திப்பது சிறந்தது.

இறப்புக்கு முன்னரான ஒருவரின் வாழ்க்கைத் தரம், இறப்புக்கு பின்னரான அவரின் வாழ்வின் தன்மையைத் தீர்மானிக்கின்றது என்று சொல்வதில் பிழையிருக்காது என்றே தெரிகின்றது.

சமயப் படிப்பினைகளை நோக்குகின்றபோது பொதுவாக அனைத்துச் சமயங்களும் இறப்பின் பின்னர் 'முடிந்தது முற்றும்!' என்று சொல்வதில்லை. இறப்பின் பின் வெவ்வேறு வடிவங்களினாலான வாழ்க்கையைக் கோடிட்டுக் காட்டுவதைப் பார்க்கலாம். ஏனெனில், இறைவன் மனிதனைப் படைத்தான் என்றால், படைப்பு என்பது புதிய உருவாக்கம். எனவே, புதிய உருவாக்கத்தில் தொடங்கி அழிவில் முடியமுடியாது!

அதனால்தான், இவ்வுலக வாழ்க்கை இறப்பின் பின்னர் மாறுபடுகின்றதே அன்றி அழிக்கப்படுவதில்லை என்கின்றது புனித விவிலியம். இவ்வுலக வாழ்க்கையின் பின் இன்னுமொரு வாழ்க்கை உண்டு என்பது உறுதியாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**இறப்பு நிறைவாகலாம்!**

உலகில் எவராலும் தவிர்க்கமுடியாத ஒன்றாக இற்றைவரை இருந்துவருவது இறப்பு ஒன்றேதான். அது அனைவரையும் அரவணைத்தே தீரும். ஆனால், வாழ்க்கைப் பயணத்தில் அது நினையாத நேரத்தில் நினையாத வடிவத்தில் வந்தாலும் அதனைச் சந்திக்கும்போது நிறைவாகச் சந்திக்க முடியும் என்பதை பல ஞானிகளும், சித்தர்களும், புனிதர்களும், மகான்களும் வாழ்ந்துகாட்டிச் சென்றிருக்கின்றார்கள்.

எவ்வாறென்றால், வாழும்போது வாழ்வின் பொருளுணர்ந்து வாழுகின்றபோது வாழ்க்கை முழுமை பெறுகின்றது. அம்முழுமையின் நிறைவாகவும் இறப்பினைப் பார்க்கலாம்.

ஆகவேதான், இவ்வுலக வாழ்க்கைப் பயணத்தின் நோக்கத்தினை முழுமைப்படுத்தி அவ்விலக்கினை அடைந்த போது 'எல்லாம் நிறைவேறிற்று' என்று சொல்லி உயிரைக் கையளிக்க இயேசுவால் முடிந்தது.

ஆயினும், நிறைவாக, இறைவனைப்போல மனிதனும் மறைபொருள்தான். மனிதனைப்போல அவன் சந்திக்கும் மரணமும் ஒரு மறைபொருள்தான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**75**

# நாய்களும் நாங்களும்!

**நாய்களின் தாயும் சேயும்**

என்னுடைய நண்பர் ஒருவர் தனிமையாக வாழ்ந்துவந்த வயோதிபத் தாய் ஒருவரைச் சந்திப்பதற்காகச் சென்றிருந்தார். அவ்வயோதிபத் தாய் ஏறக்குறைய பன்னிரெண்டு நாய்களை வளர்த்து வருகின்றாள். இதனால், அத்தாயின் வளவிற்குள் செல்வது நண்பருக்குப் பெரிய பயங்கர அநுபவமாகிவிட்டது!

பன்னிரெண்டு நாய்களும் சேர்ந்து குரைத்துக்கொண்டு கடிக்கவந்தால் எப்படி இருக்கும்? பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளான நண்பர் ஒருவாறாக அச்சந்திப்பை முடித்துவிட்டு வந்துவிட்டார். அச்சந்திப்புப் பற்றி பின்னர் குறிப்பிட்டபோது, “பன்னிரெண்டு நாயோடு தாய் நாயையும் சேர்த்து அவ்வீட்டில் பதின்மூன்று நாய்களைப் பார்த்துவிட்டு வந்தேன்!” என்றார். தனது பிள்ளைகள் இருந்தும் தான் தனியாக இருக்கவேண்டும், எவரின் உதவியும் தனக்குத் தேவையில்லை என அடம் பிடித்துக் கொண்டு, தனது சொத்துக்களை யாரும் சூறையாடிவிடுவார்கள் என்று கூறிக்கொண்டு, யாருடைய உதவியையும் நாடாது ‘தனிக்காட்டு ராணி ’யாக அவள் வாழ்ந்து வருவதாகக் குறிப்பிட்டார் நண்பர்.

பனிரெண்டு நாய்களுக்கும் ஒரு தாயென்றாலும் தேவையல்லவா! அவ்வகையில்தான் தலைப்பு வரையப் பட்டிருக்கின்றது என்பதை வாசகர்கள் புரிந்துகொள்வார்கள் என்பதில் நம்பிக்கை உண்டு!

சில வீடுகளின் வெளி வாசல்களில் ‘கடிநாய் கவனம்’ என எழுதப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். வளர்ப்பு நாய்களிடம் இருந்து பொதுவாகத் தப்பிவிடலாம். ஆனால், வீடுகளில் ‘இருக்கின்றவை’களிடம் இருந்து தப்பிப் பிளைப்பது கடினமான தாகிவிடும். ஆக, மேற்சொன்னதைச் சிறு திருத்தத்தோடு, ‘இவ்வீட்டில் கடிநாய்கள் உண்டு. கவனம்!’ எனப் புரிந்து கொள்வதுதான் உசிதமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"நாயே! உனக்குமொரு நாடா?"**

'நாயே உனக்குமொரு நாடா' எனத் தொடங்கும் வார்த்தைகளில் ஈழத்துக் கவிஞர் காசியானந்தன் ஒரு பாடல் எழுதியிருந்தார். அப்பாடல் வரிகளின் பொருள் இன்னும் நம் ஈழவள நாட்டிற்குப் பொருந்துவதாகவே தெரிகின்றது. இவ்வுருவகத்தின் ஊடாக பல சங்கதிகளைச் சொல்லவிளைகின்றார் கவிஞர். இப்பாடலை வைத்துக்கொண்டு பல தரத்தாரையும் உருவகிக்கலாம்போல் தோன்றுகின்றது.

இப்பாணியில்தான், 'கேவலம்' என்றொரு கவிதையை சில ஆண்டுகளுக்குமுன் நம் நாட்டில் நிலவிய அரசியல் சூழலை மனதிற் கொண்டு, "எங்கள் பிள்ளைகள் வேட்டையாடப்பட்டபோது இம்மண்ணில் தெருநாய்கள்கூட பத்திரமாய்ப் பாதுகாக்கப்பட்டன!" என எழுதியிருந்தேன். ஏனெனில் நாய்களைக் கொல்வது சட்டப்படி குற்றமாகவும் 'பயங்கரவாதிகள்' என்ற போர்வையில் மனிதர்களைச் சுட்டுத்தள்ளுவது வீரமாகவும் கருதப்பட்ட காலமது!

ஒருவகையில், ஈழவள நாட்டில் வாழும் அனைத்து இனக் குழுமங்களுக்கும் இப்பாடல் பொருந்துவதாகக் கொள்ளலாம். ஏனெனில், இத்தனை ஆண்டுகள் புரையோடிப்போன இனப் பிரச்சினைக்கு மூன்று, நான்கு தசாப்த காலமாக, எத்தனையோ உயிர்களை இழந்த பின்னரும் சுமுகமான ஒரு சூழல் நிலவும் இக்காலத்தில்கூட அரசியல் தீர்வைக் காணமுடியாத நம் தலைவர்களைப் பார்த்து, 'நாயே உனக்குமொரு நாடா?' என்று கேட்பதில் என்ன தவறு இருக்கின்றது? சரியாகத்தானே கவிஞன் பாடியிருக்கின்றான் எனச் சொல்லத் தோன்றுகின்றது.

அடுத்து, தமிழ் தேசியத்தை எடுத்துக்கொண்டால் இக்கட்டத்தில் என்னவென்று சொல்வது! 2018ஆம் ஆண்டில் நடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வடமாகாணத்தில் பெரும்பான்மை இருக்கைகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பெற்றுக் கொண்டது. அப்படியிருந்தும் எலும்புத் துண்டைக் கண்டால் வாலை வளைத்து நிற்கும் நாய்களைப் போல சில இலட்சங்களுக்காக உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் வெற்றியீட்டிய தமிழ்த் தேசிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டமைப்பின் உறுப்பினர்களில் சிலர் பெரும்பான்மை இனக்கட்சிகளுக்கு இரகசியமாக ஆதரவு தெரிவித்து சில உள்ளூராட்சி மன்றங்களைப் பெரும்பான்மை இனக்கட்சிகள் கைப்பற்றக் காரணமாய் ஆகியிருக்கின்றார்கள். இவர்களைப் பார்த்து, 'நாயே உனக்கு மொரு நாடா?' என்று கேட்க வேண்டும்போல இருக்கின்றது. அப்படிக் கேட்பதில்தான் என்ன பிழை இருக்கிறது?

**"நாணும் அச்சமும் நாய்கட்கு!"**

'ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம்' எனத் தொடங்கி, 'நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்' என மகாகவி பாரதியார் பாடுகின்றபோது பெண்ணடிமைத்தனத்தில் இருந்து பெண்கள் விடுதலை பெறவேண்டும் என்ற உன்னத நோக்கு பாரதியை இவ்வாறாகப் பாடவைத்தது.

பெண்கள் என்பவர்கள் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய அக அணிகலங்களைக் கொண்டிருக்கவேண்டும். ஆனால், இதனையே அடிமைச் சங்கிலிகளாக ஆக்கி அவர்களைக் காலங்காலமாக அடுப்பபடியில் அடிமைகளாக வைத்திருந்தார்கள். இக்கொடூரமான நிலைகண்டு கொதித் தெழுந்தான் பாரதி. அதன் விளைவுதான் பாரதியின் 'நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்' என்ற பாடல்!

எனினும், பாரதி கண்ட புதுமைப்பெண்ணை இன்னும் எதிர்பார்த்துக் காத்துக்கிடக்கவேண்டி இருப்பதுதான் துர்ரதிஸ்டவசமாகும்.

**இயேசுவின் பார்வையில்!**

"பிள்ளைகள் வயிறார உண்ணட்டும். பிள்ளைகளின் உணவை எடுத்து நாய்க்குட்டிகளுக்குப் போடுதல் நல்லதல்ல" என இயேசுவின் போதனை(மாற்கு7:27) ஒன்றில் புலப்படும் வாக்கியம் விவிலியப் பார்வையில் மிக ஆழந்த ஓர் அர்த்தத்தினைக் கொடுக்கின்றது. அதாவது பிள்ளைகளின் உணவை நாய்க் குட்டிகளுக்குப் போடுவது நல்லதல்ல என்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொன்றையும் அதற்குரிய தரத்தில் வைத்துப் பேணவேண்டும், ஒவ்வொன்றிற்குரிய மதிப்பையும் அவற்றுக் குரிய வகையில் கொடுக்கவேண்டும் என்பதே மேற்கூறப்பட்ட வாக்கியத்தின் பொருளாகின்றது.

அவ்வாறெனில், பிள்ளைகள் உறங்கும் கட்டிலில் நாய் பூனை போன்ற செல்லப் பிராணிகளை வைத்திருப்பது, அத்தகைய இடத்தைக் கொடுப்பது ஏற்புடையதல்ல. சில பேர்வழிகள் ஒரு குழந்தைக்குச் செலவிடும் பணத்தைவிட அதிகமான தொகையை நாய் பூனை போன்ற பிராணிகளுக்குச் செலவிடுகின்றார்கள். இது நியாயமானதல்ல என்பதை அவர்கள் நினைத்துப் பார்ப்பது கிடையாது!

நாய், பூனை போன்றவை தாங்களாகவே தங்கள் உணவைத் தேடும் ஆற்றலைக் கொண்டிருக்கின்றன என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

மேலும், மனிதன் பரிணாம வளர்ச்சி அடைவதற்குப் பலநூறு ஆண்டுகளுக்கு முன்பே நாய் பரிணாம வளர்ச்சி அடைந்துவிட்டது என்று பத்து ஆண்டுகளாக நாய்கள் பற்றி ஆய்வுகள் நடத்திவரும் டொக்ரர் ஜெக் செங் சுட்டிக் காட்டுகின்றார். இன்னும் மனிதருக்குத்தான் நாய்கள் வேண்டுமே தவிர மனிதர் இல்லாமலே நாய்கள் உயிர்வாழக்கூடியன என்கின்றார். மனித குலம் அழிந்து போனாலும் உயிர்வாழக்கூடிய ஒரே இனம் நாய் என்று தன் ஆய்வுகள் மூலம் நிறுவுகின்றார் மேற்சொன்ன ஆய்வாளர்.

நம் ஊர்களிலும் நகரப் பகுதிகளிலும் நாய்களின் பெருக்கத்தினையும் தெருநாய்களின் அட்டகாசங்களையும் பார்க்கின்றபோது இதே போக்கில் போனால் நாய்களின் ஆட்சிதான் விரைவில் நடைபெறும்போல் தோன்றுகின்றது! ஏன், இப்போதுகூட எப்படியான ஆட்சி நடக்கின்றது?, அப்படியான ஆட்சிதானே நடக்கின்றது என்று எவரொருவர் கூறினாலும் ஆச்சரியப்படத் தேவையில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாய்களை வைத்துக்கொண்டு நமக்குச் சொல்லப்படுவது!**

'நாய்க்கேன் போர்த் தேங்காய்' என்றொரு பழமொழி இருக்கின்றது. இவ்வாறு ஒருவரைக் குறித்துக் குறிப்பிட்டால், 'உனக்கேன் தேவையில்லாத வேலை', 'உனக்குப் பொருத்த மில்லாத வேலையை ஏன் செய்கிறாய்?' என்ப துதான் புரிந்துகொள்ள வேண்டிய பொருளாகும்.

'நாயை நடுக்கடலில் விட்டாலும் நக்குத் தண்ணிதான்' என்று இன்னொரு முதுமொழி உண்டு. ஒருவருடைய இயல்பை, குணத்தை மாற்றமுடியாது என்பதைக் குறிக்கச் சொல்லப்படும் ஒரு முதுமொழியாக இதனைப் பார்க்கலாம்.

மேலும், 'நக்கிற நாய்க்கு செக்கென்ன சிவலிங்க மென்ன' என்று வேறொரு பழமொழியும் இருக்கின்றது. கொள்கைகளை, வாக்குறுதிகளை விட்டுவிட்டு சந்தர்ப்ப வாதிகளாக மாறுகின்றவர்களை இவ்வாறாகக் குறிப்பிடு வார்கள். உதாரணமாக, அன்றாடம் அல்லலுறும் காணா மலாக்கப்பட்டோரைத் தேடும் உறவுகள், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காகக் காத்திருப்போர் போன்றவர் களின் நலன்களை முன்னுரிமைப்படுத்தாது தங்கள் 'சுகபோக அரசியலை' முன்னெடுக்கும் அரசியல்வாதிகளைக் குறித்து 'நக்கிற நாய்க்கு செக்கென்ன சிவலிங்கமென்ன' என்றும் சாதாரண மக்கள் பேசிக்கொள்கின்றார்கள் - பேசப்பட வேண்டியதுமாகும்.

இன்னும், 'நாய் வாலை நிமிர்த்த முடியாது' எனப் பெரியவர்கள் கூறுவார்கள். அதாவது ஒருவருடைய பழக்க வழக்கங்களை - இயற்கையை மாற்றுவது இயலாத காரியம், ஒருவருடைய பிறப்பியல்புகளை மாற்றுவது முடியாத விடயம் அல்லது ஒருவருடைய பிடிவாதப் போக்குகளில் இருந்து மாற்ற நினைப்பது சாத்தியப்படாத ஒன்று என்று பொருள் கொள்ளப்படுகின்றது. சில மனிதர்களின் செயற்பாடுகள் அவர்களின் போக்குகளை மாற்றமுடியாதது போன்றே இருந்து விடுவதையும் பார்க்கலாம்.

திறந்த வீட்டிற்குள் புகும் நாய்போல என்று நாயென உருவகித்தும் சொல்லுகின்றார்கள். உரியவரிடம் எவ்வகையான அனுமதியும் இல்லாமலே ஒன்றைப் பயன்படுத்தும்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது ஒருவர் தான் நினைத்தபடி ஒருவருடைய உடைமை யைக் கையாளுகின்றபோது மேற்சொன்னவாறாகக் கூறுவார்கள்.

கப்பைக் கண்டால் காலை உயர்த்தும் நாய்கள்போல அல்லாமல் கவனமாக இருக்கவேண்டும் எனச் சில பெரியோர் குறிப்பிடுவார்கள். கண்ணியமாய் இருக்கவேண்டும், ஒழுக்க மாக வாழவேண்டும் என்பதை அழுத்திச் சொல்வதற்கு இவ்வாறான உருவகத்தையும் பயன்படுத்துகின்றார்கள்.

**நாய்ச்சாதி சொல்வது மனிதசாதிக்குப் புரியுமா!**

"உறங்கிக் கிடக்கின்றது ஊர்! ஆனால், நாலாபக்கமும் நாய்கள் மட்டும் நடமாடித்திரிகின்றன!" என்றும், "நன்றிகெட்ட நாயே! என இனிமேலும் இகழாதே மனிதா! நம்மோடு வாழ்ந்துகொண்டும் நன்றிமறவாது இற்றைவரை இருப்பது நானும் நீயுமல்ல! நாய்தான்!" எனவும் இரு கவிதைகளை நாயை வைத்துக்கொண்டு நாட்டின் நிலைமைகளை நாசூக்காக எழுதியிருந்தேன்.

"வீட்டுக்கொரு நாயை வளர்த்தும் மனிதன் விசுவாசத்தைக் கற்றுக்கொள்ளவில்லையே! இனி நாய்கள் மனிதனை வளர்த்து, அதைக் கற்றுக்கொடுக்குமா?" எனக் கவியரசு கண்ணதாசன் நாய்களிடமிருக்கும் விசுவாசத்தை விபரிப்பார்.

கவிஞர் சோ.பத்மநாதன், 'நாய்கள்' என்ற தலைப்பில் வடக்கிருத்தல் என்ற கவிதைத் தொகுதியில், "அந்நாளில் ஊரைவிட்டு ஓடாதிருந்து மதிப்பில் உயர்ந்தீர். இன்றும் வேற்றரவம் கேட்டால் விடாது குரைக்கின்றீர். எமக்கில்லா மானஉணர்வு உமக்கு, வந்தவிதம் எந்தவிதம்?" என நாயின் மானஉணர்வின் மதிப்பினை எடுத்தியம்புகின்றார்.

மேலும், தமிழர் தாயகமெங்கும் நடைபெற்ற போரில் மக்கள் இடம்பெயர்ந்தபோது நாய்களின் பொறுப்பிலேதான் வீடுகள் விடப்பட்டன! எவ்வளவு விசுவாசமாக அவை இருந்தன என்பதற்கு கவிஞர் சோ.பத்மநாதனின் மேற்கூறப்பட்ட கவிதைத் தொகுதியில் 'வீடு பேறு' என்ற கவிதை தக்க சான்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேபோல 25.10.2009இல் மித்திரனில் வெளிவந்த 'இடம்பெயர்ந்த ஊரில் இடம்பெயரா நாய்' என்ற கவிஞர் யோ. புரட்சியினுடைய கவிதையும் இதற்குச் சிறந்த ஆதாரமாகும். இக்கவிதைகளைப் படிக்கின்றபோது கண்ணீர் வரும்!

"நாய்கள் செய்யும் வேலையை மனிதர்கள் செய்வ தால் மனக் குழப்பத்தில் திரிகின்றன தெருநாய்கள்!" என வித்தியாவின் படுகொலையைப் பின்னணியாக வைத்து அலைக்ஸ் பரந்தாமன் எழுதியிருந்தார்.

இப்படியாக, இவைபோல, நாய்களை வைத்தே நியாயமான கவிஞர்கள் கவிதைகளின் ஊடாகச் சக மனிதர்களுக்கு நல்லறிவூட்ட விளைகின்றார்கள். கேள்வி என்னவெனில், எந்த அளவிற்கு நாய்ச்சாதி சொல்லும் விடயம் மனிதசாதிக்குப் புரியுமோ என்பதுதான்!

**நாய்க் குணம்!**

வயது முதிர்ந்த ஓய்வுநிலையிலுள்ள அருள்தந்தையர் கள் வாழும் இல்லத்தில் ஓர் அருள்தந்தை நாய் வளர்த்தார். அந்நாய் ஒரு வயதான அருள்தந்தையைக் கடித்து விட்டது. கடிவாங்கிய அருள்தந்தை, "உங்களுடைய நாய் என்னைக் கடித்துவிட்டது!" எனச் சொல்ல அந்நாயை வளர்த்த அருள்தந்தை, "நாய், தன்ரை வேலையைச் செய்யுந்தானே!" என்று சர்வசாதாரணமாகக் கூறினார்! பின்னர் நிலைமை எப்படி இருந்திருக்கும் என எண்ணிப்பார்க்க வேண்டியதில்லைத்தானே!

2017ஆம் ஆண்டு மார்கழிமாதம் அமெரிக்காவில் கோகிலேன்ட் வர்ஜீனியா மாகாணத்தில் இருபத்திரெண்டு வயது நிரம்பிய இளம் பெண்ணான பெத்தானி ஸ்ரீபன்ஸ் என்பவர் உடலில் பல பாகங்களில் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டாள். அவளின் இறப்புக் குறித்து பொலிசார் எவ்வித தகவல்களையும் ஆரம்பத்தில் வழங்கவில்லை. இருப்பினும் பெத்தானியின் உறவினர்கள் நண்பர்களின் கோரிக்கைக்கு அமைவாகவும் வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும் பொலிசார் பெத்தானிக்கு நடந்த விபரீதத்தை வெளியிட முன்வந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உடல் கைப்பற்றப்பட்ட அன்று பெத்தானியின் இடுப்புப் பகுதியை அவருடைய இரு நாய்களும் சாப்பிட்டுக் கொண்டிருந்தன. அதை நானும் மற்ற அதிகாரிகளும் நேரடியாகப் பார்க்க நேரிட்டது. இறந்த பெத்தானியின் குடும்பத்தை மனதில் வைத்தே அந்த இறப்புக் குறித்து அறிவிக்காமல் இருந்தோம்..." எனக் கூறியதோடு நாய்கள் எதற்காக அவளைக் கொன்றன என்ற விசாரணை நடந்து வருவதாகக் குறிப்பிட்டிருந்தார்கள். இச்செய்தி அமெரிக்காவை மட்டுமல்ல முழு உலகையுமே ஒருகணம் அதிர்ச்சிக்கு உள்ளாக்கி இருந்தது.

**நாய்களால் ஏற்படும் தொல்லைகள்!**

தெருநாய்களால் ஏற்படும் வீதி விபத்துக்களில் நம் பிரதேசங்களில் படுகாயம் அடைந்தவர்களையும் இறந்து போனவர்களையும் பதிவுசெய்தால் அது எண்ணிக்கையில் நூற்றுக்கணக்கானவையாக இருக்கும் என அறுதியிட்டுக் கூறலாம்! கட்டாக்காலி நாய்களுக்கு விசர் பிடித்து அதனால் நீர்வெறுப்பு நோய் ஏற்பட்டு அநியாயமாகச் செத்தவர்கள் இன்னும் ஒரு பெரும் தொகையாக இருக்கும்.

மேலும், இரவு நேரங்களில் நாய்களால் ஏற்படும் தொல்லைகளினால் இரவு உறக்கத்தைத் தொலைப்பவர்கள் ஆயிரக்கணக்கானவர்கள். இன்னும், வீதிகளில் வீசப்படுகின்ற கழிவுப் பொட்ட லங்களை இரவு முழுவதும் கிண்டிக் கிளறி நகர வீதிகளை நரகமாக்கிவிடும் நிலையும் இன்னொரு புறம். கழிவுப் பொருள்களை வீதியில் வீசலாமா? வீசினால் நரகந்தானே! நாய் தன் உணவைத் தேடின் நரகமாக்க நாம் துணைபோகலாமா? தெருநாய்களின் தொல்லைகளுக்கு ஒரு முடிவு கட்டவேண்டும் என்பது எவ்வித தாமதமும், தயக்கமும் இன்றி மேற்கொள்ளப்பட வேண்டிய ஒரு பெரும் வேலைத்திட்டமாகும். 'தெருநாயை அழிப்பது யார் பொறுப்பு?' என 2018.03.13 அன்று வலம்புரிப் பத்திரிகை, ஆசிரியர் தலையங்கம் தீட்டியிருந்தது.

இதில், வடபுலத்தில் குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் தெருநாய்த் தொல்லைகளிலும் துன்பங்களிலும் இருந்து மக்களை விடுவிக்க வடமாகாண ஆளுநர் விரைந்து நடவடிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுக்கவேண்டும் என்றும் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. இதனை ஒவ்வொரு உள்ளூராட்சி சபையும் ஏன் மாகாண சபையும் ஒரு முன்மொழிவாகக் கொள்ளப்பட வேண்டியதொன்றாகும்.

**அனுராதபுர முதலவரைப் பின்பற்றுவார்களா?**

இதற்கு முன்னுதாரணமாக அநுராதபுரம் மாநகர மேயர் எம்.ஜீ.சோமதாச ஒரு அருமையான திட்டத்தை அநுராதபுர நகரில் நடைமுறைப்படுத்த முன்வந்துள்ளார். அநுராதபுர நகரம் கட்டாக்காலி நாய்கள், நுளம்புப் பரவல் ஆகிய இரண்டு பெரும் சுற்றாடல் பிரச்சினைகளை எதிர்கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டு, இவற்றை உடனடியாகக் கட்டுப்படுத்த உடன் நடவடிக்கையில் இறங்கியுள்ளார்.

சுற்றாடலுக்கு நாய்கள் அவசியம் எனக் குறிப்பிட்ட அவர் நாய்களைச் சரியான முறையில் வளர்க்கவேண்டும் என்றும் தெளிவுபடுத்தி உள்ளார். நாய்களை வளர்க்க வரி அறவிடுவதன் வழியாக நாய் வளர்ப்பது கட்டுப் படுத்தப்படுவதோடு, கருத்தடை ஊசி மருந்துகள், சத்திர சிகிச்சை போன்ற வசதிகளை ஏற்படுத்தி இத்திட்டத்தை அமுல்படுத்த உள்ளார் என்பது ஆக்கபூர்வமான திட்டமாகும்.

ஆகக்குறைந்தது நம்முடைய பிரதேச, நகர சபைகள் தெருநாய்களையாவது கட்டுப்படுத்துவதை தமது தலையாய பணியாகக் கொண்டால் அதுவே முதல் வெற்றியாகும். இவ்வாறாகத் தெருநாய்களால் ஏற்படும் அநியாய உயிரிழப் புக்களையும் வீதி விபத்துக்களையும் இல்லாமற் செய்யும் திட்டத்தை முன்மொழிந்து நடைமுறைப்படுத்தச் சில நல்ல மனிதர்கள் இந்நடப்பாண்டிலேயே முன்வரலாம். ஆனால், இதனைத் தடுத்து நிறுத்தி தெருநாய்களைக் காப்பாற்ற அவைகளின் பக்கமாக நின்று வாதிட தேர்தலில் வெற்றிபெற்ற எத்தனை தெரிந்தெடுக்கப்பட்ட நாய்கள் அணிதிரள்வார்களோ என்ற ஆதங்கம் ஏற்படுவதும் இவ் விடத்தில் தவிர்க்க முடியாததாகின்றது. ஏனெனில் எத்திட் டத்தைக் கொண்டுவந்தாலும் எதிர்ப்பதற்கு என்றே ஒரு குழு உண்டல்லவா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காட்டு விலங்குகளின் காப்பகங்கள் காடுகளே!**

மிருகங்கள் - விலங்குகளுக்கு காப்பகங்கள் அமைப்பது பற்றி ஆங்காங்கே சிலர் சிந்தித்து வருகின்றார்கள். உண்மையில் மிருகங்கள் - விலங்குகள் இயற்கையாகவே வாழக்கூடிய இடங்களில் அவற்றை வாழவிட்டுவிட வேண்டும். குறிப்பாகக் காட்டு விலங்குகளை காட்டில் வாழவிட வேண்டும்.

ஆனால், இன்று காடுகளை மனிதர்கள் அழிப்பதனால் மிருகங்கள் காடுகளை விட்டு நாட்டுப் பகுதிக்குள் அத்துமீறி நுழைவதையும், நுழைவதோடல்லாமல் பாரிய சேதங்களை ஏற்படுத்துவதையும் அவதானிக்கலாம். மிருகங்கள் வாழும் காடுகளை அழித்தால் மிருகங்கள் மனிதர்களுக்கு இடையூறு களை ஏற்படுத்துவதைத் தவிர்க்க முடியாது போகுமல்லவா!

**மனநிலைகளை மாற்ற ஆவன செய்யவேண்டும்!**

தெருநாய்களுக்குக் காப்பகம் அமைப்பது தொடர்பாகச் சில செய்திகளைக் கடந்த சில மாதங்களாக ஆங்காங்கே பார்க்கக் கூடியதாக இருந்தது. நல்ல செய்தி. ஆனால், இவ்விடத்தில் இன்னுமொன்றையும் கட்டாயமாகக் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

நாய்களுக்கான காப்பகங்களை அமைக்கின்ற அதே நேரத்தில் நாய்களிலும் கேவலமான மனநிலைகளை உடைய மனிதர்களை மாற்றுவதற்கான செயற் திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவது நம் சமூகம் உயிர்ப்புப்பெற மிகமிக அவசியமானதும் - இன்றியமையாததும் ஆகும்!

"இந்தச் சமூகம் நாய்களை, பூனைகளைக் கொண்டாடும். மாட்டை தெய்வமாகப் பூசிக்கும். பல நூற்றாண்டுகளாக அடிமைகளாக உழைத்துழைத்துத் தேய்ந்திருக்கும் மனிதர் களை மட்டும் தீண்ட மறுக்கிறது. தனக்குச் சமமான ஒருவன் என்ற சமஉரிமையைத் தரமறுக்கிறது. இது கொடிய மனநோய். இத்தகைய சம்பவங்கள் மன உளைச்சலை ஏற்படுத்துகின்றன" என பத்திரிகை ஆசிரியர் புனித பாண்டியனின் கூற்று ஆழ்ந்த சிந்தனைக்குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அநாவசியப் பெருக்கம் ஆபத்தானது!**

அடுத்து, விலங்குகள் - மிருகங்கள், எதுவாக இருப்பினும் அவைகள் பாதுகாக்கப்பட வேண்டும் - இயலுமானவரை பராமரிக்கப்பட வேண்டும். ஆனால், இந்த மனிதர்கள் தங்களுடைய இனவிருத்தியை கவனமாகக் கையாண்டு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதுபோல மிருகங்களின் - விலங்குகளின் இனவிருத்தியைக் கட்டுப்படுத்த ஆவனசெய்வதில்லை.

ஆறாவது அறிவில்லாத இந்த மிருக ஜீவன்கள் குறிப்பாக நாய்கள் தங்கள் இன விருத்தியைக் கொஞ்சம் கட்டுப்பாட்டோடு பேணுவதற்கு வழிவகை மேற்கொள்ளப் பட்டால் அவை அநாவசியமாகப் பெருகாது தடுக்கலாம்.

இதுபற்றி ஏன் நம்முடைய பிரதேச சபைகளும், நகர சபைகளும் அக்கறைப்படுவதில்லை என்பதைப் பற்றி பொறுப்பிலுள்ள புத்திசாலிகள் கொஞ்சம் சிந்திக்கவேண்டும். நாலாபக்கமும் நாய்கள் பெருகி அவற்றின் தொல்லைகள் கட்டுங்கடங்காமல் போனதின் பின், நாய்களைப் பிடிக்க நான்கு வண்டில்களோடு நான்குபேர் சென்று நாற்பது நாய்களைப் பிடித்து அழித்தால் தெருநாய்களின் அட்டகாசம் குறைந்துவிடப் போவதில்லை - அவைகளால் ஏற்படும் பிரச்சினைகளும் தீர்ந்துவிடப் போவதில்லை என்பதை மேற்சொன்ன சபைகளும் புத்திசாலி அதிகாரிகளும் தெரிந்துகொள்ள வேண்டும்.

எனவே, மக்களின் நலன்பேணும் திட்டத்தில் ஈடுபடுகின்ற உள்ளூராட்சிச் சபைகளும், ஏனைய அதிகாரிகளும் நிறுவனங்களும் இதுபற்றி மிக நிதானமாகச் சிந்தித்து திட்டங்களை வகுத்துச் செயல்படுத்த முன்வரவேண்டும். ஆகக்குறைந்தது தெருநாய்களைக் கட்டுப்படுத்துவதிலாவது நம் பிரதேச, நகர சபைகள் நடப்பாண்டில் வெற்றிகாணுமா? பொறுத்திருந்து பார்ப்போம்!

**மன்னா, யூன் 2018**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 76 இயற்கையை மதிக்காவிட்டால் அது நம்மை மிதிக்கும்!

**படைத்தவனையே மனிதன் பரிகசிக்கிறான்!**

கடவுள் ஒருநாள் ஒரு 'வாட்ஸ் ஆப்' (whats app) 'குரூப்'பை (group) உருவாக்கினார். அதற்கு 'உலகம்' என்று தலைப்பிட்டார். முதலில், வானத்தையும், பூமியையும் அதில் 'அட்'(add) பண்ணினார். அடுத்து, சூரியன், கடல், மழை, ஆறுகள், குளங்கள், மரங்கள், விலங்குகள், பறவைகள், ஊர்வன என வரிசை வரிசையாக 'அட்' பண்ணி மகிழ்ந்தார். இறுதியாக, மனிதனை 'அட்' பண்ணினார்.

மனிதனை 'அட்' பண்ணிய கடவுள், மிகவும் மனமகிழ்ந்து, "இனி இந்த 'குரூப்'க்கு நான் தேவை இல்லை, மனிதனே இந்த 'குரூப்'பை நல்ல படியாக நடத்திச் செல்வான்!" என்று எண்ணி, மனிதனை 'குரூப் அட்மின்'(Group Admin.) ஆக்கி விட்டு, கடவுள் விலகிச் சென்று விட்டார்.

கொஞ்ச நாள்கள் நன்றாகச் செயற்பட்ட மனிதன், காலப்போக்கில் தன் சுய சௌகரியங்களுக்காகவும், சுய இலாபத்திற்காகவும், மரங்கள், குளங்கள், ஆறுகள் போன்றவற்றை 'றிமூவ்' (remove) பண்ணி விட்டு, அதற்குப் பதிலாக பொருள்களைக் கொள்வனவு செய்யும் மாடங்களை (shopping complex), மாடிக் குடியிருப்புக்களை (appartments), தொழிற்சாலைகளை (factories) அவைபோன்ற ஏனையவற்றையும் 'அட்' பண்ணினான்.

இதனால் கோபம் கொண்ட மழை தன் நண்பர்கள் இல்லாத இந்த 'குரூப்'இல் தானும் இருக்கமுடியாது என விலகிக் கொண்டது. ஆனால், சூரியன் விலகாமல், 'குரூப்'இல் இருந்த படியே, தன் கோபத்தை மனிதன் மீது கொட்டித் தீர்த்துக் கொண்டிருந்தது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இறைவன் படைத்த உலகு!**

உலகம் எவ்வாறு தோன்றியது என்ற கேள்விக்கு, கடவுள் உலகத்தினை உருவாக்கினார் என விவிலியம் சான்று பகர்கிறது. இப்பிரபஞ்சத்தின் உருவாக்கம் பல முறைகளில் பல வடிவங்களில் நடந்திருக்கலாம்! ஆனால் அது கடவுள் என்ற மாபெரும் சக்தியினால் உண்டானது என்ற நம்பிக்கை அனைத்து சமயங்களிலும் வெளிப்பட்டு நிற்கிறது. அவ்வகையில் விவிலியம் உலகப் படைப்பை அதன் முதல் நூலாகிய தொடக்க நூலின் முதல ிரு அதிகாரங்களில் பின்வருமாறு விபரிக்கின்றது.

"ஒளி தோன்றுக" என்றார் கடவுள். ஒளியைக் கடவுள் நல்லதாகக் கண்டார். ஒளிக்கு 'பகல்' என்றும் இருளுக்கு 'இரவு' என்றும் பெயரிட்டார். மாலையும் காலையும் நிறைவுற்று முதல் நாள் முடிந்தது.

"வானம் உண்டாகுக" என்றார் கடவுள். வானத்திற்குக் கீழுள்ள நீரையும் மேலுள்ள நீரையும் கடவுள் பிரித்தார். வானத்திற்கு 'விண்ணகம்' எனப் பெயரிட்டார். மாலையும் காலையும் நிறைவுற்று 02ஆந் நாள் முடிந்தது.

"நீர் எல்லாம் ஓரிடத்தில் ஒன்றுசேர உலர்ந்த தரை தோன்றுக" என்றார் கடவுள். உலர்ந்த தரைக்கு 'நிலம்' என்றும் ஒன்றுசேர்ந்திருந்த நீருக்குக் 'கடல்' என்றும் பெயரிட்டார். புல்பூண்டுகளும் செடிகளும் கொடிகளும் பழமரங்களும் நிலத்தில் வளரவேண்டும் எனக் கட்டளையிட்டார். அதுவும் அவ்வாறே ஆயிற்று. மாலையும் காலையும் நிறைவுற்று 03ஆந் நாள் முடிந்தது.

பகலையும் இரவையும் வெவ்வேறாகப் பிரிப்பதற்கும் காலங்களை வகைப்படுத்துவதற்கும் ஒளிப்பிழம்புகளை உண்டாக்கினார். கடவுள் அதனையும் நல்லது எனக் கண்டார். மாலையும் காலையும் நிறைவுற்று 04ஆந் நாள் முடிந்தது.

நீரில் நீந்தி வாழும் எல்லாவித உயிரினங்களையும் வானத்தில் பறக்கும் எல்லாவகைப் பறவைகளையும் உண்டாக்கினார். மாலையும் காலையும் நிறைவுற்று 05ஆந் நாள் முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள், கால்நடைகளையும் காட்டு விலங்குகளையும் ஊர்வனவாகிய அனைத்தையும் அவ்வவ் இனத்தின்படி நிலத்தில் தோற்றுவித்தார். பின் மனிதனைத் தம் உருவிலும் தம் சாயலிலும் உருவாக்கி தாம் உண்டாக்கிய அனைத்தையும் அவனுக்குக் கொடுத்து உலகை ஆளட்டும் என விரும்பினார். தாம் உருவாக்கிய அனைத்தையும் நோக்கினார். அவை அனைத்தும் நன்றாய் இருந்தன. மாலையும் காலையும் நிறைவுற்று 06ஆந் நாள் முடிந்தது.

விண்ணுலகையும் மண்ணுலகையும் அவற்றுக்குத் தேவையான அனைத்தையும் உண்டாக்கி நிறைவுபெறச் செய்தபின் கடவுள் 07ஆந் நாளில் ஓய்ந்திருந்தார்.

இதுவே கடவுள் படைத்த உலகின் ஒழுங்கு! அதுவே கடவுள் படைத்த உலகின் அழகு! எவ்வளவு அழகான உலகை அவர் மானிடருக்குக் கொடுத்திருக்கிறார் என்பதை விவிலியம் மிகத் தெளிவாகக் காட்டி நிற்கிறது.

இவ்வளவு அழகான உலகை மனிதன் விருத்தி செய்வது, வளர்த்தெடுப்பது, பாதுகாப்பது அவனின் தலையாய கடனாகும். இவ்வுலகைப் பண்படுத்தித் தானும் வாழ்ந்து கடவுளையும் மகிமைப்படுத்துவது அவனின் பெரும் கடமையாகவும் அழைப்பாகவும் இருக்கிறது.

**மனிதன் படைக்கும் உலகு!**

ஆனால், கடவுள் கொடையாகக் கொடுத்த உலகை மனிதன் எவ்வாறு மிக மோசமாகக் கையாளுகிறான் என்பதனைப் பின்வரும் அவதானிப்பு விபரிக்கின்றது. இவ்விபரணம் 'டெக்கிறியேசன்' (Decreation) என்ற ஆங்கிலக் கவிதையைப் பின்புலமாக வைத்து எழுதப்படுகிறது. உலகம் படைக்கப்பட்டதும் கடவுள் ஓய்ந்திருந்தார். பூமி செழிப்பானதாகவும் அழகானதாகவும் இருந்தது.

**மனிதனின் செயல்!**

முதலாவது நாளில் மனிதன், "எங்களுக்கான குடியிருப்புக்களையும் நகரங்களையும் இவ்வழகான சூழலில் கட்டியெழுப்புவோம்!" என்றான். மனிதன் பென்னம்பெரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரங்களையும், 'கொங்கிறிற்' அடுக்கு மாடிகளையும் எழுப்பினான். பசும் புற்தரைகளும் பச்சைக் காடுகளும் காணாமல் போயின. மனிதன், அது நல்லது எனக் கண்டான். மாலையும் காலையும் நிறைவுற்று முதல் நாள் முடிந்தது.

இரண்டாவது நாளில், மனிதன் வெள்ளை வெள்ளேரென்று ஊடுருவிப் பார்க்கக்கூடிய நீரோடைகளில் இருந்துவரும் தண்ணீரையும், ஒளிர்கிற குளங்களையும், நீலநிறக் கடலையும் பார்த்தான். அவன், "இந்நீர் நிலைகளுக்குள் கழிவுகளையும் குப்பைகளையும் கொட்டி விடுவோம், இவ்வாறு எமது குப்பை கூளங்களை அகற்றிவிடலாம்!" என்றான். வெள்ளை வெள்ளேரென்ற பூமியின் தண்ணீர் அசுத்தமானதுடன் துர்நாற்றம் அடிக்கிற சாக்கடை நீராக மாறியது. மனிதன், அது நல்லது எனக் கண்டான்! மாலையும் காலையும் நிறைவுற்று இரண்டாவது நாளும் முடிந்தது.

மூன்றாவது நாளில், மனிதன் மிகவும் எழில் மயமான காடுகளையும் இனிய சுவைமிக்க மரங்களையும் பார்த்தான். அவன், "மரங்களை வெட்டிச் சாய்த்துக் காடுகளை வெளியாக்குவோம், வீடுகள் கட்டப் பலகைகளும் ஏனைய தளபாடங்களைச் செய்ய மரங்களும் நமக்குத் தேவை!" என்றான். அவன் நினைத்ததை நிறைவேற்றினான். காடுகள் பூமியில் இருந்து மறைந்து போயின. பூமி வெறுமையானது. மனிதன், அது நல்லது எனக் கண்டான்! மாலையும் காலையும் நிறைவுற்று மூன்றாவது நாள் முடிந்தது.

நான்காவது நாளில், மனிதன் பூமியில் ஆயிரக்கணக்கான விலங்குகளைக் கண்டான். அவற்றின் குட்டிகளும் இளசுகளும் விளையாடிக்கொண்டும் குதூகலித்துக்கொண்டும் நின்றன. மனிதன், "எம்மை மகிழ்விக்க விலங்குகளைப் பிடித்து அவற்றைக் கூடுகளில் அடைத்து வைப்பதோடு அவற்றை வேட்டையாடிக் கொன்று எமக்கு உணவாக்குவோம்" என்றான். அவ்வாறே அவன் செயலாற்றினான். விலங்குகள் பூமியில் இருந்து காணாமல்போயின. மனிதன், அது நல்லது எனக் கண்டான்! மாலையும் காலையும் நிறைவுற்று நான்காவது நாளும் முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாவது நாளில், மனிதன் வானமண்டலத்தில் உள்ள குளிரானதும் சுத்தமானதுமான காற்றை ஆழ்ந்து சுவாசித்தான். அவன், "நஞ்சான வாயுக்களையும் வாகனங்களினதும் தொழிற்சாலைகளினதும் புகையையும் சுதந்திரமாக சூழலில் விடுவிப்போம். அதனைக் காற்று எடுத்துச் செல்லும்!" என்றான். மனிதன் அவ்வாறே செய்தான். காற்று அசுத்தமாகவும் தீமைகளை ஏற்படுத்தக் கூடியதாகவும் மாறியது. மனிதன், அது நல்லது எனக் கண்டான்! மாலையும் காலையும் நிறைவுற்று ஐந்தாவது நாள் முடிந்தது.

ஆறாவது நாளில், மனிதன் சுற்றிப் பார்த்தபோது பூமியில் எல்லா வகை இனத்தவரையும் வெவ்வேறு நிறத்தவரையும், மொழி பேசுபவர்களையும், பண்பாடுடையவர் களையும் பார்த்தான். மனிதன், ஒருவரை ஒருவர் காண்பதில் பயப்படுவதோடு அடுத்தவரை வெறுக்கத் தொடங்கினான். அவன், "மரணத்தை ஏற்படுத்தக்கூடிய எல்லா வகையான ஆயுதங்களையும் செய்வோம், மற்றவர்கள் எங்களை அழிப்பதற்கு முன், அவர்களை நாம் விரைவாகவே அழித்து விடுவோம்!" என்றான். மனிதன் மரணத்தை ஏற்படுத்தக்கூடிய எல்லா வகையான விசித்திரமான ஆயுதங்களையும் செய்வித்தான். மனிதர்கள் ஒருவர் ஒருவருடன் போர்களைத் தொடுத்தார்கள். பூமியில் உள்ள மனிதர்கள் பெருமளவில் அழிக்கப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டார்கள். மனிதன், அது நல்லது எனக் கண்டான்! மாலையும் காலையும் நிறைவுற்று ஆறாவது நாள் முடிந்தது.

ஏழாவது நாளில், தான் செய்த வேலைகளின் பொருட்டு மனிதன் ஓய்ந்திருந்தான். பூமி அமைதியாக இருந்தது, அங்கு அமைதி நிலவியது. ஆனால், அப்பூமியில் இருந்த மனிதனும் நாளடையில் இல்லாமற் போனான்! அதுவும் நல்லதாகவே இருந்தது!...

**பூமியின் அழிவுக்குக் காரணம் மனிதன்தான்!**

இப்பூமியின் அழிவுக்குக் காரணம் மனிதன்தான் என்பதை மனிதர்களாகிய நாம் எப்போது நம் மண்டைகளில் ஏற்றிச் செயற்படுகிறோமோ அப்போதுதான் நாம் வாழும் பிரபஞ்சம் தப்பிப் பிழைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பூமிப் பந்தில் மனிதனும் உயிரினங்களும் தொடர்ந்து வாழ்வதும், வாழாது மாழ்வதும் மனிதர்களாகிய நம்மில்தான் தங்கியிருக்கிறது!

மனித வாழ்வுக்கு மிகவும் அடிப்படையான நீர் தற்போது பெரும் பிரச்சினையாகி வருகிறது. மூன்றாம் உலகப் போர் ஒன்று தொடங்குமாக இருந்தால் அது நீருக்கான போராகத்தான் இருக்கும் எனப் பல அறிஞர்களும் எதிர்வுகூறி வருகிறார்கள்.

இந்நிலையில் நீருக்கான குறிப்பாகக் குடிநீருக்கான தட்டுப்பாடுகள் அதிகரித்து வருவதைப் பார்க்கிறோம். குடிநீரைக்கூட காசு கொடுத்துக் கடையில் வாங்குவோம் என இற்றைக்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு நம்மில் யாரும் நினைத்துக்கூட பார்த்ததில்லை. ஆனால், இன்று குடிநீரை விற்பதும் வாங்குவதும் ஒரு பெரும் வியாபாரமாகிவிட்டது.

**எச்செலவும், எப்பராமரிப்பும் இன்றி...!**

ஆகக் குறைந்தது நாம் வாழ்வதற்கு மிகவும் அடிப்படைத் தேவையான நீரை எப்படிச் சேமிக்கலாம், எப்படிப் பாதுகாக்கலாம் என்பதைப் பற்றி சிந்திக்கவேண்டியதாக உள்ளது. நிலத்தடி நீர் வற்றி வருகிறது என்கிறார்கள் புவியியல்சார் நிபுணர்கள்.

நிலத்தடி நீர் இல்லாதுபோனால் குடிநீருக்கான ஆபத்தும் விரைவில் ஏற்பட்டுவிடும்! ஆனால் இயற்கையைப் பேணினால் அது நம்மைக் காக்கும் என்ற உண்மையை நாம் உணர்ந்துகொள்ள வேண்டிய ஓர் அவசரகாலம் தோன்றியிருக்கிறது. நிலத்தடி நீரைப்பேணப் பனைமரங்கள் பெரும் உதவி புரிகின்றன.

அவ்வகையில், பனைவிதைகளைச் சேகரித்து தரிசு நிலங்களில் வீசி விட்டால் அவை மழைபெய்யும் போது தானாகவே முளைத்துவிடும். எந்தவித பராமரிப்பும் அவற்றுக்குத் தேவையில்லை. கால்நடைகள் கடித்தாலும் அதன் வளர்ச்சியை அது பாதிக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனைமரத்தின் வேர்கள் ஏறக்குறைய ஐம்பது அடி ஆழம் வரை பூமிக்குள் செல்வதால் எவ்வளவு வறட்சியையும் அவை தாங்கக்கூடியவை. மழைக் காலங்களில் அதன் வேர்கள் மழைநீரை ஐம்பது அடி ஆழத்திற்குப் பூமிக்குள் கொண்டு சேர்க்கும் குழாய்களாகச் செயல்படுவதால் நிலத்தடி நீர்மட்டம் கணிசமாக உயருமாம்! பனைமரங்கள் மண்ணரிப்பையும் அறவே தடுக்கிறது.

குளக்கட்டு - வீதி ஓரங்கள், தரிசு நிலங்கள், மலைப்பகுதிகள் போன்ற இடங்களில் பனைவிதைகளை வீசிவிட்டால்கூட அவை தழைத்துவரும். பனைமரங்களின் நன்மைகள் ஏராளம். பனைமரத்தின் ஒவ்வொரு பாகமும் பயன்பாட்டுக்கு உரியது. எங்காவது பனைவிதைகள் விதைக்கப்படாமல் அவை தறிக்கப்படுகின்றன என்றால் அவ்விடம் அழியத் தொடங்குகிறது என்று அர்த்தம் எனப் புவியியல்சார் அறிஞர்கள் சான்று பகர்கிறார்கள்.

நம் பிரதேசங்களில் எப்பராமரிப்பும் இன்றி, பணச் செலவும் இன்றி எத்தனை எத்தனையோ பயனைத் தரவல்ல பனைமர வளத்தினை ஏன் இன்னும் நாம் வளர்க்காமல் இருக்கிறோம் என்ற கேள்வியை ஒவ்வொரு மனிதரும் கேட்கவேண்டும்?

**பழைய தலையாய பாவங்கள்!**

கத்தோலிக்க திரு அவை, ஏறக்குறைய ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளாக தலையாய ஏழு பாவங்களான ஆணவம், மோகம், பொறாமை, கோபம், போசனப்பிரியம், சோம்பல், உலோபித்தனம் ஆகியவற்றைப் பாவ அறிக்கைக்கும் ஆன்ம ஆய்வுக்கும் தந்திருந்தது. இவ்வேழு தலையாய பாவங்களும் அதன் இயல்பில் தனி மனிதர்களின் மனச்சாட்சியைப் பரிசோதிப்பதாக இருப்பதை அவதானிக்கலாம்.

திரு அவையின் பாரம்பரிய இப்படிப்பினையை வைத்துக் கொண்டு 2008 இல் முன்னாள் திருத்தந்தை பதினாறாவது பெனடிக்ற் ஏழு நவீன தலையாய பாவங்களைக் குறிப்பிட்டு உலகின் மனச்சாட்சியைத் தட்டுகிறார். அந்நவீன தலையாய பாவங்கள் உலகமயமாக்கலின் (globalization)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைவாகத் தோன்றி நாம் வாழும் சூழலை மிகவும் மோசமாகப் பாதிப்பதோடு இறைவன் படைத்த அழகான இயற்கை உலகை மனிதன் தன் மிதமிஞ்சிய சுயநலப் போக்கினால் செயற்கை முறைமைகளால் அழித்து வருகிறான் எனவும் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

**நவீன தலையாய பாவங்கள்!**

அந்நவீன தலையாய பாவங்கள் பின்வருமாறு:

1) சுற்றுச் சூழலை அழித்தல்: இயற்கை வளங்களை பணம்பெருக்கும் நோக்குடன் சுரண்டுதல்.
2) உயிராற்றலோடு விளையாடுதல்: மரபணு சோதனை மானிட மாண்பை அழித்துவிடக் கூடாது என்றும் 'க்ளோனிங்' முறையிலான குழந்தை பிரசவங்கள் பல தீமைகளுக்கும் பாவங்களுக்கும் இட்டுச் செல்லும் என்பதையும் கோடிட்டுக் காட்டுகிறார்.
3) அளவை மிஞ்சும் செல்வம்: நாடுகள், பன்னாட்டு நிறுவனங்கள், தனிநபர்கள் அளவுக்கு அதிகமான சொத்துக்களைக் குவிப்பதனால் ஏற்படும் தீமையைச் சுட்டுகிறார்.
4) வறுமையை உருவாக்குதல்: திட்டமிட்டு வறுமையை உருவாக்கும் தொழில் கொள்கைகள், நிதி ஒதுக்கீடுகள் போன்றவற்றில் ஈடுபடுதல்.
5) போதைப்பொருள் விளைவித்தல், கடத்தல்.
6) அறநெறிக்கு எதிரான அறிவியல் ஆய்வுகள்: மனித மாண்பைச் சிதைக்கக்கூடிய ஆய்வுகளை மேற்கொள்ளல்.
7) அடிப்படை மனித உரிமைகளை மீறல்

ஆகிய தீமைகள் இன்று சமுதாயத்தை அழிவின் பாதையில் கொண்டு செல்வதைக் காணலாம். எனவே, இந்நவீன தலையாய பாவங்களில் இருந்து விடுபட மனித சமுதாயம் தன்னை விடுவித்துக்கொள்ள வேண்டும் எனத் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் வேண்டுகோள் விடுக்கிறார்.

**"எப்படியிருந்த நாம இப்படி ஆயிற்றும்!"**

நம்முடைய வாழ்க்கைமுறையில் ஏற்பட்டிருக்கும் ஒரு மாற்றத்தினை இங்கு நோக்குவது நம்முடைய வாழ்வை மீண்டும் சீர்செய்ய ஒருவகையில் உதவும்! சுமார் பதினைந்து இருபது ஆண்டுகளுக்கு முன்பு வீட்டைக் கூட்டுகிறபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டைக்கூட்டி, பின் விறாந்தையைக் கூட்டி, அதன்பின் வீட்டைச் சுற்றி விளக்குமாறினால் கூட்டி, அதன்பின் முற்றத்தினைக் கூட்டி - வளவைக் கூட்டி, வீட்டுச் சுற்றுப்புறத்தைக் கூட்டி, வீட்டு வேலிகளோடு இருக்கும் ஒழுங்கைகளைக் கூட்டித் துப்பரவாக வைத்திருப்போம்.

இன்று இந்த நல்ல பழக்கத்திற்கு என்ன நடந்திருக்கிறது, என்ன நடக்கிறது, இதில் என்ன வளர்ச்சி கண்டிருக்கிறோம் என ஆராய்கிறபோது மண்வீடுகள் எல்லாம் 'கொங்கிறீற்' வீடுகள் ஆகிவிட்டன, அவற்றில் கொஞ்சம் மாடிவீடுகள் ஆகிவிட்டன! இப்போது இவ்வீடுகளுக்குள் இருந்துகொண்டு வீதிகளில் குப்பைகளைக் குவித்துவிட்டு நம் வீடுகளுக்குள் சௌகரியமாக இருந்து கொள்கின்றோம்! இவ்வாறு இருந்துகொண்டு எமது சூழலை எவனோ ஒருவன் வந்து துப்பரவு செய்யவேண்டும் என எதிர்பார்த்து நிற்கிறோம்!

இயற்கையைப் பேணுவதிலும் பராமரிப்பதிலும் இவ்வாறுதான் நடந்து கொள்கிறோம். அதனால் இயற்கையின் வெறுப்புக்கு ஆளாகியிருக்கிறோம். இயற்கையை இயற்கை யாகச் செயற்படவிடுவோம். அப்போது அது நம்மை வாழவைக்கும்! இல்லையென்று இயற்கையைச் செயற்கையாக மாற்றுவோமானால் அது தன்வெறுப்பை வெளிப்படுத்தும்!

இயற்கையை நேசிப்போம், இயற்கையைப் பாதுகாப் போம், இயற்கையைப் பராமரிப்போம். விளைவாக அது நம்மை நேசிக்கும், பாதுகாக்கும், பராமரிக்கும்.

**மன்னா, மாச் 2018**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 77 தண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு!

**"அந்தப் பகலவனின் பதில்"**

இந்நாள்களில் தாங்கமுடியாத வெப்பமாக இருப்பதனால் வெப்பத்தினைக் குறைத்துக்கொள்ளும்படி ஒருவன் சூரியனுக்கே மின்னஞ்சல்(email) அனுப்பி வைத்தான்! "அன்பின் சூரியன், தயவுசெய்து உனது 'செற்றிங்ஸ்' க்குப் (settings) போய் உன்னுடைய 'பிறைற்நெஸ்'ஐக்(brightness) கொஞ்சம் குறைத்துக்கொள். இந்நாள்களில் சரியான சூடாக இருக்கிறது!" என அம்மின்னஞ்சலில் குறிப்பிட்டிருந்தான்.

அதற்குப் பதில் அனுப்பிய சூரியன்: "அன்பின் நண்பரே, நான் என்னுடைய 'செற்றிங்ஸ்'இல் (settings) எந்தவிதமான மாற்றத்தையும் செய்யவில்லை. நீங்கள்தான் உங்கள் 'செற்றிங்ஸ்'சை (settings) மீள் பரீசிலனை செய்வது நல்லது! மேலும், 1) மரங்களை அதிகமாக நடுங்கள்! 2) காபன் புகை அளவைக் கட்டுப்படுத்துங்கள்! 3) கொங்கிறிற் கட்டுமானங்களைக் குறையுங்கள்! 4) குளங்களின் எண்ணிக்கையை அதிகமாக்குங்கள்! அடிப்படையில், 'ஒட்டமெற்றிக் மோட்' இல் (auto mode) இருந்து மனிதாபிமான 'மோட்'க்கு (human mode) வாருங்கள்!" எனத் தெரிவித்திருந்ததாம். ஒரு மணித்துளி நேர மழைக்காக மாதக்கணக்கில் தவியாய்த் தவித்துத் தவம் கிடக்கும்நிலை உருவாகியிருக்கின்றது!

**"தண்ணீர் விற்பனைக்கு உண்டு!"**

பாதுகாவலன் பத்திரிகையில் 'என் கேள்விக்கென்ன பதில்' என்ற தொடருக்குக் கேள்விகளை அனுப்புகிறபோது நண்பர் ஒருவர் பின்வரும் கேள்வி ஒன்றை ஒருதடவை எழுப்பியிருந்தார். கேள்வி இதுதான்: "இந்நாள்களில் மிகக் கொடுமையானது என்ன?" எனக் கேட்டிருந்தார். "தண்ணீரை விலைக்கு வாங்கிக் குடிப்பதும், 'தண்ணீர் விற்பனைக்கு உண்டு' என்ற விளம்பரத்தைப் பார்ப்பதும்" என எழுதியிருந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று, உலகளாவிய ரீதியில் மனிதனின் மிகமிக அடிப்படைத் தேவையான தண்ணீருக்கான, குறிப்பாக, குடிநீருக்கான அல்லது தூய நீருக்கான தட்டுப்பாடு மிகப் பெரும் சிக்கலாக - பிரச்சினையாக உருவெடுத்து வருவதை வைத்துக்கொண்டு நமது அன்றாட அடிப்படைத் தேவையைப் பூர்த்தி செய்வதில் நிலவுகிற நிலைமையினைப் புரிந்துகொள்ளலாம்! இறக்குமதி செய்யப்பட்டு விற்கப்படும் பெற்றோலை லீற்றர் ஒன்றுக்கு நூற்றுமுப்பத்தாறு ரூபா கொடுத்து வாங்கிப் பயன்படுத்துகிறோம்.

ஆனால், நமது கிணற்றில் கிடைக்கக்கூடிய நன்நீரை வெளியில் லீற்றர் ஒன்றுக்கு ஏழுபது ரூபா கொடுத்து வாங்கிக் குடிக்கப் பழக்கப்படுத்தப்படுகிறோம்! இரண்டு லீற்றர் போத்தல் தண்ணீரின் விலையே ஒரு லீற்றர் பெற்றோலின் விலையாகிறது!

பெற்றோலின் விலையாவது இரண்டு, மூன்று ரூபாவால் அவ்வப்போது குறைகிறது. ஆனால், போத்தல் தண்ணீரின் விலையோ தங்கம்போல அடம்பிடித்துக்கொண்டு அதன் தரத்திலேயே நிற்கிறது!

இந்நாள்களில், இந்தியாவில் குறிப்பாகச் சென்னையில் மக்கள் தண்ணீருக்காகப் படும்பாடு பெரும் பாடாக இருப்பதை தொலைக்காட்சிகளின் ஊடாக அறியக்கூடியதாக இருக்கிறது.

எமது தண்ணீர் வளங்களைப் பாதுகாத்து, தண்ணீரைச் சேமித்து, இயற்கையைப் பாதுகாக்கவில்லை என்றால் சென்னையில் தண்ணீரின்மையால் ஏற்பட்டிருக்கும் ஆபத்தான நிலைமை நமது மண்ணிலும் மிக மோசமான நிலையாக நாளடைவில் மாறும் என அறுதியிட்டுக் கூறமுடியும்.

**தங்கம்போன்ற நிலையில் தண்ணீர்!**

பூமியின் மொத்தப் பரப்பளவில் எழுபது சதவிகிதத்தில் தண்ணீர் நிறைந்துள்ளது என்று புவியியலும், அனைத்து உயிரினங்களின் தொடக்கம் தண்ணீர் என்று உயிரியலும், தண்ணீர் மனித நாகரிகத்தின் தொட்டில் என்று வரலாறும், இரண்டு பங்கு ஹைட்ரஸ்ன் அணுவும் ஒரு பங்கு ஒட்சிசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணுவும் சேர்ந்ததுதான் தண்ணீர் என்று இரசாயணவியலும், நிறமும் மணமும் அற்ற தெளிவான திரவம்தான் தண்ணீர் என்று பௌதீகவியலும், உயிரைப் படைக்கக் காக்க அழிக்க வல்லது தண்ணீர் என்று தத்துவமும் கூறுகின்றன" எனத் தண்ணீரின் முக்கியத்துவத்தையும் இயல்பையும் அதன் சிறப்பையும் அ. அன்ரன் கமிலஸ் ஒருமுறை 'தண்ணீர் எனும் திரவத் தங்கம்' என்ற கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார்.

**நீரின்றி உயிர்களோ உலகமோ வாழாது!**

"வரப்புயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும், நெல் உயரக் குடி உயரும், குடி உயரக் கோன் உயரும்" என ஔவையாரின் பாடல் ஒன்று நீரின் முக்கியத்துவத்தினையும் நீரினால் மக்களின் வாழ்வு எவ்வாறு உயருகிறது என்பதனையும் மிகச் சிறப்பாகத் தன் எளிமையான வரிகளின் வழியாக எடுத்துக் கூறுகிறார்.

திருவள்ளுவர் தமது குறளில் நீரின் இன்றியமையாப் பண்பை மிகக் காத்திரமான சிந்தனையாக வெளிப்படுத்துகிறார். "நீர்இன்று அமையாது உலகு எனின் யார்யார்க்கும் வான்இன்று அமையாது ஒழுக்கு" என்று கூறுவதின் ஊடாக தண்ணீர் இன்றி உலகில் யாராலும் வாழமுடியாது. அந்தத் தண்ணீரும் மழையின்றேல் கிடைக்காது. உயிர்கள் வாழ மழை மிகமிக முக்கியமானது என்ற சிந்தனையை முன்வைப்பதன் மூலமாக தண்ணீர் உலகத்தின் இருப்புக்கு எவ்வளவு அத்தியாவசியமானது என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

**நீர்வளத்தை உறுதிப்படுத்த உலக தண்ணீர் தினம்!**

1992இல் பிறேசிலில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றாடல், அபிவிருத்தி தொடர்பான நாற்பத்தியேழாவது பேரவைக் கூட்டத்தில் நூற்றுதொண்ணூற்று மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவற்றில் ஒன்றாக 1993இலிருந்து பங்குனித்திங்கள் 22ஆந் திகதி உலக நீர்வள நாளாகக் கொண்டாடத் தீர்மானிக்கப்பட்டது. நீர்வளப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதும் நாளாந்தப் பிரச்சினையாக மாறிவரும் நீர்ப் பற்றாக்குறையைத் தீர்ப்பதும் இந்நாளை ஏற்படுத்தியதன் முக்கிய நோக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாழ். மாவட்டத்திற்கு நீர் விநியோகம்!**

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மக்களின் பரம்பல் அதிகமாக இருப்பதற்குக் குடா நாட்டினுடைய புவியியல் அமைப்பு முக்கிய காரணமாக இருக்கலாம் எனத் தெரிகிறது. குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டின் இயற்கையாகக் கிடைக்கக்கூடிய கடல் வளம், விவசாய வளம், தண்ணீர் வளம் என்பவை குடாநாட்டின் உள்ளூர்த் தேவைகளைப் பூர்த்திசெய்கிற ஒரு செல்வந்த பூமியாக வைத்திருந்தன. ஆனால், காலப்போக்கில் இவ்வியற்கையான வளங்களில் பல பாதிப்புக்கள் ஏற்பட்டு யாழ்ப்பாணக் குடாநாடு பல ஆபத்துக்களை எதிர்கொள்ளப்போகிறது என்பது கண்கூடு. அவற்றில் ஒன்றுதான் தண்ணீர்ப் பிரச்சினை.

இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இரணைமடுவிலிருந்து யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு நீர் கொடுப்பதா இல்லையா எனப் பல மாதங்களாக வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன. தற்பொழுது இரணைமடுவிலிருந்து யாழ்ப்பாண மாவட்டத் திற்கு தண்ணீர் கொண்டுசெல்வதற்கான ஏற்பாடுகள் நடந்த வண்ணமாக இருக்கின்றன.

இதற்காக, வடக்கு மாகாணசபையில் தண்ணீர்ப் பிரச்சினை சமர்ப்பிக்கப்பட்டு மாற்று யோசனைகள் முன்மொழியப்பட்டதே தவிர எமது மண்ணின் நீர்வளத்தை எப்படிப் பாதுகாக்கலாம் எனத் தீர்மானங்கள் எடுக்கப்பட்ட தாகவோ அன்றேல் அவ்வாறான காத்திரமான சிந்தனைகள் முன்மொழியப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டதாகவோ இது வரையில் தகவல்கள் இல்லை!

இத்தகைய முக்கியமான விடயங்கள் குறித்துக் கவலை யில்லாத அசமந்தப் போக்கை எமது அரசியல்வாதிகள் - மக்களின் பிரதிநிதிகள் கொண்டிருக்கிறார்கள் என்பதை இதுபோன்ற விடயங்களிலிருந்து தெளிவாக தெரிந்து கொள்ளலாம்!

**வடக்கின் குளங்களின் நிலை!**

யாழ்ப்பாணக் குடாநாட்டின் குளங்களுக்கு ஏற்பட்ட நிலைபோன்றே வடக்கு மாகாணத்தின் ஏனைய பல குளங்களின் நிலைமைகளையும் நோக்கவேண்டி இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாணத்தில் உள்ள குளங்கள் அனைத்தும் புனரமைக்கப்பட்டுத் தொடர்ந்து பாதுகாக்கப்படும் என்றால் வேளாண்மையை இரண்டு போகமும், ஏனைய பயிர்ச் செய்கைகளை வேண்டியது போலவும், நன்நீர் மீன்பிடியை இன்னும் அதிகமாகவும் மேற்கொண்டு வறுமையை நீக்கி வளமான பிரதேசங்களாக நமது பிரதேசங்களை மாற்றமுடியும் எனத் திடமாகக் கூறலாம்.

ஆனால், நூற்றுக்கணக்கான குளங்களை வைத்துக் கொண்டு வரட்சியால் இப்பிரதேசங்கள் வாடுவதும் மக்களை வரட்சியில் வாழவிடுவதும் பெரும் பாவம் என்பது நம் அரசியல் தலைவர்களுக்கும் பொறுப்பானவர்களுக்கும் எப்படித் தெரியாமல் போகும்? வாழாது கிடக்கிறார்களன்றோ!

**அழித்தொழிக்கப்பட்டவை ஏராளம்!**

ஈழத்தில் 1970களில் இனங்களுக்கிடையில் உருவான உள்நாட்டு முரண்பாட்டினால் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொன்றொழிக்கப்பட்டனர். கோடிக்கணக்கான உடைமைகள், பெறமுடியாத பண்பாட்டு பொக்கிஷங்கள் எல்லாம் இல்லா தொழிக்கப்பட்டன. இதற்கப்பால், வேண்டுமென்றே அழித் தொழிக்கப்பட்டவை ஏராளம் ஏராளம்.

இதற்குச் சான்றாக 1981இல் இலங்கை அரசினால் நன்கு திட்டமிடப்பட்டு எரிக்கப்பட்ட யாழ். பொது நூலகத்தைக் குறிப்பிட முடியும். எத்தனை பிரமாண்டமான நூலகத்தை அமைத்து எத்தனை ஆயிரம் நூல்களை இனி வைத்தாலும் அழிக்கப்பட்டவை எக்காலத்திலும் மீளப் பெறமுடியாத மிக அரிதான பெரும் பொக்கிஷங்களே. இதுவும் இன அழிப்பின் ஓர் அங்கமாகவே கொள்ளப்படவேண்டும்!

ஆனால், ஒரு மக்கள் குழுமத்தினரின் அசட்டை யீனத்தால், போதிய அறிவின்மையால் அல்லது வெறும் சுயநல நோக்கத்தோடு செயற்படுவதால் தங்களின் இருப்புக்கு மிகவும் அத்தியாவசியமானவற்றை நிரந்தரமாக இழந்து போகக்கூடிய நிலையுமேற்படலாம். அத்தகையவற்றுள் ஒன்றுதான் குளங்கள்! அவற்றைப் பாதுகாக்காமையும் பராமரிக்காமையும் பெரும் துன்பங்களை ஏற்படுத்தவல்லன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதைக் கட்டாயமாக நாம் உணர்ந்தாக வேண்டியும் உணர்த்தியாக வேண்டியும் இருக்கிறது.

இக்குளங்களை அரசு பாதுகாத்துப் பராமரிக்கவேண்டிய கடப்பாடு இருக்கிறது. அரசு இவ்விடயம் குறித்து அக்கறை காட்டினாலும் அது போதாததாகவே இருக்கிறது - இருந்துவருகிறது என்பது கவனத்தில் கொள்ளப்படவேண்டிய விடயம். அத்துடன் இது குறிந்து நம்மக்களின் பிரதிநிதிகள் விழிப்புணர்வற்று இருப்பது - பேசாதிருப்பது மிகப்பெரும் பின்விளைவுகளை ஏற்படுத்தப்போகிறது என்பதைக் காலம் நமக்குக் கற்றுத்தந்த வண்ணமாக இருக்கிறது.

குளங்கள் ஒரு தேசத்தின் அதியுன்னதமான வளங்கள் ஆகும். இவ்வளம் இயற்கையாக அமைவதுண்டு, அதேவேளை தேவைக்கு ஏற்ப அமைக்கப்படுவதும் உண்டு. இயற்கையாக உருவாகிற குளங்களைச் சீர்செய்து செப்பனிட்டு புனரமைத்துப் பாதுகாத்துப் பராமரிப்பதும், விவசாயத் தேவைக்காகக் கட்டப்படும் குளங்களை புவியியல் அமைப்பைக் குழப்பாது உருவாக்குவதும் இன்றியமையாததே.

குளங்கள் குடிநீர்த் தேவையைப் பெரிதும் நிவர்த்தி செய்வதோடு, விவசாயம் நன்நீர் மீன்பிடி போன்ற தொழில்களைப் பெருமளவிற் பெருக்குவதோடு வரண்ட காலங்களில் வரட்சியைப் போக்கி வசந்தத்தை ஏற்படுத்தும் புதுமையாகவும் திகழுகின்றன என்பதை அன்றாட வாழ்க்கைச் சூழலில் இருந்து புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது.

**யாழ். மாவட்டத்தில் 300 குளங்கள் அழித்தொழிக்கப்பட்டுள்ளன!**

யாழ். மாவட்டத்தில் மட்டும் ஏறக்குறைய சிறிதும் பெரிதுமான முன்னூறு குளங்கள் அழிந்துள்ளன அல்லது அழியவிடப்பட்டுள்ளன என்ற தகவலைப் பொறியலாளர் மா. இராமதாஸன் 2018.10.04அன்று யாழ். ஊடக அமையத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் குறிப்பிட்டுள்ளார். யாழ்ப்பாண மாவட்டத்தை வளப்படுத்தி வைத்திருக்கக்கூடிய குளங்களின் நிலைமைகள் தொடர்பாக அவர் குறிப்பிட்ட கருத்து, அனைவரது மனங்களிலும் இருக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறியலாளர் மா. இராமதாஸன் அவர்களின் தகவலின்படி, "யாழ்.மாவட்டத்தில் நிலத்து நீரை சேகரிப் பதற்காக உருவாக்கப்பட்டிருந்த ஆயிரத்தி எண்பத்தி மூன்று குளங்களில் முன்னூறு குளங்கள் அடையாளம் தெரியாமல் அழிக்கப் பட்டிருக்கின்றன. இதற்குக் காரணம் குடியேற்றங்கள், நீண்டகால பாராமரிப்பின்மை போன்றவையாகும். குறிப்பாக, யாழ். மாநகரசபை எல்லைக்குள் இருந்த நாற்பது குளங்களில் முப்பத்தினான்கு குளங்கள் மட்டும் இப்போது இருக்கின்றன...' என்கிறார். அவையும் அழிந்தொழிந்துபோகும் நிலையில் தூர்ந்து போய்க் கொண்டிருக்கின்றன என்பதை இக்குளங்களை அக்கறை யோடு பார்க்கிறவர்கள் புரிந்துகொள்வார்கள்!

**நிலத்து நீர் வேறு, நிலத்தடி நீர் வேறு!**

நமது நிலத்து நீரைப் பாதுகாத்தே ஆகவேண்டும். இல்லையேல் நமக்குக் குடிப்பதற்குத் தூயநீர் கிடைக்காத ஒரு சூழ்நிலை ஏற்படுவது உறுதி! இங்குதான் நிலத்து நீர் பற்றியும், நிலத்தடி நீர் பற்றியும் சிறு விளக்கம் அவசியமாகிறது. ஏனெனில், இவ்விரு விடயங்களையும் ஒன்றெனப் பலர் கொள்ளுகிறார்கள்.

நிலத்து நீர் வேறு, நிலத்தடி நீர் வேறு. இவை இரண்டினதும் அடிப்படைகளைப் புரிந்துகொண்டால்தான் இவ்விடயம் குறிந்து மக்கள் விழிப்புணர்வு பெறவும் தொடர் செயற்பாடுகளில் இறங்கவும் ஈடுபடவும் முடியும். இவ்விளக்கத்தினைப் பொறியியலாளர் மா. இராமதாஸன் அவர்கள், "நிலத்தடி நீர் என்பது அறுபது, எழுபது அடி ஆழத்திற்குக்கீழ் சுண்ணாம்புப் பாறைகளுக்குள் உள்ள குகைகள் வழியாக ஓடிக்கொண்டிருக்கும் நீர். நிலத்து நீர் என்பது நிலத்தில் மயிர்த்துளை குழாய்களில் தேக்கி வைக்கப்படும் நீர். இந்த நீரே ஆரம்பத்தில் கிணறுகளில் ஊறும் நீர். இப்போது குழாய்க் கிணறுகளில் வரும் நீர் நிலத்தடி நீர் எனச் சொல்லப்படும் சுண்ணாம்புப் பாறைகளுக்குள் இருக்கும் நீரோட்டங்களில் இருந்து எடுக்கப்படும் நீராகும். அது உகந்த நீர் அல்ல. ஆகவே, நிலத்து நீரைச் சேகரிப்பதற்காகவே குளங்கள் உருவாக்கப்பட்டிருந்தன" என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குளங்களில் அக்கறை கொள்வோம்**

ஆகவே, மக்களின் இருப்புக்கு மிகமிக அவசியமான நிலத்து நீரைப் பாதுகாக்க வேண்டுமென்றால் குளங்கள் கட்டாயமாகப் பாதுகாக்கப்பட வேண்டும், பராமரிக்கப்பட வேண்டும் என்பது தவிர்க்க முடியாத நிதர்சனமாகிறது.

இதனை யார் முன்மொழிவார்கள், முன்னெடுப்பார்கள் என்பது பெரும் சர்ச்சையாக இருப்பினும் அது சமூகத் தேவையாக - எதிர்கால சந்ததிகளுக்கான மிகப்பெரும் வேண்டுதலாக உருவாகியிருக்கிறது. உதாரணமாக யாழ். மாநகரசபைக்கு உட்பட்ட பிரதேசத்தை எடுத்துக்கொண்டால் இப்பிரதேசத்திற்குட்பட்ட கிணறுகளில் இருந்து குடிநீரைப் பெறவும் ஏனைய தேவைகளை நிவர்த்தி செய்யவும் மாநகரசபைக்கு உட்பட்ட நாற்பது குளங்கள் மூலகாரணமாய் இருந்திருக்கின்றன என்பது தெரிகிறது.

"யாழ். மாநகரசபை எல்லைக்குள் அமைந்திருந்த குளங்கள் மிகவும் நேர்த்தியாக அமைக்கப்பட்டிருந்தன. ஆனால், அவை இன்று நிலத்து நீரை தேக்கி வைக்கக்கூடிய நிலையில் பெரும்பாலானவை இல்லை. ஆரம்பத்தில் குளங்கள் மக்களிடம் இருந்தன. பின்னர் அவற்றை மத்திய அரசாங்கம் பெறுப்பேற்றதன் பின்னர் மக்கள் குளங்களில் இருந்து அந்நியப்பட்டார்கள். அதனால் மத்திய அரசுக்கு எங்கே குளங்கள் இருக்கின்றன. அவை தொடர்பான தகவல்கள் எதுவும் தெரியாது" எனப் பொறியியலாளர் மா.இராமதாஸன் குறிப்பிட்டது இங்கு அவதானிப்புடன் நோக்கத்தக்கது.

இப்போது, மக்களாலும் மாநகரசபையாலும் அரசாலும் கைவிடப்பட்ட குளங்கள் நம்மையெல்லாம் விட்டு விரைவிலே கைநெகிழும் என்பதை மக்களும் மக்களின் பிரதிநிதிகளும் மனதில் இருத்துவது மிக முக்கியமானது. ஏனெனில், இக்குளங்கள் நம்மைவிட்டுக் கைநெகிழும்போது நாம் கையறுநிலைக்குத் தள்ளப்படுவோம் என்பதையும் நினைவில் நிறுத்துவது நல்லது.

குளங்களை மக்கள் தங்கள் உடைமையாகக் கொள்கிற போதுதான் அவற்றை பாதுகாக்கவும் பராமரிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவும் முன்வருவார்கள். இதற்கான ஆலோசனைகள் முன்மொழியப்படவேண்டும். உதாரணமாக கிளிநொச்சியில் இரணைமடுக்குளம், வன்னேரிக்குளம், மன்னாரில் கட்டுக் கரைக்குளம், முல்லைத்தீவில் முத்தையன்கட்டுக்குளம் போன்ற பெரும் குளங்கள் அரசின் நேரடிக் கண்காணிப்பில் இருப்பது அவற்றை பாதுகாக்கவும் பராமரிக்கவும் உதவியாக இருக்கும்.

ஆயினும், நமது பிரதேசங்களில் உள்ள சிறுசிறு ஆயிரக்கணக்கான குளங்கள், உதாரணமாக, யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசத்தை எடுத்துக்கொண்டால் நரிக்குண்டுக்குளம், உப்புக்குளம், பிரப்பங்குளம், இலந்தைக் குளம், ஆரியகுளம், புல்லுக்குளம், நெடுங்குளம், தேவரிக்குளம் போன்ற சிறுசிறு குளங்களும் அக்குளங்களைச் சுற்றியுள்ள மக்களும் இவற்றுக்குப் பொறுப்பாக இருப்பதன் மூலம் அவற்றைப் பராமரிக்கவும் பாதுகாக்கவும் முடியும்.

எவ்வாறெனில், மக்கள் இக்குளங்களுக்குள் தங்கள் குப்பைகூளங்களை முதலில் கொட்டாதிருப்பதே குளங்களைக் பாதுகாப்பதற்கான - பராமரிப்பதற்கான முதல் முயற்சியாக, வழியாக அமையும்! தமது குளம் என்ற உணர்வு வந்து விட்டால், குப்பைகூளங்களைப் போடுவதையாவது தவிர்ப் பார்கள் என நம்பலாம்.

**உதயன், 2019.07.14**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 78 கல்வி அடைவு மட்டத்தினை அதிகரிக்க!

**"மூளையிருக்கா முதலாளி?!"**

மாட்டிறைச்சிக் கடையொன்று இருந்தது. அக்கடைக்கார முதலாளியே அக்கடையின் தொழிலாளியும் ஆவார். மாட்டு மூளை அப்பிரதேச மக்களால் விரும்பி வாங்கப்பட்டதால் கடை திறந்ததும் மாட்டு மூளை விற்பனை தீர்ந்துவிடும். இவ்வாறு மாட்டு மூளை விற்றுத் தீர்ந்ததும் ஒவ்வொரு நாளும் கடையை மூடப்போகும் நேரத்தில் ஒருவன் வந்து, "முதலாளி மூளையிருக்கா?!" என்று கேட்பான். அதற்கு முதலாளியோ, 'மூளை இல்லை' என்றவுடன் 'உங்களிடம் மூளையில்லையா முதலாளி?!' என்று நக்கலாகச் சொல்லிவிட்டுப் போவான்.

'முதலாளி மூளையிருக்கா?' என அம்மனிதன் ஒவ்வொரு நாளும் தன்னிடம் கேட்டுத் தன்னை இழிவுபடுத்துவதாக எண்ணியெண்ணி அம்மாட்டிறைச்சிக் கடைக்கார முதலாளி வருத்தமுற்றான். எனினும் அவனுக்குத் தகுந்த பாடம் புகட்டவேண்டும் என்பது அம்முதலாளியின் பெருவிருப்பம். நாள்கள் நகர்ந்தன.

ஒருநாள் அம்முதலாளியின் நண்பர் ஒருவர் அவரைப் பார்ப்பதற்காக வந்திருந்தார். அவரிடம் 'உங்களிடம் மூளை யில்லையா முதலாளி!' எனத் தன்னை ஒவ்வொரு நாளும் எள்ளி நகையாடும் மனிதனைப்பற்றிக் கூறினார். முதலாளியின் நண்பர், 'கவலைப்படாதே! அவன் இன்று வருகிறபோது நான் பார்த்துக்கொள்கிறேன்!' எனக் கூறிவிடுகிறான்.

அன்று இறைச்சி விற்பனை முடிந்து கடையை மூடப்போகும் வேளையில் அந்நபர் வந்து, "முதலாளி மூளையிருக்கா?" என்று வழக்கம்போல கேட்கிறான். அதற்கு முதலாளியின் நண்பன், 'இதுவரை வந்த அனைவருக்கும் மூளையிருந்தது. துரதிஸ்ரவசமாக உனக்குத்தான் மூளை யில்லை!' என்றார். இப்பதிலைக் கேட்டதும் என்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதென்று தெரியாமல், அக்கம் பக்கம் பார்த்துவிட்டு அங்கிருந்து மறைந்து போகிறான் அவன். அந்நாள் தொடக்கம் இந்நாள் வரை அவனை அவ்விறைச்சிக் கடைப்பக்கம் காண்பதே கிடையாது!

**நான்கு வகைப் புத்தி!**

மனித மூளையை ஆன்றோர் நான்கு வகையாகப் பிரித்திருப்பதாக கலாபூசணம் எம். இராஜதுரை 2018.03.28 அன்று 'உதயன்' நாளிதழில் எழுதிய 'இலங்கையின் கல்வி நிலை' என்ற கட்டுரையில் குறிப்பிடுகிறார். அவை, 1) மண்ணாங்கட்டிப் புத்தி 2)கரிப்புத்தி 3)வாழைத்தண்டுப் புத்தி 4)கர்ப்பூரப் புத்தி ஆகும்.

1) மண்ணாங்கட்டிப் புத்தி என்பது, ஞாபக சக்தி, கிரகித்தல் சக்தி அற்றவர்களை அல்லது மிகமிகக் குறைவானவர்களை குறிப்பதாகும். சொல்லிச் சொல்லி ஒன்றுமே ஏறவில்லை என்றால் 'மண்டையில் களிமண்ணா இருக்கு?' என ஆசிரியர்கள் மாணவர்களை ஏசுவதைப் பார்க்கலாம். படித்ததைப் புரிந்துகொள்வதற்கு, மனதில் நிறுத்துவதற்கு வெவ்வேறு அணுகுமுறைகளை - வழிமுறைகளை இவர்கள் கைக்கொள்ளவேண்டும். இவர்கள் மீண்டும், மீண்டும், மீண்டும் மீட்டல் செய்யவேண்டியவர்கள். இல்லையென்றால் படிப்பது ஒன்றும் மனதில் நிற்காமல் போய்விடும்.

2) கரிப் புத்தி என்றால், கரியில் தீ உண்டாக்கி எவ்வாறு ஊதி ஊதிப் படிப்படியாக நெருப்பு, கரியில் பற்றிக் கொள்ளுகிறதோ அதுபோல இப்பேர்ப்பட்டவர்களுக்கு ஊக்கப்படுத்தல்கள், உற்சாகப்படுத்தல்கள் அதிகம் கொடுக்கிற போது படிப்படியாக முன்னேறுவார்கள்.

3) வாழைத்தண்டுப் புத்தி என்பது, பச்சை வாழைத்தண்டில் தீப்பற்றாது. அது காய்ந்தால் தீ உடன் பற்றிக்கொள்ளும். அதுபோல, இவ்வாறானவர்கள் மெதுவாகக் கற்கும் மாணவர்களாக இருக்கலாம். அதனால், அவர்கள் மெது மெதுவாக விடயங்களை கற்றுக்கொள்ள சந்தர்ப்பங்கள் வழங்கப்படுமென்றால், மெதுவாகக் கற்கும் அவர்கள் நாளடைவில் கற்றுத்தேற வாய்ப்புண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) கற்பூரப் புத்தி எப்படிப்பட்டது என்றால், கர்ப்பூரத்தில் தீயை வைத்த உடன் பற்றிக்கொள்வதுபோல இப்பேற் பட்டவர்கள் ஒருதடவை கேட்டால் போதும். கேட்டவை, கற்றவை அப்படியே நினைவில் நிற்கும் ஆற்றல் பெற்றவர் களாக இருப்பார்கள். ஆக, ஒவ்வொரு மாணவனும் எவ்வகைப் புத்தியைக் கொண்டிருக்கிறான் என்பதைத் தேர்ந்து தெளிகிறபோதுதான் அவர்களை வழிநடத்த - வழிப்படுத்த முடியும், அவர்களோடு வழிநடக்க முடியும்.

**இந்தப் புத்தி எந்தப் புத்தி?**

மாணவர்கள் தங்களின் தொடருந்துப் பயணம்பற்றி நான்கு பக்கங்களில் கட்டுரை எழுதும்படி பணிக்கப்பட்டார்கள். ஒரு மாணவன் பின்வருமாறு கட்டுரையை ஆரம்பித்திருந்தான். "காலை ஏழு மணிக்கு நானும் என் குடும்பத்தினரும் கொழும்பு செல்வதற்காக யாழ்ப்பாணத் தொடருந்து நிலையத்தில் நின்றோம். தொடருந்து குறித்த நேரத்தில் வந்தது. அதில் நாங்கள் ஏறிக்கொண்டோம்" என ஆரம்பித்து, "அத்தொடருந்து கடகட கடகட கடகட எனப் புறப்பட்டது. அத்தொடருந்து கடகட கடகட கடகட கடகட கடகட கடகட கடகட கடகட கடகட கடகட" என முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம் பக்கங்களை 'கடகட' என்ற வார்த்தையால் கடகட என நிரப்பிவிட்டு இறுதியில், "மாலை ஆறு மணியளவில் அத்தொடருந்து கொழும்பு தொடருந்து நிலையத்தை சென்றடைந்தது. நாங்கள் இறங்கிக்கொண்டோம்!" என நிறைவு செய்திருந்தான்.

'கடகட கடகட' என்ற வார்த்தையால் பக்கம் பக்கமாக எழுதப்பட்டிருந்த கட்டுரையைப் படித்த ஆசிரியருக்கு கடும் கோபம் வந்தது. ஒவ்வொரு மாணவனாக அழைத்து கட்டுரைகளின் சரி, பிழைகளைப் பார்த்துக்கொண்டிருந்தார். மேற்சொல்லப்பட்ட கட்டுரையை எழுதிய மாணவனை அழைத்து, "அது என்னடா கடகட கடகட?" எனக் கேட்கிறார். அம்மாணவன், 'அது சேர், தண்டவாளத்தில் 'கடகட கடகட கடகட' என்றுதான் தொடருந்து சென்றது. அதனால்தான் அப்படி எழுதினேன்!' என்றான். ஆசிரியர் நல்ல 'பூசை' கொடுக்க, அவன் அழத்தொடங்கினான். "இனிமேல் இவ்வாறு செய்யக்கூடாது!' என எச்சரிக்கை செய்துவிட்டு அவனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரையைக் கொடுக்கிறபோது, 'கடகட கடகட கடகட' என்ற சொல்லுக்குப் பதிலாக இடையிடையே 'கடக்கடக் கடக்கடக் கடக்கடக்' என்ற சொற்றொடர் இருப்பதை ஆசிரியர் அந்நேரத்தில் அவதானிக்கிறார்.

உடனே ஆசிரியர், "அது என்ன, 'கடகட கடகட' என்ற சொற்றொடருக்கு இடையிடையே 'கடக்கடக் கடக்கடக்' என எழுதிவைத்திருக்கிறாய்?" என விளக்கம் கேட்கிறார். அவனும் அழுதுகொண்டே, "அது சேர், 'கடகட கடகட' எனச் சென்றுகொண்டிருந்த தொடருந்து பாலங்களைக் கடக்கும்போது 'கடக்கடக், கடக்கடக்' எனச் சென்றது! பாதையில் இடையிடையே பாலங்கள் வருவதுபோல நானும் பந்திகளுக்கு இடையிடையே 'கடக்கடக் கடக்கடக்' என எழுதினேன்!" என்றான்.

**அடைவு மட்டத்திற்குக் காரணமானவர்கள் பலர்**

பொதுவாக, 'மாணவர்கள் சரியாகப் படிக்கிறார்கள் இல்லை!' அல்லது 'ஆசிரியர்கள் ஒழுங்காகப் படிப்பிக்கிறார்கள் இல்லை!' என்பதுதான் கல்விப் பெறுபேற்றின்போது பேசப் படுகிற அல்லது குற்றம்சாட்டப்படுகிற முக்கிய இருசாராராக இருப்பார்கள்.

ஆனால், மாணவர்களையும் ஆசிரியர்களையும் வழி நடத்தவேண்டிய - கண்காணிக்கவேண்டிய கல்வி வலயமும், மாகாணக் கல்வித் திணைக்களமும், கல்வி அமைச்சும் தங்களின் கடமைகளை - பொறுப்புக்களை அந்தந்தக் காலங்களில், மாணவர்களுக்கு உகந்தமுறையில் நிறை வேற்றுகிறதா எனப் பார்ப்பது, கல்விச் செயற்பாடுகளைப் பயனுள்ள வகையில் - பயன்கொடுக்கக்கூடிய நிலையில் முன்னெடுக்கவும், பரீட்சைப் பெறுபேறுகளை - அடைவு மட்டத்தினை உயர்த்தவும் உறுதுணை புரியும். அவ்வகையில், மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்களைக் கடந்து அதற்கு மேலுள்ள கல்விப் பணிமனை, கல்வித் திணைக்களம், கல்வி அமைச்சு இவ்விடயத்தில் கூடியகவனம் செலுத்துவது அவசியமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்விச் செயற்பாடுகளுக்குப் பெரும் நிதி!**

ஆசிரியர்களின், மாணவர்களின் கல்விச் செயற் பாடுகளுக்கு - மேம்பாடுகளுக்கு மத்திய - மாகாணக் கல்வி அமைச்சிலிருந்து, அதிபர் ஆசிரியர்களின் சம்பளம், பாடசாலைக் கட்டடங்கள் போன்றவற்றைவிட, பெரும் தொகை நிதி {Education Sector Development Frame Work and Programme(ESDFP)} என்ற நிகழ்ச்சி நிரலின்கீழ் செலவிடப்படுவதாகத் தெரிகிறது. இதற்குரிய முன்திட்டம் பாடசாலைகள், கல்விவலையங்கள் ஆகியவற்றிலிருந்து பொதுவாக மார்கழி மாதம் பெற்றுக் கொள்ளப்பட்டாலும், தொடரும் புதிய கல்வியாண்டின் இரண்டாம் தவணை அளவில்தான் பணம் வலயத்தையும் பாடசாலையையும் வந்து சேருகிறது. இதனால், அந்நிதியைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் திருப்திகரமானதாகவும், உரிய நோக்கத்தை நிறைவுசெய்யத் தவறிவிடுவதாகவுமே அடிமட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

**மூன்றாம் தவணையில்தான் மும்முரம்!**

எல்லாப் பாடங்களுக்குமுரிய செயற்பாடுகளும் உதார ணமாக செயலமர்வுகள், கலந்துரையாடல்கள், கையேடுகள், மாகாணப் பரீட்சைகள், வலயப் பரீட்சைகள், பாடசாலை மட்டப் பரீட்சைகள் போன்றவை பெரும்பாலும் மூன்றாம் தவணைகளில் தரம் பத்து, பதினொன்று மாணவர்களுக்கு இடம்பெறுவதால் முக்கியமான பாடப் பரப்புக்களை நிறைவு செய்தல், மீட்டல் செய்தல், மாணவர்கள் விடும் தவறுகளை பிழைதிருத்தம் செய்தல் போன்ற முக்கிய செயற்பாடுகளுக்கு காலம் போதாது போகிறது.

'மாகாணம் அனுப்பும் நிதியைச் செலவு செய்துவிட வேண்டும்!' என்ற கொள்கை மிகக் கவனமாக கல்வி வலயங்களால் கடைப்பிடிக்கப்படுகிறது. இதனால், மாணவர் களின் அடைவு மட்டத்தினை உயர்த்துவதற்காகச் செய்யப்பட வேண்டியவை உரிய முறையில் பயன்படுத்தாமல் 'எதை யாவது செய்து நிதியை முடித்து, கணக்கறிக்கையை அனுப்பிவிட்டால் சரி!' என்ற மனநிலையோடு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதுபோல தோன்றுகிறது. வலயத்திலுள்ள கல்வி அபிவிருத்தி, கல்வி முகாமைத்துவக் கிளைகளின் பிரதான நோக்கம் ஆசிரியர், மாணவர் மட்டச் செயற்பாடுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னெடுத்து அவர்களின் தரத்தினை மேம்படுத்துவதாகும். ஆனால், தற்போதைய நடைமுறையைப் பார்க்கிறபோது கொடுக்கப்படுகிற நிதியைப் பயன்படுத்தி எந்தெந்த முக்கிய - தேவையான கல்விச் செயற்பாடுகளைச் செய்வதை விடுத்து எதையாவது செய்து முடித்துவிடுவதே இலக்காக இருப்பதுபோல தெரிகிறது!

**கடைசி நேரம்வரை காத்திருப்பு!**

ஒவ்வொரு அலகும் நிறைவு செய்யப்படும்போது அது தொடர்பான வினாக்களும் பயிற்சிகளும் அளிப்பதைவிடுத்து, ஆண்டு இறுதியில் பரீட்சைக்கு ஒரு மாதம் அநேகமாக ஒருசில கிழமைகளுக்கு முன் இவற்றை மாணவர்களுக்குத் திணிப்பது அவர்களது மனநிலையைப் பாதிக்கும் செயற்பாடாகும். இருஇரு என்று இருந்துவிட்டு, கடைசி நேரத்தில் செயற்படுகிற இச்செயற்பாட்டை ஆங்கிலத்தில் 'அற் த இலவன்த் அவ' (at the eleventh hour) என அழைக்கிறார்கள்.

ஒன்பது பாடத்துக்குமான கையேடுகள், செயலமர்வுகள் அனைத்தும் அநேகமாக மூன்றாம் தவணையில் அதுவும் அதன் இறுதி நாள்களில் நடைபெறுவதால் தரம் பதினொன்று மாணவர்கள் அதாவது சில நாள்களில் க.பொ.த. சாதாரண பரீட்சை எழுதவிருக்கும் மாணவர்கள் பெரும் இடர்பாடுகளை எதிர்கொள்வதோடு மன உளைச்சலோடுதான் பரீட்சையை எதிர்கொள்கிறார்கள். இந்நடைமுறையே அதாவது கடைசி நேரத்தில் செயற்படல் தொடர்வதால் பரீட்சைப் பெறுபேறுகள் வீழ்ச்சி அடைந்துகொண்டு போவதற்குக் குறிப்பிடத்தக்க ஒரு காரணமாக இருக்கலாம் என உணரப்படுகிறது.

**பயனாளிகள் யார்?**

'செலவுசெய்யாவிடில் வந்த நிதி திரும்பிவிடும்' என்பதால் மாணவர்களுக்கான கையேடுகள்(அவர்களது தேவைகள் எதுவென இனங்காணப்படாமல்) இறுதி நேரத்தில் சுடச்சுடத் தயாரிக்கப்படுகின்றன. இதனால் அக்கையேடுகள் பெரும்பாலும் மாணவர்களின் தேவையை நிறைவேற்றுவதாய் அமையாது போய்விடுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்துப் பாடக் கையேடுகளும் இறுதிநேரத்தில் தயாரிக்கப்பட்டு வழங்கப்படுவதால் மாணவர்கள் படிப்பதற் கும், படித்ததைக் கிரகிப்பதற்கும், விடுகிற பிழைகளை கண்டுபிடித்துத் திருத்துவதற்கும் நேரம், சந்தர்ப்பம் இல்லாமல் போகிறது.

மேற்சொன்ன கல்விச் செயற்பாடுகளுக்கும் பாடசாலை களுக்கும், கல்வி வலயங்களுக்கும் வழங்கப்படுகிற நிதியைச் செலவு செய்வதற்குப் பயன்படுத்தப்படும் ஊடகமாக மாணவர்கள் பாவிக்கப்படுவதாக ஆகிவிடக்கூடாது! செயலமர்வு என்ற பெயரில் மாணவர்களை நாள்முழுதும் இருத்திவைத்து மூன்று, நான்கு பாடங்கள் ஒரே தடவையில் திணிக்கப்படுகின்றன. இதனால், மாணவர்களைப் பொறுத்தவரையில் எந்தப் பயனும் கிடைப்பதாகத் தெரியவில்லை! இறுதிநேரத்தில் தயாரிக்கப்பட்டு வழங்கப்படும் மாணவர்களுக்கான கையேடு கள், செயலமர்வுகளால் அவர்கள் பயனேதும் பெறாவிட்டாலும் வளவாளர்கள், மேற்பார்வையாளர்கள், இணைப்பாளர்கள் இதனால் பயன் பெறுகிறார்கள்! இறுதிநேரத் திணிப்பால் ஏற்கனவே குழம்பிப்போய் நிற்கிற மாணவர்கள் இப்போது கலங்கிப்போய் நிற்கிறார்கள் என்பது மட்டும் வெளிப்படையான உண்மை.

**ஆசிரியர்கள் மாணவர்களிடம் கேட்டறிய வேண்டும்**

மாகாணக் கல்வித் திணைக்களமும் கல்வி அமைச்சும் மாணவர்களின் பெறுபேறு குறைந்து இருப்பதற்கான காரணம்பற்றி வலயக்கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள் ஆகியோரிடம் கேட்பதோடு அந்தந்தப் பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்களிடமும் நேரடியாகக் கேட்டறிந்து, உண்மை நிலைகளை உறுதிசெய்து, மேற்கொண்டு செய்யப்பட வேண்டிய செயற்பாடுகளைச் செயற்படுத்த ஆவனசெய்ய வேண்டும்.

**அவசரமாக ஆராயப்பட வேண்டியவை!**

நிறைவாக, உதாரணமாக பயங்கரமான யுத்தம் ஆட்கொண்டிருந்த காலங்களில் கல்வி அடைவு மட்டத்தில் வடமாகாணம் ஒருமுறைகூட கடைசி இடத்தை அடைந்ததாகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியவில்லை. ஆனால், வசதிவாய்ப்புக்கள், நிதி உதவிகள் அதிகமாகக் கிடைக்கின்ற இன்றைய சூழலில் எம் மாணவர்களின் கல்வி அடைவுமட்டம் ஏனைய மாகாணங்களோடு ஒப்பிடுகையில் கீழ்நோக்கிச் சரிகிறதென்றால் இவ்விடயம் கட்டாயமாக ஆராயப்பட்டு, காரணங்கள் கண்டறியப்பட்டு, அவை நிவர்த்தி செய்யப்படவேண்டும் என்ற கருத்தினை யாரும் இலேசாகத் தட்டிக்கழிக்க முடியாது. மாகாணக் கல்வித் திணைக்களங்கள், கல்வி வலயங்கள், கல்வி அமைச்சு ஆகியவை சேர்ந்து இன்றைய மேற்சொல்லப்பட்ட அவதானிப்புக்களைக் கருத்தில் கொண்டு தங்கள் திட்டமிடல்களில் புதிய வழிவகைகளை ஆராய்ந்து புகுத்துவார்களா?






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 79 வாக்களிப்பிலிருந்து விலகி வாக்காளர் தவறிளைக்கக் கூடாது!

**பாரதிக ஜனதாகட்சி வராமல் பார்த்தால் சரி!**

சோமாலிய நாட்டில் தேர்தல் நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. கடனாக இந்தியாவில் இருந்து 'ஓட்டர் மிஷினை' வாங்கி கணணி முறையில் இலகுவாக வாக்குப்பதிவு செய்யவும் வாக்குகளை எண்ணவும், அதிக செலவில்லாமல் தேர்தலை நடத்தவும் சோமாலிய நாட்டு அரசு ஏக மனதாக முடிவு செய்தது. வாக்குப் பதிவு குறிப்பிட்ட தினத்தில் நடைபெற்றது. தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டதும் சாரை சாரையாக மக்கள் மயங்கி விழுந்தார்கள்! ஏனெனில் சோமாலியா நாட்டின் அனைத்து இடங்களிலும் பாரதிக ஜனதா கட்சி அமோக வெற்றி பெற்றிருந்தது!

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கூட்டு அவசியமானது**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற தமிழரசுக் கட்சி, ஈபிஆர்எல்எப், ரெலோ, புளொட், (தமிழர் விடுதலைக் கூட்டணியும் இருந்ததாகச் சொல்லப்படுகின்றது) ஆகிய நான்கு கட்சிகள் சேர்ந்த ஒரு கூட்டே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இருந்தது. இக்கட்சிகள் நான்கும் தத்தமது கொள்கைகளோடு தமிழர்களின் விடுதலைக்காக வெவ்வேறு வடிவங்களில் போராடி வந்திருக்கின்றன. அது மட்டுமல்லாது இக்கட்சிகள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பாக மாறுவதற்கு முன்பு வெவ்வேறு காலகட்டங்களில் தனித்தனியே தேர்தல்களில் போட்டியிட்டன என்பதும் வரலாறு.

இக்கட்சிகள் நான்கும் சேர்ந்து ஒன்றாக வந்தது மட்டுமல்லாது, அரசியலில் பங்கேற்பது, தேர்தலில் நிற்பது போன்றவை தமிழ் மக்கள் மத்தியில் மட்டுமல்ல, தேசிய, சர்வதேச ரீதியில் ஒரு பெரிய அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகக் கருதப்பட்டது, கருதப்படுகின்றது. இக்கட்சிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றாய் நின்றதினால், ஒன்றில் ஒன்று தங்கியிருந்ததினால் இதுவரை காலமும் இக்கட்சிகளின் ஆயுள் ஒரு வகையில் உயிரோட்டத்தோடு நீடிக்கின்றது எனலாம்.

**உடைவை ஒட்டாது விட்டால் நலன் கிட்டாது!**

ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள கட்சிகளுள் ஒன்றான தமிழரசுக் கட்சியின் தன்னிச்சையான செயற்பாடுகளும், தன்னிச்சையான போக்குகளும் ஏனைய மூன்று பங்காளிக் கட்சிளுக்கும் மட்டுமல்லாது ஏனைய தமிழ்க் கட்சிகளுக்கும் பொது அமைப்புகளுக்கும் அவ்வப்போது அதிருப்தியை ஏற்படுத்தி வந்ததை அவதானிக்கலாம். இதன் காரணமாக கீரைக்கடைக்கு எதிர்க்கடை என்பதுபோல ஒரு மாற்றணி தேவை என்ற கருத்து பல தரத்தாரிடத்தில் சில ஆண்டுகளாக நிலவி வந்ததைப் பலரும் அறிவார்கள்.

இந்நிலை வலுப்பெற்றதன் காரணமாகவும் தமிழரசுக் கட்சியுடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாகவும்(வேறுவேறு காரணங்களும் இருக்கக்கூடும்!) ஈபிஆர்எல்எவ் அணியின் செயலாளர் நாயகம் சுரேஸ் பிரேமச்சந்திரனும் தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவர் பொன்னம்பலம் கஜேந்திரக்குமாரும் சேர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஈடான மாற்றணியாக ஒரு கூட்டமைப்பை உருவாக்க எண்ணினார்கள். ஆனால் இவர்களின் கூட்டணி இருபத்தொரு நாள்களே நீடித்தது! இந்நிலையில் சுரேஸ் பிரேமச்சந்திரன் தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் சில கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து உதயசூரியன் சின்னத்தில் தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டணியாக இவ்வாண்டு *(2018)* மாசித்திங்கள் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுகின்றார். தமிழ் காங்கிரஸின் தலைவர் பொன்னம்பலம் கஜேந்திரக்குமார் தமிழ்த் தேசிய பேரவையின் பெயரில் துவிச்சக்கரவண்டிச் சின்னத்தில் போட்டியிடுகின்றார்.

**இருக்கைகளைப் பார்க்க, கொள்கைகளைப் பாருங்கள்!**

புளொட் அணியின் தலைவர் த.சித்தார்த்தன், தமிழரசுக் கட்சியுடனான அதிருப்தியில் தேர்தலைக் காரணமாக வைத்துகொண்டு தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் இருந்து விலகாமல் 'தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஒன்றாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கவேண்டும் என்ற கொள்கைக்காகவேனும் தேர்தலில் இருந்து விலகி தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் இருப்போம்' எனத் தமிழரசுக் கட்சியுடன் அதிருப்திப்பட்ட ஒரு சூழலில் கூறியிருக்கின்றார். மக்களின் நலனையும் நீண்டகால அரசியல் பயணத்தையும் முன்வைத்து சிந்திப்பவர்கள் இவ்வாறுதான் சிந்திக்கவேண்டும்! முரண்பாடுகள், சிக்கல்கள் ஏற்படலாம், எனினும் இவ்வாறான நேரங்களில்தான் விவேகமான தீர்மானங்களை மேற்கொண்டு புத்திக்கூர்மையான செயற்பாடு களைச் செய்ய முன்வரவேண்டும்.

**தமிழ் மக்கள் பேரவை!**

தமிழ் மக்கள் பேரவை தமிழர்களின் அரசியல் நிலைப்பாடுகளில் கவனம் செலுத்தி வருகின்ற நிலையில் தேர்தல்களில் நிற்பதில்லை என்ற நிலைப்பாட்டுடன் தொடர்ந்து பயணிக்கின்றது. எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் போக்குகளும் இனப் பிரச்சினைக்கான தீர்வு குறித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் செயற்பாடுகளிலும் திருப்தியளிக்காத நிலையில் மக்களின் பலதரப்பட்ட பிரதிநிதிகளையும் உள்வாங்கி இனப் பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தைத் தெளிவாக முன்வைத்துள்ளார்கள் தமிழ் மக்கள் பேரவையினர். மிக முக்கியமான, காத்திரமான ஒரு பெரும் செயலைச் செய்து முடித்திருக்கின்றார்கள் தமிழ் மக்கள் பேரவையினர்.

தமிழ் மக்கள் பேரவை ஒரு சிந்தனை வட்டம் (think-tank) ஆக இயங்குவது மிகப் பொருத்தமானதும் காலத்தின் தேவையான ஒரு செயற்பாடாகும் எனக் கொள்ளலாம். அவ்வாறாக மக்களின் பிரதிநிதிகள் சேர்ந்து சிந்திப்பது அரசியல்வாதிகள் தான்தோன்றித்தனமாக செயற்படாமல் இருக்க வழிவகுப்பதோடு மக்களின் அரசியல் பிரதிநிதிகளுக்கு நல்லாலோசனைகளை வழங்கவும் முடியும். ஆயினும் தமிழ் மக்கள் பேரவையின் வரவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழு விருப்போடு ஏற்றதாகத் தகவல்கள் இல்லை, அதேபோல அதன் வரவிற்கு முழுமையான எதிர்ப்புத் தெரிவித்ததாகவும் இல்லை. இவ்வாறான சூழ்நிலையில் தமிழ் மக்கள் பேரவையின் வரவையும் அதன் நோக்கத்தினையும் புரிந்துகொண்டு தமிழ் மக்கள் பேரவையின் மக்கள் நலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்ந்த கருத்துக்களுக்கும் செயற்பாடுகளுக்கும் ஒத்துழைப்பு வழங்குவதோடு அவர்களின் கருத்துக்களையும் உள்வாங்கி செயற்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முன்வரவேண்டும். அதற்கு முன் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கும் தமிழ் மக்கள் பேரவைக்கும் இடையிலான உறவு ஆரோக்கியமானதாக அமைய வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்கள் பேரவையை 'வில்லன்'ஆகப் பார்க்காது, தமிழ் மக்களின், தமிழ்பேசும் மக்களின், நாட்டு நலனில் அக்கறை கொண்ட சமூக அமைப்பாக நோக்குவது பல்வேறுபட்ட நன்மைகளை உருவாக்கும்.

மேலும், இனிவரும் காலங்களில் தமிழ் மக்கள் பேரவை தேர்தல்களில் ஈடுபடாமல் நடுநிலைமை வகித்தாலும் மக்கள் நலன் சார்ந்து அர்ப்பணிப்போடு செயற்படுகின்றவர்களை இனம் காண்பதும், தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்குள் உள்வாங்கச் செய்வதும் அவர்களைத் தேர்தல்களில் பங்கேற்கச் செய்து மக்களுக்குத் தரமான சேவைகளை வழங்கவும் உதவிபுரியலாம். இவ்வாறு ஒருமனப்பட்ட கருத்தோடு செயற்படவும், மக்களின் நலன் சார்ந்த அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளவும், அரசியல் தீர்வு குறித்த சரியான தெளிவான நிலைப்பாடுகளைத் தொடர்ந்து முன்வைக்கவும், முன்னெடுக்கவும் தமிழ் மக்கள் பேரவை தொடர்ந்து பாடுபடவேண்டும்.

**முரண்பாடுகளைக்களைய முதலமைச்சர் முற்பட்டிருக்கவேண்டும்!**

வடமாகாண முதலமைச்சர் சீ. வி. விக்னேஸ்வரன் இன்றைய சூழலில் கட்சிகளைப் பார்க்காமல் ஊழலற்ற, நேர்மையானவர்களை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தெரியும்படி கேட்டிருக்கின்றார். முதலமைச்சரின் கருத்துச் சரியானது என்று வைத்துக் கொண்டாலும் இவ்வாறானவர்கள் ஓரணியில் நின்று செயற்படுவதுதான் நன்மை பயக்கும் என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

முதலமைச்சருக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்களுக்கும் இடையிலான உறவு சுமூகமாக இல்லை என்பது யாவரும் அறிந்த விடயம். நீதியரசர் சீ.வி.விக்னேஸ்வரனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலமைச்சராக்கியது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளும்தான் என்றாலும் அதில் அங்கம் வகிக்கும் தமிழரசுக் கட்சியே முக்கிய வகிபாகம் வகித்தது என்றே சொல்லப்படுகின்றது. அவ்வாறே தமிழரசுக் கட்சிதான் நீதியரசர் சீ.வி.விக்னேஸ்வரனை முதலமைச்சராக நிறுத்துவதில் முன்னிலை வகிப்பதாக வைத்துக்கொண்டாலும் அக்காரணத்திற்காக தமிழரசுக் கட்சியின் தாளத்திற்குத்தான் அவர் ஆடவேண்டும் என்ற அவசியம் கிடையாது. அதேவேளை மக்களின் ஆணையை மீறி முதலமைச்சரோ அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ அல்லது கூட்டமைப்பைச் சார்ந்த ஏனைய கட்சிகளோ செயற்படவும் கூடாது.

அதேவேளை முதலமைச்சரும் தமிழரசுக் கட்சியுடனான தமது முரண்பாடுகளைத் தீர்த்து ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்தி இருக்கலாம், ஏற்படுத்தியிருக்க வேண்டும். முதலமைச்சர் அவ்வாறு முயன்று, அம்முயற்சியில் வெற்றி பெற்றிருந்தால் இன்றைய தமிழ் அரசியல்வாதிகளின் அல்லது தமிழ் கட்சிகளின் நிலைப்பாடுகளில் பாரிய பிளவுகள் ஏற்படாமல் தடுத்திருக்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். அதேபோல தமிழரசுக் கட்சியும் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்குள் நிலவிய முரண்பாடுகளைத் தீர்க்கத் தங்களது முழுமையான ஈடுபாட்டினைக் காட்டவில்லை, ஒத்துழைப்பை வழங்கவில்லை என்பதுபோலத்தான் தெரிகின்றது.

ஆக, 'மணிகட்டுவது யார்?' என்ற பிரச்சினைதான் அடிப்படையில் பெரும் பிரச்சினையாக எழுந்து நிற்கின்றது. ஆனால் இருசாராரும் பக்கம்பக்கமாக பத்திரிகைகளுக்குப் பதில் எழுதுவதிலும் விளக்கம் அளிப்பதிலும் காலத்தையும் சக்தியையும் செலவழித்துக்கொண்டு இருக்கின்றார்கள். இவர்களின் 'தண்டவாளப் போக்குகள்' சாதாரண மக்கள் மத்தியில் குழப்பத்தை உண்டுபண்ணி இருக்கின்றது என்பதனை யாரும் மறுக்க முடியாது.

**அரசியல் வலுவைப் பயன்படுத்தவேண்டும்!**

பிளவுண்டு போவதால் ஒரு பயனும் கிடைக்கப் போவதில்லை என்பதை மக்களின் அரசியல் தலைவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். அத்துடன் பிரிவுகள் மேலும் மேலும் பிரிவினைகளைத்தான் உருவாக்கும். முப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுகாலம் மாபெரும் ஆயுதப் போராட்டத்தை நடத்தி அதன் ஊடாகப் பெற்றிருக்க வேண்டிய உரிமைகளை, இன்று இழந்த நிலையில், மேலும் கட்சி கட்சியாகப் பிரிந்து நின்றுகொண்டு நாம் விரும்பும் அரசியல் அபிலாசைகளை அடையமுடியாது என்ற யதார்த்தத்தையும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். எனவே, அடிப்படை அம்சங்களை ஈடுவைக்காது அரசியல் வலுவைப் பயன்படுத்தி கூடுதலான அதிகாரப் பகிர்வைப் பெறுவதே இக்காலத்தில் யதார்த்தபூர்வமான - புத்திசாலித்தனமான செயற்பாடாகும்.

**இடைக்கால அறிக்கை குறித்த குழப்பம்!**

அரசியல் தீர்வுத் திட்டம் சம்மந்தமாக இலங்கை அரசினால் முன்மொழியப்பட்ட இடைக்கால அறிக்கை குறித்து எதிரும் புதிருமான கருத்தை தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் முதலமைச்சர் தலைமையிலான அல்லது முதலமைச்சர் சார்பான குழுவும் முன்வைத்து வருகின்றார்கள்.

'இது ஓர் இடைக்கால அறிக்கையே. அதில் எல்லா விடயங்களும் குறிப்பிடப்படவில்லை, குறிப்பிடவும் முடியாது! இறுதி வரைபு வருகின்றபோது தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்கள் உள்ளடக்கப்படும்!' என தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கூறுகின்றது. மறுபக்கம், 'இடைக்கால அறிக்கை யிலேயே அடிப்படையானவைகள் இல்லை என்றால் இறுதி வரைபில் என்ன இருக்கப் போகிறது?' என ஆதங்கப் படுகின்றார்கள் முதலமைச்சரும் அவர் சார்ந்த அணியினரும்.

இவ்வாறு இவர்கள் இரண்டு பட்டுக் கிடக்கையில் யாருடைய கருத்தை ஏற்றுக்கொள்வது என்று தமிழ் மக்கள் விழிபிதுங்கி நிற்கின்றார்கள் என்பது மட்டும் அப்பட்டமான உண்மை! இந்நேரத்தில்தான் உள்ளூராட்சி மன்றத் தேர்தலும் வந்து சேர்ந்திருக்கின்றது.

**விசமத்தனமான பரப்புரை!**

இதற்கிடையில் 2015இல் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த மகிந்த ராஜபக்ச 2018இல் நடைபெற இருக்கும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் பொதுமக்கள் முன்னணி என்ற கட்சியின் பெயரில் தேர்தலில் குதித்து விசமத்தனமான தேர்தல் பரப்புரையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறங்கியுள்ளார். 'நாட்டைத் துண்டாடுகின்றார்கள்', 'சமஸ்டி கொடுக்கப் போகிறார்கள்', 'ஒற்றையாட்சியைக் கைவிட்டு விட்டார்கள்!', 'தமிழீழம் அமைத்துக் கொடுக்கின்றார்கள்' என்றெல்லாம் இப்போது கூறித் திரிகின்றார்.

சிறுபான்மையின மக்களான தமிழ், முஸ்லிம் மக்களின் பெரும்பான்மைப் பலத்தை தவற விட்டுவிட்டு இப்போது பெரும்பான்மையின மக்களாக விளங்கும் சிங்கள மக்களின் உணர்வுகளை மீண்டும் உசுப்பிவிட்டு அதில் உச்சப் பலன் அடைய விளைந்திருக்கின்றார் மகிந்த. அவரின் இத்தகைய நிலைப்பாடு சிங்கள மக்கள் மத்தியில் பாரிய வரவேற்பை இனியும் பெறாது என்பதாகவே 2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் சுட்டிக் காட்டுகின்றது.

**வடக்கில் 726 உறுப்பினர்களுக்கு 6,744 பேர் போட்டி!**

வட மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு எழுநூற்று இருபத்தாறு உறுப்பினர்களைத் தெரிவதற்கு ஆறாயிரத்து எழுநூற்று நாற்பத்துநான்கு பேர் போட்டி யிடுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவர்கள் பத்தொன்பது அரசியல் கட்சிகளிலும், பத்தொன்பது சுயேட்சைக் குழுக்களின் சார்பிலும் போட்டியிடுகின்றார்கள்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பதினேழு உள்ளூராட்சி மன்றங்களுக்கு நாநூற்று இரண்டு பேர்களைத் தெரிவுசெய்ய மூவாயிரத்தி மூந்நூற்று எழுபத்தாறு பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் மூன்று உள்ளூராட்சி மன்றங்களுக்கு அறுபத்தாறு உறுப்பினர்களுக்காக அறுநூற்று முப்பத்தெட்டு பேர்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் நான்கு மன்றங்களுக்கு அறுபத்தேழு உறுப்பினர்களுக்காக எழுநூற்று ஐம்பத்தேழு பேர்களும், வவுனியாவில் ஐந்து மன்றங்களுக்கு நூற்று முன்று உறுப்பினர்களுக்கு ஆயிரத்து எழுபத்திரெண்டு பேர்களும் மன்னாரில் ஐந்து மன்றங்களுக்கு எண்பத்தெட்டு உறுப்பினர்களைத் தெரிவுசெய்ய தொழாயிரத்து நான்கு பேர்களும் போட்டியிடுவதாக தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது. இத்தகவலைப் பார்க்கின்றபோது 'கின்னஸ்' தேர்தல் சாதனையாகப் பதியப்படுவதற்கான வாய்ப்புக்கள் தென்படுவதாகவே தெரிகின்றது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குற்றவாளிகளை நிராகரிக்க வேண்டும்!**

நீதியானதும் நியாயமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கமான கபே அமைப்பு நீதிமன்றினால் குற்றவாளிகளாக தண்டனைபெற்ற அறுபதுக்கும் மேற்பட்டவர்களை வேட்பாளர்களாக பிரதான கட்சிகள் நிறுத்தியுள்ளன என குற்றம் சாட்டியுள்ளது. குற்றஞ்சாட்டியது மட்டுமல்லாது இவர்களின் பெயர்ப் பட்டியலையும் பொலிஸ்மா அதிபரிடம் கையளித்துள்ளது. இவர்கள் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களாகவும், இலஞ்சம் பெற்றவர்களாகவும், போதைப் பொருள் தொடர்பான குற்றச்சாட்டுகளுடனும், பாதாள உலகக் குழுவினருடன் தொடர்புள்ளவர்களாகவும் உள்ளனர் எனக் கோடிட்டுக் காட்டியுள்ளது.

குற்றவாளிகளை மட்டுமல்ல சமூகத்தோடு எவ்வகையிலும் தொடர்புபடாமல், சமூக வாழ்வில் எவ்வித ஈடுபாடும் காட்டாமல், அரசியலில் ஈடுபட்டுக் கிடைக்கிற சலுகைகளைப் பெறும் நோக்கத்தோடு தேர்தல்களில் போட்டியிடும் பணச் செருக்குக் கொண்ட வேட்பாளர்களை மக்கள் அடியோடு நிராகரிக்க வேண்டும்.

மேலும், மக்கள் மத்தியில் ஒற்றுமையை, ஒன்றிப்பை உருவாக்காமல் குழப்பங்களையும் பிரிவினைகளையும் ஏற்படுத்தும் வேட்பாளர்களை மக்கள் இனங்கண்டு அவர்கள் எக்கட்சியைச் சார்ந்தவர்களாக இருப்பினும் அவர்களை அரசியல் நீரோட்டத்தில் இருந்து அகற்றுவது அரசியல் இன்னுமின்னும் அழுக்கடையாமல் இருக்க வழிசெய்யும்.

**கிடைத்த பெருவெற்றிகள் இனியும் கிடைக்குமா!**

கூடியிருந்த அல்லது கூடியிருந்திருக்க வேண்டிய கட்சிகள் பிளவுபட்ட ஒரு சூழலிலும் கூட்டிச் சேர்த்து ஒன்றாக நின்றிருக்க வேண்டிய கட்சிகள் தனித்தனியே நிற்பதால் எக்கட்சியை ஆதரிப்பது என்பதும், எந்த நபருக்கு வாக்களிப்பது என்பதும் வடகிழக்குத் தமிழ் மக்களுக்கு குழப்பத்தை ஏற்படுத்தப்போவது உண்மை.

இந்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்காத ஏனைய தமிழ்க் கட்சிகள் ஒன்றாகச் சேர்ந்திருந்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கடந்த காலங்களில் பெற்ற பெரும் வெற்றிகளைப்போல் நடைபெறப்போகும் உள்ளூ ராட்சி மன்றத் தேர்தல் வெற்றிகள் அமையாது இருப்பதற்கான ஏதுநிலைகள் உருவாகியிருக்கும். ஏனெனில் வட்டாரத் தேர்தல் முறைமை என்பதால் இந்நிலை ஏற்பட அதிக வாய்ப்புண்டு. ஆனால் தமிழ்க் தேசியக் கூட்டமைப்பைச் சாராத ஏனைய தமிழ்க் கட்சிகள் வெவ்வேறு கூட்டுக்களாகப் பிரிந்து நிற்பதால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இலகுவாக முன்னிலை அடையவும் வாய்ப்புண்டு.

எதிர்பார்க்கப்படும் பெரும் வெற்றி கிடைக்காதுபோனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தம்மை ஒருதடவை மீண்டும் சீர்தூக்கிப் பார்க்க, சீர்செய்ய இத்தேர்தல் வழிசெய்யும் என நம்பலாம். மாறாக மிகப்பெரும் வெற்றி பெற்றால் இத்தேர்தலே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாண, நாடாளுமன்ற இருக்கைகளுக்கான அத்திவாரமாகிவிடும். எது எப்படியிருப்பினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்காத தமிழ்க் கட்சிகள் ஒன்றுசேர்ந்து தமது மாற்றணிப் பலத்தை தமிழ் மக்கள் மத்தியில் நிரூபிக்கத் தவறிவிட்டன என்பதையும் இங்கு சொல்லியே ஆகவேண்டும்.

**நாம் விரும்பாதவர்கள் நம்மை ஆள்வார்கள்!**

இப்பின்னணியில் 'வாக்களிக்காது இருந்துவிடுவோம்' எனப் பலர் நினைக்கலாம். அப்படிச் செய்வதால் தகுதியற்றவர்கள் தலைவர்களாக ஆகுவதற்கு வழியாகிவிடும் என்பதால் மக்கள் தங்கள் வாக்குரிமையைச் சரியாகப் பயன்படுத்தி தமது பிரதிநிதிகளைத் தெரிந்தெடுப்பது மிகமிக அவசியமானதும், இன்றியமையாததும் ஆகும்.

இதனைத்தான் அறிஞர் பிளேற்றோ கூறுகையில், ' அரசியலில் பங்கேற்க நாம் விரும்பாது இருந்துவிட்டால் நம்மை விரும்பாதவர்கள் நம்மை ஆளவேண்டிய நிலை ஆகிவிடும்!' என்கிறார். ஆகவே, வாக்களிப்பது ஒன்றே வாக்காளர்களின் தெரிவாகும் என்பதை மக்கள் கட்டாயமாக மனங்கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எவ்வாறு தெரிவு செய்வது!**

தலைவனாக இருக்க விரும்புகின்றவன் தொண்டனாக வேண்டும். முதல்வனாக இருக்க விரும்புகின்றவன் பணியாளனாக வேண்டும். இவற்றைத் தமது விருதுவாக்காக அரசியல் தலைவர்கள் கொள்வார்களேயானால் 'மக்கள் சேவையே மகேசன் சேவை'யாக பரிணமித்துவிடும். எனவே, "ஒருவர் முதல்வராக இருக்க விரும்பினால் அவர் அனைவரிலும் கடைசியானவராகவும் அனைவருக்கும் தொண்டராகவும் இருக்கட்டும்" என்ற இயேசுவின் வார்த்தைகளை அடிநாதமாகக் கொண்டிருப்பவர்களுக்குத் தங்கள் வாக்குகளைச் செலுத்துவதே வாக்காளர்களின் உண்மைத் தெரிவாக, முதல் தெரிவாக இருக்கவேண்டும்.

'போரினாலும் பொய்களினாலும் 2017ஆம் ஆண்டு அழிக்கப்பட்டு விட்டது!' என புத்தாண்டு தினத்தன்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கவலையோடு கடந்த ஆண்டை நினைவுபடுத்தி இருக்கின்றார். இனிமேலும் பகைமைகளையும் குரோதங்களையும் ஏற்படுத்த நினைப் பவர்களையும், கவிஞர் மாலினியின் 'நிழலும் நிஜமும்' என்ற கவிதை நூலில் கூறுவதுபோல, "பாலைவனத்தில் பயிரிட்டு விளைச்சல் அள்ளித் தருவோம், கடலே இல்லாத ஊருக்குக் கப்பல் கட்டித் தருவோம்" எனச் சாத்தியமற்ற, சம்பந்தமே இல்லாத பொய்களையும், புரளிகளையும், புழுகுகளையும் உறுதிமொழிகளாகத் தேர்தல் பரப்புரைகளில் தெரிவிப்பவர்களையும் அரசியலில் இருந்து அப்புறப்படுத்துவது மிகமிக அவசரமானதும் அவசியமானதும் ஆகும்.

வாடிக்கையாளர்களையும், வேடிக்கையானவர்களையும் விட்டுவிட்டு மேற்கூறப்பட்ட நற்செய்தி விழுமியத்தை மனதில் இருத்திக் கொண்டு வாக்காளர் சிட்டையில் புள்ளடி இடுவதுதான் 'தகுதியும் நீதியுமானது!' இதனை, வாக்காளர் பெருமக்கள் செய்வார்களா? புள்ளடி இடும் வரைதான் மக்கள் 'பெருமக்கள்', இட்டபின் 'பெருமன்னர்கள்' 'பெருமக்களை' கவனித்துக்கொண்டால் நலன் பயக்கும் நன்மை கிடைக்கும் அடுத்தடுத்த தேர்தல்களிலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 80 'புலிக்கதை' தொடரப் போகின்றது!

**கழுதை அமைச்சர்!**

அரசனொருவன் வேட்டைக்குப் புறப்படவிருந்தான். தனது அமைச்சரை அழைத்து, "இன்று மழை வருமா?" எனக் கேட்கின்றான். 'வராது' என அமைச்சர் கூறிவிடு கின்றார். ஆனால், வழியிலே ஒரு கழுதை மேல் வந்து கொண்டிருந்த கிராமத்தவன் ஒருவன், 'அரசே இந்நேரத்தில் எங்கு செல்கிறீர்கள்? கொஞ்ச நேரத்தில் மழை அல்லவா பெய்யப்போகிறது!' என எச்சரிக்கின்றான். அதைப் பொருட் படுத்தாமல் சென்ற அரசன் வேட்டையாடிக் கொண்டிருந்த போது கடும் மழை பெய்து நன்றாக நனைந்து போனான். அதனால், உடனே அரண்மனை திரும்பவேண்டி ஏற்பட்டது.

திரும்பும் வழியில் மழைவருமென எச்சரித்த குடியானவனை சந்திக்கின்றான். "மழை வருமென்று உனக்கு எப்படித் தெரிந்திருந்தது?" எனக் கேட்கின்றான். கிராமத்தவனோ, "அரசே, அதுபற்றி எனக்குத் தெரியாது. ஆனால், என் கழுதைக்குத் தெரியும். மழை பெய்வதற்கு முன் அது தன் காதுகளை முன்னுக்கு நீட்டிக் கொள்ளும்" என்றான். உடனே அரசன், அவ்வமைச்சரைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு அக்கழுதையை அமைச்சராக்கினான்!

இக்கதை அமெரிக்க முன்னாள் அரசுத்தலைவர் ஆபிரகாம் லிங்கனால் சொல்லப்பட்டதாகும். இக்கதையை ஆபிரகாம் லிங்கன் கூறிவிட்டு, "கழுதையை அமைச்சராக்கிய தில்தான் அரசன் ஒரு தவறு செய்துவிட்டார்! என்னவெனில், அது முதற்கொண்டு எல்லாக் கழுதைகளும் ஏதாவது பதவி வேண்டும் என அலைகின்றன!" என அக்கதையினைக் கூறி முடித்தாராம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பதவிதேடி அலையும் கழுதைகள்!**

அன்று ஆபிரகாம் லிங்கன் சொன்ன விடயம் இன்றைய அரசியல் சூழலுக்கு மட்டுமல்ல சமூதாய, சமய சூழமைவு களுக்கும் நன்கு பொருத்தமுடையதாகவே தெரிகின்றது. பதவிமோகம் பிடித்து பல வடிவங்களில் திரிகின்றார்கள் இன்றைய மனிதர்கள்.

காலாகாலமாகப் பேசிவரும் மூவாசைகளான மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்பவற்றைவிட நான்காவது மிகப்பெரும் ஆசை பதவியாசை ஆகும். அதனாலேதான் "புகழ்வேண்டேன் பொன்வேண்டேன் போகம் வேண்டேன்" என்றார் திருநாவுக்கரசர் எனும் நாயனார். அவர் முதலில் குறிப்பிட்டது புகழைத்தான். இன்றைய சமுதாயம் மிக மோசமாக நோய்வாய்ப்பட்டுப் போய்க்கிடக்கிறது புகழ் தரும் பதவி ஆசையால்!

'மரணம் முற்றுப்புள்ளி அல்ல' என்ற கவிதை நூலில் 'சிம்மாசன நோய்' என்ற கவிதையில் எழுத்தாளர் அப்துல் ரகுமான் பின்வருமாறு உரைக்கின்றார்: "...மூவாசையைவிடப் பெரிய ஆசை சிம்மாசன ஆசை. அதனால்தான் மூன்றையும் கொடுத்தாவது அதைப்பெற முயல்கிறான் மனிதன். அதிகாரம் விசித்திரமான சாராயம். அதைக்குடிக்கிறவன் தன்னை மறப்பதில்லை, பிறரை மறந்து விடுகின்றான்..." என்கின்றார்.

**படிப்புக்கு ஏற்ற பதவி?**

இக்கருத்துக்கு அணிசேர்ப்பதுபோல நண்பர் ஒருவர் இவ்வாண்டின் தொடக்கத்தில் மின்னூடகத்தில் பகிர்ந்து கொண்ட விடயம் ஒன்று அமைந்திருக்கின்றது. இவ்வாண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெற இருந்த காலத்தில் ஒருவர் யாழ்ப்பாணத்தில் இருந்து அம்பாறைக்குப் பயணம் செய்திருக்கின்றார். அவரின் அருகில் இருந்து நடுத்தர வயதான ஒருவர் கூடவே பயணம் செய்திருக்கின்றார். நீண்ட பயணம் என்பதால் இருவரும் பல்வேறுபட்ட விடயங்களை உரையாடிக்கொண்டு சென்றிருக்கின்றனர். இவர்களின் உரையாடலின் ஆரம்பத்தில் நடுத்தர வயதானவர் இளம் குடும்பஸ்தரின் குடும்பத்தைப் பற்றி வினவியிருக்கின்றார். அவரும் தனது வளர்ந்துவரும் சிறுவயது, மூன்று குழந்தைகளைப் பற்றிக் கூறியிருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிலுக்கு, இளம் குடும்பஸ்தரும் மற்றயவரின் குடும்பத்தைப் பற்றி கேட்டிருக்கின்றார். அவர், "எனக்கு மூன்று பிள்ளைகள் தம்பி" எனத் தொடங்கியவர், "மூத்தவன், கல்விக்கல்லூரி முடிச்சுப்போட்டு ஆசிரியராக வேலை பார்க்கிறான். ரண்டாவது, பல்கலைக்கழகத்தில படிச்சுப் பட்டம் பெற்று, வேலை தேடிக்கொண்டிருக்கிறான். மூன்றாமவன், எட்டாம் ஆண்டோட படிப்பை நிறுத்திப்போட்டு, வீட்டில இருக்கிறான்! அவன்ர படிப்புக்கு ஏற்றமாதிரி, இப்ப இந்த வட்டாரத் தேர்தல்ல ஒரு வேட்பாளரா நிக்கிறான்! " என நிதானமாகச் சொல்லி முடித்தாராம்!

**'சிம்மாசன நோய்'!**

'சிம்மாசன நோய்' இன்று பல தரத்தாரையும் திறத்தாரையும் பீடித்திருக்கின்றது என்பதை அனைத்து மட்டங்களிலும் அவதானிக்கலாம். அதனால்தான், இன்று கதிரைகளைத் தேடி அலைகின்றார்கள் ஒரு பெரும் கூட்டத்தினர். எங்கள் நிலை எந்தளவிற்குத் தாழ்ந்துபோய்விட்டது என்பதற்கு மேற்சொன்ன அநுபவம் ஓர் உதாரணமே!

பணிகளைச் செய்து அதன் 'பரிணாம வளர்ச்சியில்' பதவிகளை அடைவதில் எவ்வித தவறும் இல்லை. அதனால் இன்னும் அதிகமான பணிகளைப் புரியலாம். ஆனால், இன்றைய சூழலில் எப்பாடுபட்டாவது, யார் காலைப் பிடித்தாவது பதவிகளை அடைவதையே - கதிரைகளைக் கைப்பற்றுவதையே குறியாகக் கொண்டு திட்டம்போட்டுச் செயற்படுவதைக் காணமுடிகின்றது. நடந்துமுடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் பின்னர் பல இடங்களில் நடந்த 'தேர்தல் சங்கீதக் கதிரை'ப் போட்டி இதற்கு ஓர் உதாரணமே! இதுபோல இன்னும் பல உதாரணங்களை ஏனைய சமூகத் தளங்களில் நின்று நோக்குகின்றபோது இந்நிலையை நன்கு புரிந்துகொள்ள முடியும்.

அப்பதவிகளைக்கூட மக்களுக்காகத் தொண்டுகள் ஆற்றப் பயன்படுத்தினாலும் பரவாயில்லை! ஆனால், பதவிகளைப் பெற்று எந்தளவிற்குத் தங்கள் படிகளை உயர்த்திக் கொள்ளலாம் என்பதில்தான் இவர்கள் கருத்தாக இருக்கின்றார்கள். இப்படிப்பட்டவர்கள் பொதுவாகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறனற்றவர்களாக, பேராசை கொண்டவர்களாகத்தான் இருப்பார்கள். இவர்களால் சமூகத்திற்கு என்ன நன்மை கிடைக்கப் போகின்றது?

**அபிவிருத்தி வேலைகளும் அரைகுறைதான்!**

மத்திய அரசின் அமைச்சுப் பதவிகளை ஏற்க முடியாத சூழலில் 'தமிழ்த் தேசிய' நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். சரி, அது போகட்டும்! அடுத்து, மாகாணத்திற்காக ஒதுக்கப்படும் நிதி முழுமையாகச் செலவிடப்படுகின்றதா என்றால், அதுவும் இல்லை. 'வடக்கின் அபிவிருத்திக்கு நிதி போதாது' எனக் கூச்சலிடுகின்றார்கள். ஆனால், ஒதுக்கப்படும் நிதியில் ஒருபகுதி மீண்டும் திருப்பி அனுப்பப்படுகின்ற அவல நிலைதான் தொடர்ந்து நீடிக்கின்றது. அல்லது ஆண்டின் இறுதி மாதத்தில் பணம் திரும்பப்போகின்றதே என அவசரப்பட்டு, அவதிப்பட்டு செய்யப்படுகின்ற செயற்பாடுகளாகவே அவை அமைந்துவிடுகின்றன.

2017ஆம் ஆண்டில் மார்கழி மாதத்தின் கடைசி இரு கிழமைகளில் சில பிரதேச செயலகங்கள் நடத்தி முடித்த பண்பாட்டு விழாக்கள் இதற்கு ஒரு சான்றே. ஏன், இவ்விழாக்களை ஆண்டின் ஏனைய காலப்பகுதியில் அழகாகத் திட்டமிட்டு நடத்தினால் என்ன? ஆண்டின் இறுதி நாள்களில் ஏன் அவசரப்பட்டு நடத்தவேண்டும்?

மேலும் நாடாளுமன்றப் பிரதிநிதிகள், மாகாணசபை உறுப்பினர்கள் ஊடாக அபிவிருத்திப் பணிகளுக்கு ஒதுக்கப்படும் நிதி எப்படிச் செலவிடப்படுகின்றது என்பது மக்களுக்கு வெளிப்படையாகத் தெரிவிக்கப்படும்போதுதான் தமது பிரதிநிதிகளின் நிதி எப்படி பங்கிடப்படுகின்றது என்பதை மக்கள் அறிந்து கொள்வார்கள்.

பொதுவாகப் பார்த்தால் நமது நாடாளுமன்ற உறுப்பினர்களின் கடமைகளைப்பற்றி 21.07.2018 அன்று வலம்புரி ஆசிரியர் எழுதிய ஆசிரியர் தலையங்கத்தில், "...தமக்கு வருகின்ற நிதி ஒதுக்கீட்டில் விளையாட்டுக் கழகங்களுக்கு நிதியுதவி பாடசாலைகளுக்கு உபகரணக் கொள்வனவுக்கு நிதிப்பங்களிப்பு சனசமூக நிலையங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிடத் திருத்தத்துக்கு நிதி வழங்கல் என்பதோடு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களின் கடமை முடிந்து போகின்றது. இதையும் கடந்தால் பரிசளிப்பு விழாவில் பங்கேற்பு, பாராளுமன்ற உறுப்பினர் உரை என்பதோடு அவர்களின் பணி முடிந்து விடுவதாக அவர்களும் நினைக்கின்றார்கள். அதன்வழி மக்களும் நம்புகின்றார்கள்..." என்ற பார்வை நாடாளுமன்ற உறுப்பினர்களின் அவதானிப்புக்கும் மக்களின் கவனத்திற்கும் உரியன.

மாகாணசபை உறுப்பினர்கள் ஆங்காங்கே ஐம்பது அறுபது கதிரைகளை ஏதாவது ஒன்றியங்களுக்கோ அல்லது சங்கத்தினருக்கோ கொடுப்பதும், சில துவிச்சக்கரவண்டிகளை மாணவர்களுக்குக் கையளிப்பதும் அல்லது சில தளபாடங் களையோ அல்லது சில இசைக்கருவிகளையோ கொள்வனவு செய்ய நிதி ஒதுக்குவதும் என இவர்களுடைய அபிவிருத்திப் பணிகள் முடிந்து விடுகின்றன. இதற்குமேல் அவர்களால் செய்வதற்கு நிதி ஒதுக்கீடு இருக்கின்றதோ என்பது இன்னொரு பக்கம்!

உள்ளூராட்சி சபைகளை எடுத்துக்கொண்டால் அவைகள் உள்ளூர் மட்டங்களில் செய்யவேண்டிய அபிவிருத்திப் பணிகளை விட்டுவிட்டு உலகளாவிய அபிவிருத்திக்கு என்ன செய்யலாம் என்பதுபோல அவர்கள் தங்கள் தங்கள் சபைகளில் தீர்மானங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கின் றார்கள். இவ்வாறெனில், எவ்வாறு அபிவிருத்திப் பணிகள் இடம்பெறும்?

**முயல் பிடிக்கும் நாயை!**

இப்படியே, ஒன்றுமாறி ஒன்றைக் கதைத்துக் கதைத்து, வெட்டியாகப் பேசிப் பேசிக் காலங்களை ஓட்டிவிடுவார்கள் போலத்தான் தோன்றுகின்றது. முயல் பிடிக்கும் நாயை மூஞ்சியில் தெரியும் என என் பேரனார் கூறுவதை சிறுவயதில் கேட்டிருக்கின்றேன். நமது தலைவர்களைப் பார்க்கும்போது என் பேரனார் கூறிய அம்முதுமொழியே என் நினைவுக்கு வருவதைத் தவிர்க்கமுடியாது போகிறது!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிவரும் காலங்களில் தமிழரின் பிரச்சினைகளைப்பற்றி தமிழ்த் தலைவர்கள்கூட அவ்வப்போது பேசுவார்கள், ஏதும் அசம்பாவிதங்கள் நடக்கின்றபோது அறிக்கை விடுவார்கள் அல்லது வெளிநாட்டு அதிதிகள் வருகின்றபோது ஏதாவது அரசியல் தீர்வு குறித்துப் பேசிவிட்டு தங்கள் வாழ்க்கையை நடத்துவார்கள் என்பதாகவே தெரிகின்றது.

ஆகக்குறைந்தது, இக்காலகட்டத்தில் தமிழ் அரசியல் தலைவர்கள், பிரதிநிதிகளிடையே ஒன்றுபட்ட, ஒற்றுமைப்பட்ட நிலைமையாவது நிலவும் என நினைத்தால் அதுவும் அந்தா இந்தாவென்று அறுந்துவிழும் நிலையில்தான் தொங்கிக் கொண்டிருக்கின்றது!

கேள்விக்குறியாகிவிட்ட ஒற்றுமை, வரப்போகும் மாகாணசபைத் தேர்தலோடு முடிவுக்கு வந்துவிடுமோ என்ற ஆதங்கமே அதிகரித்திருக்கின்றது! இன்றைய எம்தலைவர்களின் இப்பரிதாப நிலையினை அவதானிக்கும் சாதாரண மக்கள் விழிபிதுங்கிப்போய் நிற்கின்றதைக் காணலாம்!

**வேற்றுமைகளுக்கு விடைகொடுக்கவேண்டும்!**

'நம்மிடையே இருக்கும் வேற்றுமைகளைக் களைந்தாலே அடக்கு முறைகளில் இருந்து நாம் மீளலாம்' என உலகத் தமிழர் பேரவையின் தலைவரும் பேராசிரியரு மான எஸ். ஜே. இம்மானுவல் அடிகளார் தந்தை செல்வாவின் நாற்பத்தொராவது ஆண்டு நினைவு நாளில் கலந்து கொண்டு உரையாற்றும்போது குறிப்பிட்டிருக்கின்றார். அடிகளார் குறிப்பிட்டதுபோல தங்களுக்கிடையே நிலவும் வேற்றுமைகளுக்கு இவர்கள் விடை கொடுக்காதவரை விடிவு கிடையாது என்பது நிறுத்திட்டமான உண்மை.

"எங்கள் அரசியல்வாதிகள், தலைவர்களுக்கு சிறப்புப் பொறுப்பும் கடமையும் உண்டு. ஒருவரை ஒருவர் தட்டி வீழ்த்துபவர்களாக இருக்காது ஒரே இலட்சியத்துடன், ஒரே நோக்கத்துடன் விளையாடும் உதைப்பந்தாட்ட வீரர்கள் போன்று ஒரே இலட்சியத்துக்காக ஒத்துழைக்க வேண்டும்" என மேலும் அழைப்பு விடுத்திருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாங்கள் எமது சகல திறமைகளையும் உபயோகித்து எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தினால் மட்டும் போதாது. எமது சமூகத்துக்குள்ளே எமக்குள்ளே ஆழமாக வேரூன்றியிருக்கும் வேற்றுமைகள் அடக்குமுறைகளில் இருந்து விடுதலைபெற வேண்டும்" எனவும் கோடிட்டுக் காட்டியிருக்கின்றார்.

**இலட்சியத்தோடு இருக்கின்றார்களா?**

மேலும், "இலட்சியத்திற்காக ஒத்துழையுங்கள் என்பதே என் பணிவான வேண்டுகோள்" என்றும், "எம் மத்தியில் இருக்கும் சமூகத்தலைவர்களும், புத்திஜீவிகளும், உத்தி யோகத்தர்களும், மதத்தலைவர்களும் பார்வையாளராகவோ மௌனிகளாகவோ இருப்பது தவறானதும் எம்மினத்துக்குத் துரோகம் இழைப்பதுமாகும். நாங்கள் மௌனமாக இருந்து விடுவதால் சில அரசியல் வாதிகள் மக்கள் நலனைக் கைவிட்டு சுயநலத்துடன் நடக்கின்றனர்" எனவும் மேற்சொன்ன நிகழ்வில் சமூகப் பொறுப்பிலுள்ள அத்தனை பேருக்கும் அழைப்பு விடுத்து அறிவுரை கூறியிருக்கின்றார்.

புத்திஜீவிகளும் சமய - சமூகத் தலைவர்களும் சமூக வாழ்விலிருந்து தள்ளியிருக்கும் வரை அரசியல்வாதிகளின் ஆட்டம் அதிகமாகவே இருக்கும் என்பதைக் குறிப்பாகச் சமய - சமூகத் தலைவர்கள் மனம்கொண்டு உழைக்க முன்வருவார்களா எனவும் கூறியுள்ளமை கவனிக்கத்தக்கது.

**'பிரிவோமாக இருந்தால் அழிந்துவிடுவோம்!'**

"நாட்டின் தற்போதைய நிலையைக் கருத்திற்கொண்டு கருத்து வேறுபாடுகளைக் களைந்து ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும். இதனை விடுத்து பிரிந்து செயற்படுவோமாக இருந்தால் எமது மக்களை நாமே அழிப்பதாக அமையும்!" என எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் அவர்கள் 2018.06.24அன்று வீரசிங்கம் மண்டபத்தில் வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்களின் 'நீதியரசர் பேசுகிறார்' என்ற நூல் வெளியீட்டு நிகழ்ச்சியில் தெரிவித்திருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிந்தால் பெரும் ஆபத்து விளையும் எனத் தெரிகிறது. பின், ஏன், பிரிந்துபோவதற்கே பெரும் எடுப்பிலான ஆயத்தங்களைச் செய்கின்றீர்கள்? என இவர்களிடம் கேட்கவேண்டும்போல் இருக்கின்றது! காரணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் நான்கு கட்சிகளுள் தமிழரசுக் கட்சியின் அரசியல் தலைவர்கள் ஏனைய கட்சித் தலைவர்களை மாற்றான்தாய் மனநிலையோடு பார்ப்பது தமிழ்த் தேசிய நீண்ட நெடிய அரசியல் பயணத்திற்கு எவ்வகையிலும் உகந்ததல்ல, ஆரோக்கியமானதல்ல என்பதை அவர்கள் சிந்திக்கவேண்டும்.

அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகளான 'ரெலோ', 'ஈபிஆர்எல்எப்', 'புளொட்' ஆகியவை ஒத்திசைந்து ஓரணியில் நின்று செயற்படும் மனநிலையையும் உருவாக்கிக்கொள்ள முன்வரவேண்டும்.

**'புலிக்கதை' தொடரத்தான் போகின்றது!**

எது எப்படியிருந்தாலும், இவ்வாண்டு ஐப்பசித்திங்கள் மாகாணசபை கலைக்கப்பட்டு, தேர்தல் அறிவிக்கப்பட்டால் மீண்டும் 'புலிக்கதை' தொடங்கிவிடும் என உறுதிபடக் கூறலாம். ஏனென்றால் கடந்த காலங்களில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள், மாகாணசபைத் தேர்தல்கள், ஏன், அரச தலைவருக்கான தேர்தல்கள் என எதனை எடுத்துக்கொண்டாலும் நாட்டின் வடக்கிலும் தெற்கிலும் கிழக்கிலும் மேற்கிலும் தமிழீழ விடுதலைப் புலிகளை நேர்மறையாகவோ, எதிர்மறையாகவோ தொடர்புபடுத்தியே அவை வெற்றி கொள்ளப்பட்டிருக்கின்றன.

குறிப்பாக, வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழ் அரசியல் பிரமுகர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளை முன்னிறுத்தியோ அல்லது அவர்களின் இலட்சியத் தடங்களில் பயணிப்பதாகக் கூறிக்கொண்டோ தமது சிம்மாசனங்களைப் பெற்றுக்கொள்கின்றார்கள். சிம்மாசனங்களில் ஏறிய பின் வாக்களித்த மக்கள் பற்றிய அக்கறையோ, அல்லல்படும் முன்னாள் போராளிகள் பற்றியோ அல்லது அன்றாடம் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றியோ இவர்கள் பெரிதாக அலட்டிக்கொள்வதாகத் தெரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படி இல்லையென்று ஏதாவது செய்வதாக இருந்தால் போராட்டங்களில் சிலமணித்துளிகள் நிற்பது, மேடைகளில் மத்திய அரசைத் தாக்கிப்பேசுவது, அறிக்கை விடுவது, பேட்டியளிப்பது என இவர்களின் செயற்பாடுகள் முடிந்துவிடுவதாகவே தெரிகின்றது.

இருபது, முப்பது ஆண்டுகளாக நடைபெற்ற எந்தத் தேர்தலிலாவது தமிழீழ விடுதலைப் புலிகளின் பெயர்களைப் பயன்படுத்தாது எக்கட்சியாவது வெற்றியீட்டி இருக்கின்றதா? இல்லையே. இனிவரும் தேர்தல்களிலும் அவர்களின் பெயரே வெற்றிக்கான மந்திரமாக இருக்கப்போகின்றது என சந்தேகத்திற்கு இடமின்றிக் கூறலாம்.

வேறென்ன? அவர்களின் பெயரே நம் அரசியல் வாதிகளுக்கு 'துரும்பு'ஆக இருக்கப் போவதோடு மீண்டும் ஒருதடவை வழமைபோன்று 'புலிக்கதை' தொடரத்தான் போகின்றது. மக்கள் அவதானமாக இருந்தால் 'புலிக்கதை' பேசி, 'புலுடா'விட்டுத் திரிவோரைப் புறந்தள்ள முடியும்.

எவ்வாறாயினும், 'வந்தாக போனாக வாசலுல நின்னாக, வாக்குறுதி மந்திரத்த வாய்கிழியச் சொன்னாக, வாய் கிழியச் சொல்லிவிட்டு வாக்குகளக் கேட்டாக, வாக்குகள வாங்கிப்புட்டு வந்தவழி போனாக, போனவுகளக் காணலியே போன இடம் தெரியல்லியே" என்ற சு. பாண்டியனின் அவதானிப்பே இறுதியில் நின்று நிலைக்கப் போகின்றது.

**மன்னா, ஓகஸ்ட் 2018**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 81 உயிர்த்த ஞாயிறே மானிடம் மரித்த ஞாயிறா!

**காலத்துக்கேற்ப மாற்றங்கள் கட்டாயமானது!**

மகனுக்கு வாகன அநுமதிப்பத்திரம் கிடைத்துவிட்டது. வீட்டிலுள்ள காரினை அவன் எப்படிப் பயன்படுத்தலாம் எனக் கலந்துரையாடத் தந்தையை அழைக்கிறான். தந்தையோ, "1) கல்வியில் இன்னும் கூடக் கவனம் செலுத்தி, 2) 'பைபிளை'க் கொஞ்சம் வாசித்து, 3) மிக அதிகமாக வளர்ந்திருக்கும் தலை முடியை வெட்டுதல் ஆகியவற்றில் முன்னேற்றம் இருந்தால் காரைப் பயன்படுத்துவதுபற்றிக் கலந்துரையாடலாம்!" என்கிறார்.

மகனும் தன் தந்தையின் ஆலோசனைக்குச் சம்மதித்து, படிப்பில் கவனம் செலுத்தினான். 'பைபிள்'ஐ வாசித்தான். ஆனால், தலைமுடியை வெட்டவில்லை! தந்தை, மகனின் வளர்ச்சி குறித்துப் பெருமைப்பட்டார். எனினும் தந்தை, "கல்வியிலும் 'பைபிள்'ஐப் படிப்பதிலும் முன்னேற்றம் கண்டிருக்கிறாய். ஆனால், ஏன் தலைமுடியை வெட்டவில்லை?"என வினவுகிறார்.

மகனோ, 'அதுபற்றி ஒரு முக்கிய விடயத்தை உங்களுக்குச் சொல்லவேண்டும் அப்பா! என்னுடைய 'பைபிள்' வாசிப்பில் ஆபிரகாம், ஈசாக், யாக்கோபு, மோசே, சாம்சன், திருமுழுக்கு யோவான் போன்ற பைபிள் போற்றுகிற மனிதர்களும், ஏன், இயேசுவும்கூட நீண்ட தலைமுடி வளர்த்திருக்கிறார்கள்! அதனால், நானும் அவர்கள்போல் வளர்க்க ஆசைப்படுகிறேன்' என்கிறான்.

தந்தையோ எவ்வித சலனமும் இல்லாமல், "நல்லது மகனே! பைபிள் வாசிப்பின் ஊடாக அருமையான விடயங்களை எல்லாம் கற்றிருக்கிறாய்! ஒன்றை நீ அவதானிக்காமல் விட்டுவிட்டாய்! மேலே சொல்லப்பட்டவர்கள் எல்லோரும், எங்கெங்கு சென்றார்களோ அங்கெல்லாம் கால்நடையாகவே சென்றிருக்கிறார்கள். அதனால், நீயும் அவர்கள் கால்நடையாகச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றதுபோல் செல்வதுதான் சாலப் பொருத்தமானது' என்று சொல்லி கலந்துரையாடலை நிறைவுக்குக் கொண்டுவந்தார்.

ஒருதடவை, சாகிர் நயிக் என்ற இஸ்லாமியர் இலண்டனில் வாடகைக் காரில் பயணித்துக் கொண்டிருக்கும்போது அக்காரின் சாரதியிடம், "தயவுசெய்து றேடியோவை நிறுத்து! ஏனெனில், புனித நூலாகிய குர்ரானின் படிப்பினையின்படி நான் றேடியோவைக் கேட்கக்கூடாது. இறைதூதுவரின் காலத்தில் றேடியோ இருக்கவில்லை, அதிலும் குறிப்பாக மேலைத்தேய இசையினைக் கேட்கக்கூடாது. காரணம் இது அவவிசுவாசிகளுக்குரியது!" என்கிறார்.

சாரதி சற்று நேரத்தின்பின் காரினை நிறுத்தி கதவைத் திறக்கிறார். அவரோ, "ஏன்?" எனக் காரணத்தை கேட்கிறார். சாரதியோ, 'இறைதூதரின் காலத்தில் வாடகைக் கார் இருக்கவில்லை, வெடிகுண்டுகள் இருக்கவில்லை, விமானங்களைக் கடத்துபவர்கள் இருக்கவில்லை, தற் கொலைக் குண்டுதாரிகள் இருக்கவில்லை, ஆர். டீ. எக்ஸ். இருக்க வில்லை, ஏ. கே. 47 இருக்கவில்லை, இருந்ததெல்லாம் எங்கும் 'சமாதானம்' ஒன்றே. ஆகவே, தயவுசெய்து வாயை மூடிக்கொண்டு காரிலிருந்து இறங்கிக் காத்துநில்லும்! ஒட்டகம் வரும், ஏறிச் செல்லும்!' என்றிருக்கிறான்!

காலத்தின் மாற்றங்கள் கட்டாயமானவை அதனால் அவற்றைக் கைக்கொள்ள வேண்டியவை என்பதை நாம் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டியிருக்கிறது!

**மிகப்பெரும் மனிதப் பேரவலம்!**

கடந்த உயிர்த்த ஞாயிறு *2019.04.21* அன்று கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயம், நீர்கொழும்பு கட்டுவப்பிட்டிய புனித செபஸ்தியார் ஆலயம், மட்டக்களப்பு சீயோன் ஆலயம் ஆகியவற்றிலும் கொழும்பின் மூன்று நட்சத்திர விடுதிகள் உட்பட ஆறு இடங்களில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதல் இலங்கை மக்களை மட்டுமல்ல உலக மக்கள் அனைவரையும் மிகவும் வேதனைக்கு உட்படுத்தியிருக்கிறது. ஏனெனில் தேவாலயங்களை இலக்குவைத்து காலை *8.45* க்கு ஆரம்பமான இத்தாக்குதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருநூற்று ஐம்பத்துமூன்று உயிர்களைப் பலியெடுத்ததோடு சுமார் ஐந்நூறு பேர் வரையில் படுகாயமடையவும் செய்திருக்கிறது.

இத்தாக்குதல்களை அனைத்து நாடுகளும் அனைத்து உள்நாட்டு சர்வதேச அமைப்புக்களும் கண்டித்து வருவதோடு தமது கரிசனையையும் வெளிப்படுத்தி நிற்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. இத்தாக்குதல்கள் நடத்தப்பட்ட விதத்தினையும் இடங்களையும் சந்தர்ப்பங்களையும் நோக்குகிறபோது உலகத்தினையே உலுப்பியெடுத்த ஒரு பெரும் மனிதப் பேரவலமாகப் பலராலும் பார்க்கப்படுகிறது.

**பகைவரையும் மன்னிக்கும் மனம்!**

இக்குண்டு வெடிப்புகளின் பின் எந்தவொரு அசம்பாவிதத்திலும் ஈடுபடாமல் மிகுந்த பொறுமையோடும் பொறுப்புணர்வோடும் கிறிஸ்தவ மக்கள் நடந்துகொண்டவிதம் உண்மையில் மலைப்பை ஏற்படுத்தும். மிகமிகத் துயரமான நேரத்திலும் உள்ளத்தைத் துவைத்தெடுக்கும் சந்தர்ப்பத்திலும் மிகுந்த பொறுமையோடும் பொறுப்போடும் செயற்பட்டுள்ளார்கள்.

இதற்கு ஓர் ஆதாரமாக கொழும்புப் பேராயர் கருதினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை இஸ்லாமிய நாடுகளின் தூதுவர்களை குண்டுவெடிப்பின் பின் சந்தித்தபோது கூறுகையில், 'எம்மீது தாக்குதல் நடத்திய தரப்பினருக்காகவும் நாம் பிரார்த்தனை செய்கிறோம்', 'இஸ்லாமிய மக்கள் மீது நாம் கைதூக்கிவிடக்கூடாது' எனவும் அவர் தெரிவித்துள்ளதாக அறியமுடிகிறது.

மேலும், மட்டக்களப்பு சீயோன் தேவாலய தலைமைப் போதகர் தம்மீது தாக்குதல் நடத்தியவர்களை மன்னிப்பதாகவும் அவர்களை நேசிப்பதாகவும் கூறியிருப்பது இங்கு ஆழ்ந்து நோக்கத்தக்கது. இத்தகைய பகைவரை மன்னிக்கும் மனப்பாங்கை, மேன்மையைக் கிறிஸ்தவ மேய்ப்பர்களின் - கிறிஸ்தவ மக்களின் பலவீனமாகப் பார்க்காமல் பார்த்துக் கொள்வது அரசினதும் சம்மந்தப்பட்டவர்களினதும் அனைத்து மக்களினதும் பொறுப்பும் கடனும் ஆகும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாதுகாப்பு ஏற்பாடுகள் அவசியமானது!**

ஆலயங்கள், கோவில்கள், விகாரைகள், பள்ளிகள் மட்டுமல்ல மக்கள் அதிகம் கூடும் பொது இடங்களான பாடசாலை, பேருந்து புகையிரத நிலையங்கள், சந்தை போன்ற இடங்களில் பாதுகாப்பு ஒழுங்குகளை இனிவரும் காலங்களில் கட்டாயமாக மேற்கொள்வது மிகமிக அவசியமானது. சந்தேகத்திற்கு இடமான நபர்கள், பொருள்கள், பொதிகள், வாகனங்கள் போன்றவற்றில் அனைவரும் விழிப்பாக இருப்பது மிகமிக இன்றியமையாதது.

மேலும், பொலிசார் இராணுவத்தினர் பாதுகாப்புக் கடமைகளை ஆற்றினாலும் ஒவ்வொரு ஆலயத்திலும் பாடசாலையிலும் அவ்வவ் இடங்களுக்குரிய வகையில் பாதுகாப்பு ஒழுங்குகளை அலட்சியம் செய்யாது மிகக் கவனமாக மேற்கொள்வது அத்தியாவசியமாகிறது என்பதை சம்மந்தப்பட்டவர்கள் உணர்ந்து செயற்படுத்த முன்வரவேண்டும்.

**சுயவிமர்சனத்திற்கு அழைப்பு!**

மேலும், நல்மனம் படைத்த முஸ்லிம்கள் இத்தாக்குதல்களால் மனவேதனையும் மனஉளைச்சலும் அடைந்திருக்கிறார்கள். அத்துடன் சிலர் இக்குண்டுத் தாக்குதல்களுக்குக் காரணமாய் இருக்கக்கூடிய காரணிகளை ஆராய்ந்து மிகவும் ஆக்கபூர்வமாகவும் ஆதாரபூர்வமாகவும் துணிவாகவும் கருத்துக்களைப் பகிர்ந்திருப்பது, மனத் தூய்மையோடும் திறந்தமனத்தோடும் இவ்விடயத்தினைப் பார்க்கிற பலருடைய கண்களைத் திறக்கும் என்றே உறுதிபட நம்பலாம்.

இப்படியான ஆழ்ந்த அர்த்தம் சேர்க்கும் பதிவுகளையே பாத்திமா மஜிதா (Fathima Majitha), ஸர்மிளா செயித் ஆகிய இரு இஸ்லாமிய சகோதரிகளின் முகநூல் பதிவுகளில் காணக்கூடியதாக இருக்கிறது.

சகோதரியான பாத்திமா மஜிதா (Fathima Majitha) அவர்கள் இதுகுறித்து விபரிக்கையில், “நடைபெற்று முடிந்த தாக்குதல்கள் அரச அதிகார சக்திகளின் துணையோடுதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெற்றுள்ளன என்பதற்கு நிறைய சாட்சியங்கள் எழுந்த வண்ணம் உள்ளன. ஆனால், அரசினை மட்டுமே நாங்கள் பொறுப்புக்கூறுவது ஒருவித தப்பித்தல் முறை. ஒருவித அச்சம் சார்ந்த முறை. தாக்குதல்களை நடத்தியவர்கள் முஸ்லிம்கள் அல்ல, அவர்கள் பயங்கரவாதிகள், அவர்களுக்கும் இஸ்லாத்திற்கும் சம்பந்தமில்லை என்று சப்பைக் கட்டுவதை நிறுத்துங்கள். எங்களை நாங்களே சுய பரிசோதனை செய்து கொள்ளாவிட்டால் எங்கேயோ போய் முட்டி மோதி விடுவோம். கிட்டத்தட்ட இரு சகாப்தங்களின் முன்னால் போய் நின்று பார்க்கின்றேன். என்னையும் என்னைச் சுற்றி இருந்தவர்களும் படித்த பாடசாலை, பல்கலைக்கழகங்கள், வேலை செய்த இடங்கள் எல்லாவற்றிலும் மனிதம் மட்டுமே இருந்தன. படிப்படியாக அரேபியக் கலாசாரம் தலைக்கு ஏறத்தொடங்கியது. முஸ்லிம், காபிர் என்ற பிரிவினைவாதப் போக்கினை இந்த ஒற்றைக் கலாசாரம் ஏற்படுத்தி விட்டது.

அன்று நாம் சாப்பிட்ட நாரிசாச் சோறு, பராத் ரொட்டி போன்ற எல்லாவற்றினையும் ஹராம் என்ற ஒற்றைக் கதவு போட்டு அடைத்து விட்டார்கள். ஒவ்வொருவரும் அடுத்த சமூகத்திலிருந்து பிரித்து விடப்பட்டுள்ளோம். நான் ஐந்து வயதாக இருக்கின்ற பொழுது எனது ஆடையைப் பற்றிக் கேள்வி எழுப்பாத மத்ரஸாக்கள் இன்று எனது எட்டு வயது மகள் கருப்பு ஹபாயாவினை அணிந்து வந்தால்தான் ஓதமுடியும் என்று சட்டம் வகுக்கின்றது. பாவாடை சட்டை தாவணி அணிந்து பாடசாலை சென்ற ராத்தா பல்கலைக்கழகம் செல்கின்ற அவளது மகளுக்கு கண்கள் இரண்டு மட்டும் தெரியும் விதமாக ஹபாயாவினை போர்த்தி அனுப்பி வைக்கின்ற சூழல். தெருவுக்குத்தெரு பள்ளிவாசல், காபிர், ஷைத்தான் என்று கதறுகின்ற ஒலி பெருக்கிகள். போதாக்குறைக்கு நோன்பு, பெருநாள் காலங்களில் பேரீச்சம் பழமும் குர்பான் இறைச்சியும் கொடுத்து இந்த அப்பாவிச்சனங்களை போட்டோ எடுக்கின்ற சகிப்புத் தன்மையற்ற வகாபிசத்தின் கொடூரங்கள். எல்லாவற்றினையும் நாங்கள் பார்த்தும் பார்க்காமலும் இருந்த இந்த நோயின் கடைசித் தருணம் தீவிரவாதமாக மாறி உயிர்களைப் பலியெடுக்கின்ற நிலைமை. இந்த குறிப்பிட்ட தீவிரவாத அமைப்பின் நடவடிக்கைகளினால் ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகமும் இக்கட்டான நிலையில் நிற்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இனிமேலாவது சவுதியின் கைக்கூலிகளான இத் தீவிரவாதப் போக்கினைக் கண்டுகொள்ளாமல் இருந்துவிடுவது முஸ்லிம் சமூகத்திற்கு மிகவும் ஆபத்தானது. ஆனால் இந்த நிலைமையை விளங்கிக்கொள்ளாது நம்மை நாமே தப்பித்துக் கொள்ளவதை விட்டு இந்தத் தீவிரவாத நோயிலிருந்து எமது தலைமுறையைக் காப்பாற்ற முனையுங்கள். எங்களைச் சுற்றி என்ன நடந்தது எப்படியெல்லாம் நாங்கள் மூளைச் சலவை செய்யப்பட்டோம் என்பதை உணருங்கள்!" என கூறியிருக்கிறார்.

அடுத்து, ஸர்மிளா செயித் என்ற சகோதரி தன் கருத்தைக் கூறுகையில், 'அரசும் மேலைத்தேயமும் இயக்கும் பொம்மைகளாக நம் இளைஞர்களை இழுத்துச் சென்ற காரணிகளைத் தேட ஏன் தயங்குகிறோம்?' எனக் கேள்வியெழுப்பும் சகோதரி பின்வருமாறு தொடர்கிறாள். "2002இல் என்று நினைவு. எங்களது ஊரில் திடீரென உருவெடுத்த ஒரு பெயர் தெரியாத அமைப்பு தொலைக்காட்சி பார்ப்பது 'ஹராம்' என்று பிரச்சாரம் செய்யத்தொடங்கியது. இந்தச் செயற்பாடு பிரச்சாரத்தோடு நின்றுவிடவில்லை. வீடு வீடாகச் சென்று அன்டனாக்களை உடைப்பது, சீடி விற்பனை செய்யும் கடை உரிமையாளர்களை எச்சரிக்கை செய்து, கடைகளை எரிப்பது என்று வன்முறையாக மாறியது. கறுப்பு அபாயாக்களையும், நீண்ட அங்கிகளையும் கொண்டுவந்து இதுதான் இஸ்லாமிய உடை என்று யாரோ சில வியாபாரிகள் அறிமுகம் செய்தார்கள். எங்கள் இறுதித் தூதர் முஹம்மத் நபி அவர்கள் வாழ்ந்த மண்ணில் பெண்கள் எல்லாம் இதைத்தான் அணிகின்றார்கள். இது எங்கள் கலாசாரம் என்று ஏற்பதற்கு பெண்களையும் பிள்ளைகளையும் பழக்கப்படுத்தினார்கள். இது பெண்களுக்குப் பாதுகாப்பான கௌரவமான உடை என்பதான உணர்வை வலிந்து உருவாக்கிப் பெண்கள் வாயாலேயே சொல்லும்படி மூளைச்சலவை நடந்தது. பாடசாலை மாணவிகளும், பல்கலைக்கழகம் செல்லும் மாணவிகளும் கறுப்பு அங்கியை மட்டுந்தான் கட்டாயமாக அணியவேண்டும் என்று வெள்ளிக்கிழமை ஜும்மாக்களில் துண்டுப்பிரசுரங்கள் விநியோகித்துப் பிரச்சாரம் செய்யப்பட்டது. இது எங்கள் ஊரில் மட்டும் நிகழ்ந்த சம்பவமில்லை. பெரும்பாலாக முஸ்லிம்கள் வாழும் எல்லா ஊரிலும் இப்படித்தான் நடந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...திடீரென்று முளைத்த சிந்தனைப் பள்ளிகளுக்கு அரபு நாடுகளிலிருந்து நிதி வசூலாகி வந்தது. வெறும் நூறு இரு நூறோ ரூபாய்களை மட்டும் நன்கொடையாக செலுத்தி தாங்கள் கற்ற குர்ஆனை மாதாந்தம் மூவாயிரம் செலுத்திக் கற்கும் நிலை உருவாக்கப்பட்டது. மதக் கல்வி அவசியமேயின்றி முன்னிறுத்தப்பட்டது, வியாபாரமானது. கிலாபத் பற்றிய எண்ணங்கள் இளைஞர்களிடையே விதைக்கப்பட்டு இந்த பூமி முஸ்லிம்களால் ஆழப்படவேண்டியது என்ற பிரம்மை திணிக்கப்பட்டது" மதத்தின் பெயராலான இத்தகைய சின்னச் சின்ன 'எக்ஸ்ட்ரீம்' (extreme) விபரங்கெட்ட செயல் பாடுகளின் ஊற்றுக்கண்களை ஆழமாக நோக்கத் தவறியதோடு, அமெரிக்காவின் செப்ரெம்பர் *11* தாக்குதலுக்குப் பின்னர் இஸ்லாமியர்களை தீவிரவாதிகளாகப் பார்க்கும் சூழ்நிலையை, இஸ்லாமோபோபியா போன்ற அரசியல்களைப் பேசுவதை மனிதாபிமானச் செயற்பாடாக கருதியவர்கள் எல்லாம்கூட இன்றைய இலங்கை முஸ்லிம்களின் அரசியல் நிலைக்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்களே.

...இஸ்லாமிய தீவிரவாதம் குறித்து பேசுகின்ற எழுதுகின்றவர்களை மேலைத்தேய கைக்கூலிகள் என்றவர்கள், உண்மையையை உரக்கப் பேசி எழுதியவர்களின் கழுத்துகள் நெரிக்கப்பட்டும், சமூக ஊடகங்களிலும், வாழ்விலும் அவமானப்படுத்தப்பட்டபோதும் மௌனித்திருந்தவர்கள்கூட இதன் பின்னால் இருக்கிறார்கள். இப்போது வெள்ளம் தலைக்கு மேல்! நாடகங்களின் அரங்குகளை மாற்றவேண்டிய தருணம். இலங்கை முஸ்லிம்களின் எதிர்வினைகளை மூன்று வகையாகப் பார்க்க முடிகின்றது. *1)* தப்பிக்கும் தந்திரம், *2)* குற்றஞ்சுமத்துதல், *3)* எதிர்காலம் குறித்த அச்சம். இலங்கை முஸ்லிம்கள் அனைவரும் தீவிரவாதத்திற்கு எதிராக அழத் தொடங்கியிருக்கி(றோம்)றார்கள். இது தப்பித்தல், அச்சம் சார்ந்தது. குண்டு வைத்தவர்கள் தீவிரவாதிகள், கொல்லப்படவேண்டியவர்கள், அவர்கள் முஸ்லிம்கள் அல்ல, இஸ்லாம் தீவிரவாத மார்க்கமல்ல என்பதெல்லாம் தப்பித்தல் மற்றும் குற்றஞ் சுமத்துதல் உளவியல் சார்ந்தவை. தீவிரவாதிகளுக்கு மதமில்லை. அவர்கள் யாராக இருந்தாலும் கொல்லப்படவேண்டும் என்று தப்பிக்க முற்படும் பச்சோந்திகளாக முஸ்லிம்கள் மாறவேண்டியது காலத்தின் தேவையாகியிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...தீவிரவாதக் கருத்துக்களுக்கு எதிராகக் கடந்த காலங்களில் எதிர்வினையாற்றி இருக்கிறோமா? என்று நீங்கள் ஒவ்வொருவரும் உங்களைக் கேளுங்கள். மௌனமாக இருந்தவர்கள்கூட தீவிரவாதத்தை ஆதரித்தவர்கள் என்பேன். சமூக ஊடகங்களில் வெளியான மத தீவிரவாத கருத்துக்களை நமக்கென்ன என்றும், யாரோ ஒருவன் உளறுகிறான் என்றும் பொறுப்பற்று இருந்த நீங்கள் இப்போது நல்லிணக்கம் பேசுகிறீர்கள். தீவிரவாதிகளைக் கொல்லவேண்டும் என்கிறீர்கள்

...முளையிலேயே கிள்ளி எறியவேண்டியதை, அதற்கான வாய்ப்புக்கள் இருந்தும் நீங்கள் செய்ய முன்வரவில்லை. கழுத்திற்கு கத்தி வந்துவிட்ட பிற்பாடே தீவிரவாதம் ஒழிக்கப்பட வேண்டும் வன்முறைகளுக்கு மார்க்கத்தில் இடமில்லை என்று கத்துகிறீர்கள். தேவைக்கு அதிகமாக சிந்தனைப் புள்ளிகள் வந்தபோது, அபாய, முகமூடிகள் வந்தபோது அதனைக் கலாசார மாற்றம் என்பதாக அங்கீகரித்தவர்கள், அவற்றை எல்லாம் நம் கைகளில் கொணர்ந்து சேர்த்த அதே மனிதர்களால் தீனுக்கான போர் நடத்தப்படும்போது தனித்து நிற்கப் பார்ப்பது அறிவு முரணில்லையா? வழக்கம்போல அரசாங்கத்தின் சதி, மேலைத்தேய சதி என்றெல்லாம் புலனாய்வு விசாரணைகளை நமக்கு நாமே செய்து திருப்திப்பட்டுக் கொள்ள விளைவதால் எவ்வளவு தூரம் நம்மை நாம் நியாயப்படுத்திக் கொள்ளமுடியும்? அரசும் மேலைத்தேயமும் இயக்கும் பொம்மைகளாக நமது இளைஞர்களை இழுத்துச் சென்ற காரணிகளைத் தேட ஏன் தயங்குகிறோம்?

...இந்தப் பதிவு உங்களில் பலருக்கு உவப்பாக இராதென்று தெரியும். எப்போதும்போல காட்டிக் கொடுப்பவள், கைக்கூலி என்று உங்கள் இயலாமைகளைக் கோபங்களாக கொட்டிவிட்டுக் கடந்துபோவீர்கள்!" எனப் பகிர்ந்திருப்பது ஆழந்த சிந்தனைக்கும் சுயவிமர்சனத்திற்கும் எதிர்கால செயற்பாட்டிற்கும் உரியது.

**ஒத்துழைக்க முன்வரவேண்டும்!**

ஐஎஸ்ஐஎஸ் தீவிரவாத அமைப்பு இஸ்லாமிய மதத்தின் பெயரால் இத்தாக்குதல்களை மேற்கொண்டிருந்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் மனிதகுலத்திற்கு எதிராக இவ்வாறான தீமைகளைச் செய்பவர்கள், மதம்பற்றி, கடவுள்பற்றி உண்மை அறிவைக் கொண்டிராதவர்களாகவே இருக்கமுடியும். சகமனிதரை மதித்து நடக்கவேண்டும் என மதங் கலவாத மனிதாபிமானம் கற்பிக்கிறபோது எப்படி மனிதரை வழிநடத்தவேண்டிய ஒருமதம் சகமனிதரைக் கொல்லத் தூண்டமுடியும்?

'மதத்தின் பெயரால் தாக்குதல் நடத்தி வன்முறைகளில் ஈடுபடும் நபர்கள் எந்தவொரு மதத்தினையும் சேர்ந்தவர்களாக இருக்கமுடியாது' என்ற கொழும்புப் பேராயர் கருதினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அவர்களின் கூற்று மேற்சொன்ன வரிகளுக்கு ஆழ்ந்த அர்த்தம் சேர்க்கிறது. அதனால், உண்மையான இஸ்லாமியர்கள் இத்தீவிரவாதச் செயலை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆகவேதான், இஸ்லாமியர்களில் பலர் இச்செயலை பகிரங்கமாகக் கண்டித்து வருகிறார்கள்.

எனினும், தங்கள் வெவ்வேறு அமைப்புக்கள் ஊடாக இரங்கற் செய்திகளையும் கண்டன அறிக்கைகளையும் வெளியிடுவதோடு நின்றுவிடாமல் தங்களிடையே இருக்கும் தீவிரவாதப் போக்குடைய அமைப்புக்களையும் குழுக்களையும் நபர்களையும் அடையாளங்கண்டு நடவடிக்கை எடுப்பதற்கு இஸ்லாமிய மதத்தினர் முன்வரவேண்டும். இல்லையேல், இத்துயரம் தொடர்வதற்கும் இனங்களுக்கிடையில் விரிசல்கள் மேலும் மேலும் பலுகிப்பெருகிப் பல விபரீதங்கள் ஏற்படவும் வழிவகுக்கும்.

மதங்களுக்கிடையிலும் இனங்களுக்கிடையிலும் புரிந்துணர்வை ஏற்படுத்தி அனைத்து மக்களும் இணைந்து வாழக்கூடிய சூழலை மீண்டும் ஏற்படுத்த எம் முஸ்லிம் சகோதரர்கள் தயவாக ஒத்துழைக்கவேண்டும். 2019.04.27அன்று நாளிதழ் ஒன்றின் ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிட்டது இங்கு குறிப்பிட்டுக் கூறக்கூடியது: "நாட்டில் ஏற்பட்டுள்ள பயங்கரமான நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து, சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமாக இருந்தால், இதுவிடயத்தில் கணிசமான பங்களிப்பை முஸ்லிம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரர்களே வழங்க வேண்டும். ஆகையால், முஸ்லிம் மக்களின் ஒத்துழைப்பைப் பெறுவதுபற்றி சிந்திப்பதே பொருத்தமானதாகும்..." என்கிற ஆலோசனையும் இங்கு நோக்கத்தக்கது.

**அண்மைக்கால அற்புதமான முன்னுதாரணம் ரெஹனா ஜப்பாரி!**

பாலியல் வன்கொடுமையைச் செய்யவந்த உளவுத் துறை அதிகாரியைக் கொலை செய்தார் என்று குற்றம் சுமத்தப்பட்ட ஈரானைச் சேர்ந்த இருபத்தாறு வயதுநிரம்பிய இளம் பெண்ணான ரெஹனா ஜப்பாரி, அநியாயமாகத் தீர்ப்பிடப்பட்டு பல சர்வதேச அமைப்புக்களின் ஆலோசனை களை எல்லாம் புறந்தள்ளி 2014.10.18இல் தூக்குத்தண்டனை நிறைவேற்றப்பட்டது.

அவள் கொல்லப்படுவதற்கு முன் தன் தாயான சோலே என்பவருக்கு தன் குரலால் பதிப்பித்த செய்தி ஒன்றை அனுப்பியிருந்தாள். மிகவும் இறுக்கமான ஓர் இஸ்லாமிய சமூக சூழலில் வாழ்ந்துகொண்டிருந்த இருபத்தாறே வயதான இளம் பெண்ணின் வீரமிக்க துணிச்சலும், அஞ்சாத உளப்பலமும், அசைக்க முடியாத ஆன்ம பலமும், மிக உச்சமான இறை நம்பிக்கையும் இதுவரையில் நான் கேட்டிராத ஓர் இளம்பெண்ணின் வாக்கு மூலமாகத் திகழ்கிறது. ரெஹனா ஜப்பாரி, தன் தாய்க்கு அனுப்பிய அச்செய்தியில் ஒருசில முக்கியமான வரிகளை மட்டும் இங்கு நோக்குவோம்.

"அன்புத் தாய் சோலே! குற்றம் இழைத்ததாகக் குற்றம்சாட்டப்பட்ட நான் சட்டப்படி அதற்குப் பதிலடியாகத் தண்டனையை அநுபவிக்க வேண்டிய கட்டத்தில் இருக்கிறேன்..."என ஆரம்பித்தவள் ஓரிடத்தில், "...சாவு ஒன்றே வாழ்க்கையின் முடிவு அல்ல என்பதை நீயும் அறிவாய்..." எனக் குறிப்பிடுபவள், "...இறப்பதற்கு முன்னால் உன்னிடம் ஒன்றை யாசிக்கிறேன்!... நீ எனக்காக நீதிபதிகளிடம் பிச்சை கேட்காதே என்று கூறிய நானே சொல்கிறேன். இப்போது நீ எனக்காக நீதிபதிகளிடம் பிச்சை கேட்டாலும் தவறில்லை... அம்மா! நான் வெறும் கழிவாக இந்தப் பூமியில் விழ விரும்பவில்லை. என்னுடைய அழகிய கண்களும், தூய இதயமும் இந்த மண்ணோடு மண்ணாக வீணாகப் போய்விடக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடாது. என்னைத் தூக்கில் போட்டதும் என்னுடைய கண்கள், இதயம், சிறுநீரகம், எலும்புகள்: இன்னும் என்னவெல்லாம் என் உடலிலிருந்து எடுத்து மற்றவர்களுக்குப் பயன்படுத்த முடியுமோ அதையெல்லாம் தேவைப்படுபவர்கள் எடுத்துக் கொள்ளட்டும். நான்தான் கொடுத்தேன் என்று யாருக்கும் தெரியவேண்டாம்...

"கடவுளின் அரசில் நான் அந்த இன்ஸ்பெக்டர் சாம்லு, அந்த நீதிபதி, அவர்கள் மீது வழக்குத் தொடுப்பேன். இன்ஸ்பெக்ரர் சாம்லு, அந்த நீதிபதி, உச்ச நீதிமன்ற நீதிபதிகள் எல்லாம் பதில் சொல்லியாக வேண்டும். டாக்ரர் ஃபர்வான்டி, காசிம் சாபானி எல்லோர் மீதும் கடவுளின் நியாய ஸ்தலத்தில் வழக்குத் தொடுப்பேன்..." என்பவளின் மன ஓர்மத்தையும், ஆன்மீக வாஞ்சையையும், இறை நம்பிக்கையையும் பாருங்கள்! ரேஹனா ஜப்பாரி ஒரு புனிதவதி என்பது இதிலிருந்து புலனாகிறது.

இப்படிப்பட்ட புனிதவதியான இஸ்லாமிய இளம் பெண்ணும் நாம் வாழும் காலத்திலேயே வாழ்ந்திருக்கிறாள் என்பதை எண்ணுகிறபோது கண்களில் கண்ணீர் ததும்புவதை தவிர்க்கமுடியாது போகிறது! இன்றைய பயங்கரமான சூழலில் எல்லாருக்குமே ரேஹனா ஜப்பாரி எல்லாவகையிலும் எல்லாவிதத்திலும் முன்னுதாரணமாகிறாள்! எவ்வித இலக்கும் இல்லாமல் அநியாயமாகத் தங்களையும் அழித்து மற்றவர்களையும் அழிக்கநினைக்கும் ஒழிக்கநிற்கும் மனிதர்களுக்கு இங்கு ஒரு புண்ணியவதி, அநியாயமாகத் தீர்ப்பிடப்பட்டு கொல்லப்படும் நிலையிலும் தன் உடல் உறுப்புக்களைத் தாராள மனத்துடன் தானம் செய்கிறாள்!

**ஆன்மீகத்தில் பயங்கரவாதம் ஒரு பாவச்செயல்!**

நிறைவாக, தீவிரவாதம் எத்துறையிலும் ஆபத்தானதே! அதிலும், ஆன்மீகத்தில் தீவிரவாதத்தைக் கடந்து பயங்கரவாதம் என்பது ஒரு பெரும் பாவச்செயல் என்பதை உண்மையான ஆன்மீகத்தைப் பின்பற்றுபவர்கள் சந்தேகத்திற்கு இடமின்றி உறுதிப்படுத்துவார்கள்.

இலங்கைத் தீவினைப் பொறுத்தவரையில் இனத் தீவிரவாதமும் மதத் தீவிரவாதமும் நாட்டின் அழிவுகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் செல்வாக்குச் செலுத்தியிருக்கின்றன என்பதை கடந்தகால ஐம்பது, அறுபது ஆண்டுகால வரலாறு நமக்குக் கற்றுத்தரும் பெரும் பட்டறிவாகும்.

ஆகவே, இனத் தீவிரவாதத்தையும் மதத் தீவிர வாதத்தையும் விட்டொழித்து, எப்போது நடுவு நிலைமையோடு இனம் மதம் செல்வாக்குச் செலுத்த முற்படுகிறதோ அப்போதுதான் இந்நாடு மீண்டெழ வாய்ப்புண்டு!

“இவ்வாறான தீவிரவாத இயக்கங்கள் உருவாவதற்கு நாமும் ஒரு வகையில் காரணம் எனவும் சமூகத்தில் காணப்படும் பலவேறு ஏற்றத்தாழ்வு நிலைமைகளே இந்தத் தீவிரவாதத்தைத் தூண்டுகின்றது!” என கருதினால் மேதகு மல்கம் ரஞ்சித் ஆண்டகை இஸ்லாமிய நாடுகளின் தூது வர்களைச் சந்தித்தபோது குறிப்பிட்டது ஒட்டுமொத்த இலங்கை யர்களின் ஆழந்த சிந்தனைக்கும் செயற்பாட்டிற்கும் உரியது.

இவ்வுண்மையை எப்போது நம் மதத் தலைவர்களும் அதிகாரத்திற்கு வருகிற அரசுகளும் மக்களின் அரசியல் பிரதிநிதிகளும் பொதுமக்களும் ஏற்றுக்கொண்டு வாழத் தலைப்படுகிறார்களோ அப்போதுதான் இந்நாடு உருப்படும்.

இனத்தீவிரவாதமும் மதத்தீவிரவாதமும் ஒழிந்தால் நாடு மீண்டெழ வாய்ப்புண்டு. அதை வளர்த்தால் அழகான நம் நாடும் அப்பாவிகளான நம் இளம் தலைமுறையும் வாழும் உரிமைக்கான பெரும் ஆபத்தை எதிர்கொள்ளும் என்பதை ஆழந்த கவலையோடும் மிகுந்த மனவேதனையோடும் கோடிட்டுக் காட்டவேண்டியிருக்கிறது.

**உதயன், 05.05.2019**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 82 உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்புப் பின்னணியில் நடப்பதென்ன!

**கொஞ்சமேனும் மனிதநேயத்துடன் நடப்பார்களா?**

அரசியல்வாதிகள், அமைச்சர்கள் குறித்த பார்வையைக் கவிஞர் வாலி 'ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது! ' என்ற கவிதைத் தலைப்பில் ஒருதடவை எழுதியிருந்தார். "மந்திரியான பிறகு சொந்த ஊருக்கு வந்தேன், பழைய தமிழாசிரியரைப் பார்க்க நேர்ந்தது. 'அய்யா!-என்னை உருப்படாதவன், உதவாக்கரை, ஊர்சுத்தி- என்றெல்லாம்... அப்போது சொன்னீர்களே!' என்றேன். தமிழாசிரியர் தயங்காமல் பேசினார்: 'இப்போதும் அதையேதான் சொல்கிறேன்' என்று." கவிஞர் வாலியின் அவதானிப்பு மக்களின் அரசியல் பிரதிநிதிகளாக விளங்கும் நம்முடைய இன்றைய பெரும்பாலான அரசியல் தலைவர்களுக்கு மிகப் பொருத்தமானதாகவே தெரிகிறது.

உயிர்த்த ஞாயிறன்று (2019.04.21) நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டும் படுகாயமடைந்தும், இன்னும் பலநூறுபேர் பல்வேறு துன்ப துயரங்களுக்கு உள்ளாகி வாழ்கின்ற நிலையிலும், ஏராளமான பொருள் சேதங்கள் பொருளாதார பின்னடைவுகள் ஏற்படுத்தப்பட்ட சூழலிலும், தங்களின் அரசியல் காய்நகர்த்தல்களையே நிகழ்ச்சி நிரலாகக் கொண்டு செயற்படும் நம் அரசியல்வாதிகளுக்கு கொஞ்ச மேனும் மனிதநேயமும் மனிதாபிமானமும் இருக்கிறதா என்ற கேள்வி பலருடைய மனங்களில் எழுந்த வண்ணமாக இருக்கிறது.

காரணம், நடந்துமுடிந்த தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை வைத்துக்கொண்டு நம் நாட்டு அரசியல் வாதிகள் செய்கின்ற அரசியல், ஏறக்குறைய குண்டுத் தாக்குதல்களுக்குச் சமமானது போன்றே தோன்றுகிறது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சட்டத்திற்கு விதிவிலக்கானவர்களா?**

ஐஎஸ்ஐஎஸ் பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடைய தேசிய தௌஹீத் ஜமாத் தீவிரவாத அமைப்பிற்கு ஆதரவாக இருந்தவர்களென சந்தேகிக்கப்படும் அரசியல்வாதிகளும் முன்னாள் அரச உயர் அதிகாரிகளும் பல்வேறுபட்ட தரப்பினரால் சுட்டிக்காட்டப்பட்டும் அவர்களுக்கெதிரான விசாரணைகள் இதுவரையில் முன்னெடுக்கப்படவில்லை என்றால் இந்நாட்டின் சட்டதிட்டங்கள் எந்நிலையில் இருக்கிறது என்பதை யாரும் இலகுவாகப் புரிந்துகொள்ளலாம்!

இந்நிலையானது, அரசியல்வாதிகளும் அரச உயர் அதிகாரிகளும் அவர்களைச் சார்ந்தவர்களும் இந்நாட்டின் சட்டத்திற்கு புறம்பானவர்களாக - அப்பாற்பட்டவர்களாக - விதிவிலக்கானவர்களாக நோக்கப்படுவதாகவே எடுத்துக் கொள்ளவேண்டி இருக்கிறது.

இவ்வாறான போக்கு, நாட்டில் சட்டம் ஒழுங்கு சீராகவும் சாதாரண சுமூகநிலை உருவாகி நாடு முன்னேறுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்பதையும் மறைமுகமாகக் கோடிட்டுக் காட்டுவதாகவே தெரிகிறது.

பாதுகாப்பு என்ற போர்வையில் சாதாரண அப்பாவி மக்களை ஒடுக்குவது, அவர்கள்மீது மட்டுமே சட்டத்தினையும் ஒழுங்கினையும் அமுல்படுத்துவது போன்றவற்றின் ஊடாக இந்நாட்டில் பாதுகாப்பை உறுதிப்படுத்தலாம் - அமைதியை ஏற்படுத்தலாம் என ஆட்சியாளர்கள் சிந்தித்து செயற்படுவார்களேயானால், அது அவலை நினைத்து உரலை இடித்த கதையாகிவிடும்.

**ஆணைக்குழுவின் ஆய்வு முடிவுகள் அமுலாகுமா?**

ஐஎஸ்ஐஎஸ் அமைப்பினரின் தாக்குதல் நடைபெறும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டும் அதனை நாட்டு மக்களுக்குத் தெரிவிக்காமல், அத்தாக்குதல்களை எதிர்கொள்ளத் தேவை யான முன்னாயத்தங்களை மேற்கொள்ளாமல் இருந்த வர்களுக்கு எதிராக முழுமையான விசாரணை இடம் பெற்றதாகத் தகவல்கள் இல்லை என்றே தெரிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படி விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா என்பது கேள்வியே! குண்டுவெடிப்புக்கள் தொடர்பாக ஆராய ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு இவர்கள் பற்றியும் ஆராயுமா? அப்படி ஆராய்ந்தால், அதிலிருந்து பெறப்படும் முடிவுகளின்படி அரசினால் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமா?

இதுவரையில், வெவ்வேறு சம்பவங்களை ஆராய நிய மிக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் வரலாற்றினைப் பார்க்கும் போது அவற்றின் ஊடாக அடைந்த பெறுபேறுகள் மிகமிகச் சொற்பமே.

வெறுமனே, அநுதாபச் செய்திகள் வெளியிடுவதோடும் கண்டனங்களைத் தெரிவிப்பதோடும் இனிமேல் இவ்வாறு நடைபெறாமல் பார்க்கவேண்டும் என வாக்குறுதி வழங்குவ தோடும் நிவாரணங்கள் கொடுப்பதோடும் உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற மனிதப் பேரவலம் குறித்த பொறுப்புக்கூறல் புதைக்கப்படலாம் - புதைக்கப்பட்டுப் போயிற்றா?

**அரசியல்வாதிகளின் அடுத்தகட்ட நடவடிக்கை!**

கடந்த ஆண்டு ஒக்ரோபரில் நாடாளுமன்றினைக் கலைத்தபோது பதவிகள் பறிபோய்விடும் என்ற முக்கிய காரணத்தினால் நீதிமன்றம்வரை சென்று வழக்குகளுக்குமேல் வழக்குகளைத் தாக்கல் செய்தவர்கள் இப்போது எங்கே போய்விட்டார்கள்? நடந்தேறிய இப்பெரும் மனிதப் பேரவலம் குறித்த அவர்களின் அக்கறை எந்தளவில் இருக்கிறது? இருநூற்று ஐம்பதுக்கும் மேற்பட்ட உயிர்கள் பறிக்கப் பட்டு ஐந்நூறுக்கும் மேற்பட்டோர் படுகாயங்களுக்கு உள்ளாகியிருக்கும் நிலையில், மேலும் குண்டுகள் வெடிக்கும் எனக் குண்டுப்புரளிகளையும் எச்சரிக்கைகளையும் விடுத்த வண்ணமாக இருக்கும் அரசியல்வாதிகளின் அடுத்தகட்ட நடவடிக்கையும் நகர்வும் தேர்தலை நோக்கியிருப்பதாகவே தெரிகிறது.

நடந்தேறிய குண்டுத் தாக்குதல்களை அரசியலாக்கி அதன்வழியாக வாக்குகளைப் பெற்று ஆட்சியைப் பிடிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறார்கள் என்பது அவர்களின் கூற்றுக்களில் இருந்தே வெளிப்படுகிறது.

**வவுணதீவு விசாரணைபோல் எத்தனை எத்தனை!**

மட்டக்களப்பு வவுணதீவில் கடந்த ஆண்டின் இறுதிப் பகுதியில் அநியாயமாகக் கொலை செய்யப்பட்ட இரண்டு பொலிசாரின் விசாரணையை மேற்கொள்ள விசேட விசாரணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டன. இத்தனை உளவுப்பிரிவினரும் பொலிசாரும் இராணுவத்தினரும் கொலையாளிகள் எங்கோ இருக்க இக்கொலையில் எவ்வித தொடர்பும் இல்லாத ஒருவர்மீது பழிசுமத்தி சிறையில் அடைத்தது எவ்வகையில் நியாயமானது? இவர்களின் புலனாய்வு விசாரணையை என்னவென்பது?

கைதுசெய்யப்பட்ட முன்னாள் போராளி சுமார் ஐந்து மாதங்களாக சிறைச்சாலையில் அடைத்து வைக்கப் பட்டதற்கும் இவனின் குடும்பம் எதிர்கொண்ட துயரங் களுக்கும் யார் பொறுப்புக்கூறப் போகிறார்கள்? இத்துயரச் சம்பவத்தினைப் போல் இன்னும் எத்தனை எத்தனை இடம்பெற்றுள்ளதோ, யார் அறிவார்?

உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புக்களின் பின் பாதுகாப்பு ஏற்பாடுகள், அவை தொடர்பான விசாரணைகளில் திருப்தியில்லை எனக் கொழும்புப் பேராயர் கருதினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கூறியதோடு அல்லாமல் மூன்று கிழமைகள் கடந்தும் கத்தோலிக்கப் பாடசாலைகள் ஆரம்பிக்காத சூழ்நிலையில் மாணவர்களின், பொதுமக்களின் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து உண்மையான கரிசனையை ஆட்சியாளர்கள் கொண்டிருக்கிறார்களா என்பதும் ஒரு கேள்வியே.

**அரசிற்கு அடித்ததா அதிஸ்ரம்?**

உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புக்களைக் காரணமாக வைத்து வடக்குக் கிழக்கு மாகாணங்களைத் தன் பிடிக்குள் வைத்திருப்பதற்கு அரசு முனைகிறதா என்ற கேள்வி வடக்குக் கிழக்கு மாகாணங்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் இராணுவச் சோதனைச் சாவடிகளையும் இராணுவப் பிரசன்னத்தையும் பார்க்கிறபோது புலப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியே, பயங்கரவாதிகளை ஒழிக்கும் பட(ல)த்தில் அப்படியே படைகளை வடக்குக் கிழக்கில் நிரந்தரமாக வைத்திருப்பதுதான் அரசின் நோக்கமா என்ற நியாயமான சந்தேகமும் எழுகிறது.

தமிழர் தாயகத்தில் இராணுவத்தினரை நிரந்தரமாக நிலைநிறுத்துவதற்கு ஐஎஸ்ஐஎஸ் அமைப்பினரை அநுசரணையாகக் கொண்டு தௌஹீத் ஜமாத் அமைப்பினர் மேற்கொண்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் இலங்கை அரசிற்கு அதிஸ்ரம் அடித்ததுபோல் ஆகியிருக்கிறது!

**அடக்கியாள நினைக்கிறதா ஆளுந்தரப்பு?**

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களைத் தொடர்ந்து இலங்கையில் சிறுபான்மையினராகிய முஸ்லிம்களும், தமிழர்களும் பாதிக்கப்படுகின்றமை உறுதி.

எவ்வாறெனில், 1980களிலிருந்து 2009வரை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலான போர் முடிந்து பத்து ஆண்டுகள் கடந்த நிலையிலும் தமிழர்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கான தீர்வு தொடர்பான விடயங்களில் அங்குலம்கூட நகர்த்தப்படவில்லை என்பதே உண்மை.

இந்நிலையில் இடம்பெற்ற குண்டுவெடிப்புக்களை வைத்துக்கொண்டு முஸ்லிம்களோடு தமிழர்களையும் ஒடுக்கலாம் என ஆளும்தரப்பு நினைக்கிறதாகத் தெரிகிறது. அதன் வெளிப்பாடுதான் யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் கைதும் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் குண்டுப் புரளியும் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் மிகையான இராணுவ சோதனைச் சாவடிகளும் ஆகும்.

மேலும், அடுத்த நான்கு ஐந்து ஆண்டுகளுக்குப் போர்க்கால பாதுகாப்பு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படவேண்டும் என முன்னாள் தளபதிகள் அண்மையில் கருத்து வெளியிட்டியிருப்பது மேற்சொன்ன யூகத்தை ஐயம்திரிபட உறுதிப்படுத்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே, நாட்டின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு ஜனநாயக - அரசியல் தீர்வைக்காணாமல் தமது இராணுவ ஆளுகையால் - பலத்தால் நாட்டின் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தலாம் எனச் செயற்படும் அரசு, தான் இழைத்துக் கொண்டிருக்கும் தவறுக்கு மீண்டும் ஒருநாள் அதற்கான விலையைக் கொடுத்தே ஆகவேண்டும்!

அவ்வாறான ஒரு நிலையேற்பட்டால், இலங்கைபோன்ற ஒரு சிறிய நாட்டிற்கு ஈடுசெய்யமுடியாத - மீண்டெழ முடியாத ஒரு பெரும் இழப்பாகவே அது மாறும்!

**ஒருவரைக்கொண்டு மற்றவரை!**

கடந்த முப்பது ஆண்டுப் போர்க்காலத்தில் முஸ்லிம் களைக் கொண்டு தமிழர்களை கண்காணித்துக் கட்டுப்படுத்திய பேரினவாத அரசு, உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்களின் பின்னர் தமிழர்களைக்கொண்டு முஸ்லிம்களைக் குறிவைக்க வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளதுபோல் தோன்றுகிறது.

இதன் முன்மொழிவாகத்தான் முன்னாள் போராளிகளின் ஆலோசனைகள் பெறப்பட்டு அவர்களை மீண்டும் இணைத்துக் கொள்வதுபற்றி ஆராயப்படுகின்ற ஒரு முயற்சி. இக்கபடத்தனத்தை இலங்கை அரசு கைவிடவேண்டும்! ஏனெனில், பிரித்தாளும் நிலையால் இனங்களுக்கிடையில் இன்னுமின்னும் விரிசல்கள் ஏற்படுமே தவிர இணைப்பு ஏற்படாது.

எனவேதான், இந்நாட்டின் சிறுபான்மை இனங்களான தமிழர்களும் முஸ்லிம்களும் ஒன்றுபட்டிருக்க வேண்டிய கட்டாயத்தேவை மீண்டும் எழுந்திருக்கிறது. ஏனெனில், தேர்தல் வெற்றிகளுக்கு அப்பால் சிறுபான்மையினர் இம்மண்ணில் மாண்புடன் வாழவும் தம் அடிப்படை உரிமைகளைப் பெறவும் சேர்ந்து உழைக்கவேண்டியும் - இணைந்து பயணிக்கவேண்டியும் இருக்கிறது.

**'வெளியேறு' – 'வேண்டும்'!**

இராணுவம் வேண்டாம் *என* இராணுவத்திலிருந்து விலகியிருந்த மக்கள் உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் இராணுவத்தை உதவிக்கு அழைக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். இது, ஐஎஸ்ஐஎஸ் தீவிரவாத அமைப்பினரால் அரசுக்குக் கிடைத்த ஒரு பெரும் சன்மானமாகும்!

இந்நிலையைத் தக்கவைப்பதன் வழியாக வடக்குக் கிழக்கு மாகாணங்களை இராணுவத்தின் நிரந்தர வதிவிடமாக மாற்றுவது ஏறக்குறைய நிச்சயமான ஒன்றாக மாறிவருகிறது.

இனி, அமெரிக்கா என்றால் என்ன, ஐக்கிய நாடுகளின் பேரவையென்றால் என்ன எதற்கும் இலங்கை அரசு அஞ்சவேண்டியதில்லை - அஞ்சப்போவதுமில்லை! அப்படி எவராவது நெருக்கடி கொடுத்தால் சில குண்டுகளைக் கைப்பற்றி அல்லது வெடிக்கவைத்து வடக்குக் கிழக்கில் இராணுவத்தை நிலைகொள்ளச் செய்யும் வேலைத்திட்டத்தினை அரசு உறுதிப்படுத்திக்கொள்ளும்!

**இனமத ஒற்றுமையும் சகவாழ்வும்**

எது எவ்வாறு இருப்பினும் இக்குண்டுவெடிப்புக்களால் முழு நாடும் சமூக, பொருளாதார, இனமத நல்லிணக்க செயற்பாடுகளில் பல்வேறுபட்ட பாரிய பாதிப்புக்களுக்கும் பின்னடைவுகளுக்கும் உள்ளாகினாலும் மிக மோசமான பாதிப்புக்களை அன்றாடம் அனுபவிப்பவர்கள் சிறுபான்மை யினராகிய முஸ்லிம்களும் தமிழர்களுமே!

ஏனெனில், தமிழர்களைப் பொறுத்தவரையில் அவர்களின் நீண்ட நெடிய தமிழர் தாயகத்தில் சுய ஆட்சிக் கான ஏறத்தாள முப்பது ஆண்டுகால ஆயுதவழிப் போராட்டம் முடிவுக்கு வந்து பத்தாண்டுகள் கடந்த நிலையில் எதுவும் அசையாத நிலையில் நிர்க்கதி அடைந்து நிற்கிறது!

முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் அவர்களின் சமூக பொருளாதார வளர்ச்சியில் பெரும் எதிர்மறைத் தாக்கத்தை - பாதிப்பை இக்குண்டுவெடிப்புக்களின் எதிர்வினை ஏற்படுத்தப்போகிறது என்பதை சிலாபம், குளியாப்பிட்டிய போன்ற இடங்களில் முஸ்லிம் சகோதரர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வன்முறைகளில் இருந்து புரிந்து கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், உயிர்ப்பு ஞாயிறு குண்டுவெடிப்புக்களைப் பயன்படுத்திப் பலரும் அடுத்தடுத்த தேர்தல்களிலும் அன்றாட அலுவல்களிலும் அரசியலை நடத்தப்போவதும் சர்வநிச்சயம்!

இந்நிலையை மாற்றியமைக்க ஆக்கபூர்வமான வேலைத் திட்டங்களைப் பல்வேறு மட்டங்களில் குறிப்பாக பாடசாலை மாணவர்களுக்கிடையில் அரசும், மத நிறுவனங்களும், உள்நாட்டு வெளிநாட்டு சமூக அமைப்புக்களும் மிகப் பாரிய அளவில் மேற்கொண்டாலேதான் ஓரளவிற்கேனும் நாட்டில் சுமுக நிலைமைகளைப் படிப்படியாக ஏற்படுத்த வாய்ப்புக்கள் உண்டு. மாறாக, எதிர்வினை தொடர்ந்தால் இந்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் இனமத ஒற்றுமைக்கும் யதார்த்த வாழ்விற்கும் பெரும் குந்தகம் ஏற்படும் என்பதே உண்மையாகும்.

**உதயன், 16.06.2019**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"செ. அன்புராசா அடிகளாரின் இந்த நூலும், அதிர்வுகள்-01, அதிர்வுகள்-02 ஆகிய நூல்களும் சமூகநலன் பற்றிய அக்கறையோடும் சொந்த மண்பற்றிய நேசிப்போடும் எழுதப்பட்ட கட்டுரை களாகும். இவை, சமுதாயம் என்னும் தளத்தில் நின்று மானிடத்தைப் பலகோணங்களில் நோக்கிப் புனையப்பட்டவை. ஆசிரியரது படைப்பாற்றல் பற்றியும் இங்கு குறிப்பிடுதல் வேண்டும். நல்ல கருத்துக்களைப் பிரதிபலிப்பதால் ஒரு படைப்பு தரமாகிவிடுவதில்லை. நல்ல கருத்தை நல்ல கலையழகோடு பிரதிபலிப்பதுதான் நல்ல கட்டுரை. ஆசிரியது வெளியீட்டு முறைமை சிறப்பானது. ஆற்றொழுக்குப் போன்ற மொழிநடை, கலைத்துவமான உவமைகள், கருத்துச் செறிவு, வன்மையான முனைப்புடன்கூடிய இடித்துரைப்பு அரசியல், சிந்தித்துப் புரிந்து கொள்ளவேண்டிய தத்துவங்கள், பொருத்தமான உபகதைகள் போன்றவை இவரது கட்டுரைகளுக்குச் சிறப்புச் சேர்க்கின்றன".

**தி. ஞானசேகரன்**
ஆசிரியர், ஞானம்

## ஆசிரியரின் ஏனைய நூல்கள்

மறைப்பணி புரிந்த மாமேதை (2001), காலத்தின் பதிவுகள் (2002), சுனாமி சொல்லாத சோகங்கள் (2005), நம்பிக்கையின் பாதையில் (2005), மன்னார் மாதோட்டக் கத்தோலிக்க நாடகங்கள் (2007), லூர்து - நம்பிக்கை தரும் நகர் (2009), திருப்பத்திற்கான தேடல்கள் (2013), அதிர்வுகள்-01 (2014), சிறகடிக்கும் சிட்டுக்கள் (2016), வாழத்துடிக்கும் வடலிகள் (2017), மனுவுக்கு மனு ! (2018), அம்மாக் கோழியும் அப்பாச் சேவலும் (2018), அதிர்வுகள்-02 (2018), Mother Hen and Father Cock (2018), பாதுகாத்துக் கொள்வோம் (2019), கொடுத்து மகிழ்வோம் (2019), The Secret of Happiness (2019), Be Safe (2019), கொரோனா ஊரடங்கு: நானும் என்னூர் நாய்களும் (2020), அண்ணன் ஆமையும் தம்பி முயலும் (2020), Brother Turtle and Brother Rabbit (2020).

முருங்கன் முத்தமிழ்க் கலாமன்றம்

விலை ரூபா: 300.00

9789554609129

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org